கல்கி

...வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



"லுத்தாயா
கங்கு கப்பா!"

LKI • 28.03.2010 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



ந்திரா பார்த்தசாரதி
எழுதும்
ளைமைப் பாலம்!

மலும் 4 புதிய
பகுதிகள்



ஜாலி
ஸ்பெஷல்


கல்கி
18.04.2010
கல்விக்கான தகவல்களுடன்
சித்திரைச் சிறப்பிதழ்...
கல்வி ஸ்பெஷலாய்...
படிக்க... வியக்க...
நீங்கள் அதிகம் அறிமுகமில்லாத படிப்பைப் படித்துச் சாதனை படைத்தவரா?
'புதுசா படிச்சேன்... பெரிசா ஜெயிச்சேன்'னு உங்க அனுபவத்தைச் சொல்லத் தோணுதா?
புகைப்படத்தோடு எழுதி அனுப்புங்கள்... உங்கள் புகழை உலகம் முழுக்கப் பரப்புங்கள்!
அனுப்பவேண்டிய முகவரி:
'புதுசா படிச்சேன் பெரிசா ஜெயிச்சேன்'
கல்கி வார இதழ்
47-NP, ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை-32.
கடைசி தேதி: 01.04.2010
...தவற விடாதீங்க!

நந்தகி

அறையெங்கும் நிறைந்து கிடக்கும் பூங்கொத்துகள். அரைநொடிக் கொருமுறை சிணுங்கும் செல்ஃபோன் வாழ்த்துகள். பட்டு நகரம் காஞ்சி புரம் தமிழ் சினிமாவுக்குத் தந்த இனிப்புவரம் நந்தகி. பஞ்சாப் கோதுமை கலரே வேண்டுமென அடம் பிடிக்கும் ரசிகர்களுக்கு, மாநிறத்தில் ஒரு மாதுளம் பூவை தமிழ் சினிமாவுக்குத் தந்த மீரா கதிரவனைப் பாராட்டலாம். நந்தகி நவில்கிறார்:

''பட்டு நெய்யும் காஞ்சிபுரம்தான் சொந்த ஊர். காஞ்சிபுரத்திலுள்ள எஸ்.எஸ்.கே.வி. சங்கராச்சாரியாரோட ஸ்கூலில் +2வரை படித்தேன். ஸ்கூல்ல படிக்கும்போது கிளாஸிக், வெஸ்டன் டான்ஸெல்லாம் கத்துக்கிட்டேன்.

மின்மினிப் பூச்சியைப் பிடிச்சுக் கண்ணாடி பாட்டிலில் போட்டு ராத்திரி முழுக்க ரசிச்சா ஜாலி!

ஒருமுறை காஞ்சி காமாட்சியம்மன் கோயிலுக் குப் போயிருந்தேன். அப்போ எதேச்சையாய் என்னைப் பார்த்த இயக்குனர் மீரா கதிரவன் 'என் படத்தில் நடிக்கிறீங்களா'ன்னு கேட்டார். வீட்டில் அப்பா வும், அம்மாவும் 'தடா' போட்டார்கள். விடாமல் போராடி வாய்ப்பைப் பெற்றேன்.

ட்ரெய்லர் ஷூட் பண்றதுக்காகத் தென்காசி போயிருந் தோம். சினிமான்னா மேக்கப் நெறையப் போடுவாங்க, என்னை நல்லா அழகா காட்டுவாங்கன்னு நெனைச்சேன். மேக்கப் போட்டப்புறம் கண் ணாடியைப் பார்த்த எனக்கு அழுகையே வந்திருச்சு. கட்டக்கரையோன்னு மேக்கப் போட்டிருந்தாங்க. 'அம்மா எனக்கு இந்தப் படமே வேண்டாம், வா ஊருக்குப் போகலாம்'னு கூப்பிட்டேன். ஆனா மீரா கதிரவன், 'நீ நடிச்சா நல்லாயிருக்கும், நீ நல்லா நடிப்பே'ன்னு சொன்னார். வெயிலில் காயவெச்செல்லாம் வேலை வாங்கினார். இப்ப கிடைக்கும் பாராட்டு களைப் பார்க்கும்போது பட்ட கஷ்டம் வீண் போகலைன்னு புரியுது.

'அவள் பெயர் தமிழரசி' படத்தில வர்றா மாதிரியே மின்மினிப்

அழ வைத்த மேக்அப்!



பூச்சியைப் பிடிச்சுக் கண்ணாடி பாட்டிலில் போட்டுப் பார்த்து சந்தோஷப்பட்ட பால்ய வயதை எப்படி மறக்கமுடியும்? 'அருந் ததி' படத்துல அனுஷ்கா, 'சந்திரமுகி' படத்துல ஜோதிகா, 'பூ' படத்துல பார்வதி பண்ணின ரோல்ஸ் மாதிரி அமைஞ்சா கண் டிப்பா உடனே ஏத்துக்குவேன். 'கோவா' படத்துல சினேகா மாதிரி, அளவாக மட்டுமே கிளாமர் ஒத்துக்குவேன். எதுக்கும் ஒரு எல்லை இருக்கல்லவா? நிறையப் பட வாய்ப்புகள் வருது. இன்னும் எதுவும் கமிட் பண்ணிக் கலை. நல்ல ரோலுக்காக வெயிட் பண்றேன்.'' - **பொள்ளாச்சி ராஜ்குமார்**

படம்: வள்ளியூர் குணா



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : **044 - 4343 8888**
தொலைநகல் : **044 - 4343 8899**

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com


இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : **ரூ.500/-**
வெளிநாடு : **ரூ.3,800/-**

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

மனுஷங்க துக்கத்துக்குக் காரணம், ஆசை, பாலியல், பொருளாதாரம், ஆதிக்கப் புத்தி, கல்வி அறிவின்மை இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு தீர்வு சொல்றாங்களேன்னு பார்த்தா... அட! ஜாலிக்கான காரணமும் ஒரே மாதிரி இல்லீங்க... ஒண்ணொன்னு ஒரு திசையைக் காட்டுதுன்னு இந்த பப்ளிக் இன்டர்வியூவைப் பார்த்தாலே தெரியுதுங்க!



நாகப்பன் (அலுவலகக் கடைநிலை ஊழியர்):

ஏற்றத்தாழ்வு இல்லாம செவ்வாடை கட்டிக்கிட்டு மேல்மருவத்தூர் பங்காரு அம்மாவை தரிசிக்கிறதுதான் ஜாலி. இல்ல... இல்ல... ஜென்மத்துக்கும் பரவசம்!



ஜலாலுதீன் (சென்னை பர்மா பஜாரில் கடை வைத்திருப்பவர்):

நான் பத்து வயசுல பர்மாவுல இருந்து தமிழ்நாட்டுக்கு வந்துட்டேன். அப்போ எங்கம்மா 'அவளத்தான் உனக்குக் கட்டப் போறேன்னு' ஒரு பெண்ணைக் காட்டி சொல்லும். இப்போ நான் வசதியா பெண்டாட்டி, புள்ளைங்களோட இருக்கேன். திடீர்னு அவளைப் பார்க்க ஆசை! வீட்டுல எல்லாரிடமும் விஷயத்தைச் சொல்லிப் புரியவெச்சி குடும்பத்தோட பர்மாவுக்குப் போனோம். அவளுக்குக் கல்யாணமாகி குழந்தை குட்டிகளும் இருக்கு. அவளுக்குத் தமிழ் தெரியாது. எனக்கு பர்மா மொழி தெரியாது. கொஞ்ச நேரம் பேசாம ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கிட்டோம். அவ்வளவுதான். அதுதான் என் லைஃப்புல ஜாலி. எல்லா ஜாலியும் கதை மாதிரிதான் இருக்கும் போலும்.



ஜைனப் பாத்திமா (பள்ளி மாணவி) :

"**ஊ**ர் சுத்தறதுதான் ஜாலி. அதாவது ஜனங்க நெறைய இருக்கணும். வீடும் ஜாலிதான். ஆனால் சொந்தக்காரங்களெல்லாம் நிறையப் பேர் இருக்கணும். அந்த பேரு ஆறு பேரு இருந்தாலும் வீடு ஜாலி இல்ல... காலிதான். அதனாலதான் கூட்டம் நிறைய இருக்கிற இடங்களைப் பார்க்கிறது ஜாலின்னு சொன்னேன்."

மடியில் சாய்ந்திருக்கும் குட்டிப் பெண் பர்ஹானா: "எனக்கு என் ஃப்ரெண்ட் சரஸ்வதின்னா ஒரே ஜாலி. அவ அவங்க சாமி மாதிரி சூப்பரா இருப்பா. சின்ன வயசுல(?) இருந்து சரஸ்வதி என் ப்ரெண்ட் நல்லாப் பாடுவா, அதனாலதான் பிடிக்கும்னு சொன்னேன்."

சொர்ணபாரதி (சிற்றிதழ் ஆசிரியர்):

நான் ரோட்ல போறப்ப டிராஃபிக் ஜாம். சி.எம். போறாரு. காத்திருக்கும் அந்த நேரத்துல சட்டுனு முதல்வர் காரை நிறுத்திட்டு நேரா என்னை நோக்கி வந்து கட்டிப் பிடிச்சுக்கிட்டாரு. 'என்னப்பா என்னைத் தாக்கி இப்படித் தலையங்கம் எழுதிட்டே... இனிமே அவ்வளவு கடுமையா எழுதாதே'ன்னு கெஞ்சிட்டாரு. எனக்குச் சங்கடமாப் போச்சு. இப்படி கற்பனைகளோடவே இருக்கிறதுதான் என்னோட லைஃப் ஸ்டைலின் ஜாலி. அந்தக் கற்பனை நிஜமா மாற, நான் எவ்விதப் பிரயத்தனமும் எடுக்கிறது இல்லை. அந்தக் கற்பனை நெனப்புத்தான் அன்றாட ஜாலி.

ராஜராஜேஸ்வரி (கல்லூரி மாணவி):

அப்பா மாதிரி பொய்யான சுகத்துல மிதக்கிறவ இல்ல நான். பிராக்டிகலா சொல்றேன். விதவிதமா சாப்பிடணும். தெனமும் ஒரு ட்ரீட் இருந்தா ஜாலி. எல்லாப் போராட்டமும் ருசிக்கும் பசிக்கும்தான்.



பர்ஹானாவுக்கு சரஸ்வதின்னா ஜாலி!



ஜீவிதா (ஃபோட்டோஷாப் வொர்க்கர்):

சின்ன வயசுல பசங்களோட சேர்ந்து எங்க ஊரு பொன்னேரியில கூட்டாஞ்சோறு ஆக்கினதுதான் ஜாலியான மறக்க முடியாத அனுபவம்! அது ஒண்ணும் அவ்வளவு டேஸ்ட்டா இருக்காது. ஆனாலும் இப்ப, 'ஏ' கிளாஸ் ஓட்டலில் சாப்பிட்டாக்கூட அந்தக் குஷி வராது. குஷிக்கு வயசும் மனசும் முக்கியம்னு நினைக்கிறேன்.

செய்தி சித்திரம்: **அமிர்தா**



கிரேஸியைக் கேளுங்கள்

● சி.ஆர்.நாகராஜன், பொள்ளாச்சி

'நாகராஜன் கையில் கல்கி' என முடியும்படியாக ஒரு வெண்பா இயற்ற முடியுமா...?

''பூட்டிக் கிடந்ததன் வீட்டோட சாவியை...

வேட்டியில் வைத்து முடிந்ததை Partyயில்...

தாகசாந்தி யால்மறந்து தாளுடைத்தான் செங்'கல்'லால்...

நாகராஜன் கையில் 'கல்' Key...!

● ஜி.ரெஜினா பானு, பழனி

தாங்கள் குதிரை சவாரி செய்ததுண்டா...?

அடியேன் சினிமா சவாரி ஆரம்பித்தது இயக்குனர் சிகரத்தின் ''பொய்க்கால் குதிரை''யில்தான்!

● பா.அசோக், விருதுநகர்

காதலர்களுக்காக கட்டிய சின்னம் 'தாஜ்-மகால்' கல்யாணம் ஆனவர்களுக்கு...?

கணவன்மார்கள் மனைவியை சரி(செய்யக்)கட்டும் 'தாஜா-மகால்'!

● எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்

மனிதனால் தாங்க முடியாத வலி எது...?

தாங்க முடியாதது எதுவுமே வலிதான். அது அன்புத் தொல்லையாய் இருந்தாலும் சரி, அடக்கு முறையாய் இருந்தாலும் சரி.. உறவு, வரவு இப்படி எதுவுமே அளவுக்கு மீறினால் அவஸ்தையாகும் வலிதான். இவ்வளவு ஏன், அளவுக்கு மீறினால் ஆரோக்கியமும் வலிதான். More gain more pain... மெல்லிய மயிலிறகு, அளவுக்கு அதிகமானால், பாரம் தாங்காமல் வண்டி வலி பொறுக்காது, அச்சை முறித்துக் கொள்ளும். இந்த வலியைத்தான் வள்ளுவர் ''பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம் சால மிகுத்துப் pain'' என்றார்!

● எல்.மோகனசுந்தரி, கிருஷ்ணகிரி

முருகப் பெருமானிடம் உங்களுக்குப் பிடித்த குணம்...?

குணங்களைக் கடந்த முருகப் பெருமான் நிர்க்குணம் வேண்டும் அடியார்கள் குறையை விரைவாகத் தீர்க்கும் முகம் ஆறுமுகம்.. சுட்ட பழமா? சுடாத பழமா? என்று கேள்வி கேட்டுப் பதிலாக ஞானத்தை Quickகாக அளிப்பவன் Quick-Gun-முருகன்!

● ஜி.முருகன், சேதுநாராயணபுரம்

இரவை விட இருட்டான ஒன்று ஏதேனும் உண்டா...?

பஞ்சமா பாதகம் செய்துவிட்டு, பூனை போல சாதுவாக பேசாமல் கம்மென்றிருப்போர் கல் நெஞ்சு 'கம்மிருட்டு'!

இரவைவிட

● எஸ்.விமலா, பிள்ளையார்குளம்

விவாகரத்து என்பது விடுதலையா? தண்டனையா...?

சிலர் பெயிலில் மாமியார் வீட்டிலிருந்து ஜாலியாக வெளியே வந்திருக்கிறார்கள்!

● கோகிலா, சென்னை

ஏகாந்தம் பெற என்ன வழி?

A காந்தத்தை ஈர்க்க BEகாந்தம்!

● மாதவி, சென்னை

எது அகந்தை...?

தான் என்னும் அகந்தை, அகம் தைக்கும் Thorn...!

● கோவிந்த், வேலூர்

சிறந்த 'விடை' எது...?

பணி'விடை'!

● என்.பாலகிருஷ்ணன், மதுரை

பூனைக்குத் தோழனாகவும், பாலுக்குக் காவலாகவும் இருக்க முடியுமா கிரேஸி?

ஏன் முடியாது? பால் (PAUL) என்ற என் நண்பன் பூனேயில் (PUNE) போலீஸ் ஆஃபீஸராக இருக்கிறான். தோழன் பாலும் பார்க்கப் பூனை மாதிரி சாதுவாக இருப்பான். ஆக பூனேக்குக் காவலாக இருக்கும் பாலுக்கு நான் தோழனாக இருக்கிறேன். பதில் ஒரு மாதிரி ஓ.கே.தானே!

● கே.எஸ்.கிருஷ்ணவேணி, கும்பகோணம்

எதிர்காலத்தில் 'பாட்டி வைத்தியம்' என்பதே இல்லாமல் போய் விடுமோ என்று அச்சமாக உள்ளதே?

Forty ஆனாலே தலைக்கு டை அடித்து, ஜாலியாக, சுடிதார் அணியும் நாகரிகத்தைப் பார்த்தால், எனக்கென்னமோ எதிர்காலத்தில் பாட்டி என்பதே இல்லாமல் போய் விடும் போலிருக்கிறதே...!

● ஜி.ரெஜினா பானு, பழனி

ஸார்... பத்தினியின் ஆண்பால் என்ன?

ஏக பத்தினி விரதன்!

● லோ.மோகனசுந்தரி, கிருஷ்ணகிரி

தாய் தன் மகளுக்குத் தர வேண்டிய சிறந்த 'பரிசு' எது?

''பரிசம்!'' ❑



இருட்டான ஒன்று!



பணமா

பென்னாகரம்

தண்ணீர்; கண்ணீர்

மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதி எட்டிப் பார்க்கும் வகையிலும், காவிரி குதித்து தமிழ்நாட்டுக்குள் நுழையும் ஒகேனக்கல் கைக்கெட்டும் தூரத்திலும் உள்ளன. ஆனாலும், இன்று பென்னாகரம் தொகுதியில் குடி தண்ணீர்த் தட்டுப்பாடுதான். தொகுதியில் பாப்பாரப் பட்டி போன்ற பகுதிகளைத் தவிர பெரும் பாலான பகுதிகள் குன்றுகள், பள்ளத்தாக்குகள். கடந்த சில வருடங்களாக மழை அளவு குறைந்து வந்த நிலையில், சென்ற வருடம் அதுவும் பொய்த்தே போனது. அதன் விளைவு எங்கு பார்த்தாலும் காய்ந்து போன கருவேலங் காடுகள். வேலை வாய்ப்புக் கொடுக்கும் எந்தத் தொழிற்சாலையும் கிடையாது. தொகுதியில் கணிசமான இளைஞர்கள் பங்களூரில் கட்டட வேலை, கூலி வேலை என்று கிளம்பிவிட்டனர். இந்த நிலையில் மக்களுக்குப் பாலைவனப் பண மழையாக வந்திருக்கிறது இடைத்தேர்தல். ''எஜமான்... எங்களுக்குப் பணமே வேண்டாம். குடிக்க ஒரு குடம் தண்ணீருக்கு ஏற்பாடு பண்ணுங்க...'' என்று மேச்சேரி சாலையில் உள்ள கொப்பலூர் கிராமத்து லிங்கம்மாள் பரிதாபக் குரலில் கெஞ்சுகிறார். இருப்பினும் மக்களின் பிரச்னைகளை மழுங்கடித்துவிட்டுப் பணப் பெட்டியுடன் வாக்கு வேட்டை நடந்துகொண்டிருக்கிறது.

வாரிசே வா! வா!

கடந்த தேர்தல்களில் (1991, 96, 2001) தி.மு.க.வுக்கு இங்கு மூன்றாவது இடம்தான். 2006ல் தி.மு.க.-பா.ம.க. கூட்டணியில் தி.மு.க. சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரியண்ணன் இறக்கவே இந்த இடைத் தேர்தல். அவரும் பா.ம.க.காரர்தான். அவரது மகன் இன்பசேகரன்தான் இப்போது தி.மு.க. வேட்பாளர். பா.ம.க.வின் தலைவர் ஜி.கே.மணி, 1996ல் கூட்டணி ஏதுமின்றியே இங்கே வென்றவர். 2001லும் அவருக்கே வெற்றி. இப்போது அவரது மகன் தமிழ்க்குமரன்தான் பா.ம.க. வேட்பாளர். அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் அன்பழகனை வேட்பாளராக்கியிருக்கிறார் ஜெயலலிதா. விஜயகாந்த் தமது தரப்புக்குக் காவிரிவர்மனைக் களமிறக்கியிருக்கிறார். ''இந்தத் தொகுதியில் தி.மு.க.வே கிடையாது. எங்களுக்கும் பா.ம.க.வுக்கும்தான் போட்டி'' என்கிறார், ராமஎண்டஹள்ளியில் அ.தி.மு.க. வேட்பாளருக்கு வோட்டுக் கேட்டுக் கொண்டிருந்த கடலூர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் சம்பத். கொஞ்சம் தாமதமாக வேட்பா






* எ.வ.வேலு

இனமா?

ரவுண்ட் அப்



* அன்புமணி



* ஜி.கே.மணி

ளரை அறிவித்தாலும், இரட்டை இலைக்குத் தொகுதியில் கணிசமான ஆதரவு இருப்பதாகவும் தெரிகிறது.

உட்குத்து

ஆயிரமிருந்தும்- வசதிகள் இருந்தும், தி.மு.க.வில் உட்குத்துகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். சமீப காலங்களில் தி.மு.க.வின் தேர்தல் யுக்தியாளராகிவிட்ட உணவு அமைச்சர் எ.வ. வேலு தலைமையில் தி.மு.க. டீம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. மாவட்டத்தில் பெயர் சொல்லும்படியாக இருக்கும் ஒரே தி.மு.க. பிரமுகரான முல்லை வேந்தனுக்குத் தேர்தல் பணிகளில் உரிய பங்களிப்பு இல்லை என்கிறார்கள். ''70 சதவிகிதம் வன்னியர்கள் இருக்கும் தொகுதியில் வீரபாண்டி ஆறுமுகத்தைத் தேர்தல் பொறுப்பாளராகப் போட்டிருக்கவேண்டும்'' என்றும் முணுமுணுப்புகள் உண்டு. இருந்தும் கசப்புணர்வுகளைப் போக்கும் வகையில் களப்பணியில் இருக்கிறது வேலு - செல்வ கணபதி கூட்டணி. மறைந்த பெரியண்ணனுக்குத் தொகுதியில் நல்ல பெயர் இல்லை. அ.தி.மு.க.விலும் வேட்பாளரின் மேல் அதிருப்தியும், கோஷ்டி மனப்பான்மையும் உண்டு. பா.ம.க. பிரசாரத்துக்கு அந்தக் கட்சியின் துடிதுடிப்பான எம்.எல்.ஏ. வேல்முருகன்தான் பொறுப்பாளர். ''லேட்டஸ்ட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தி.மு.க.வின் அதிகார துஷ்பிரயோகங்களை அம்பலப்படுத்துகிறார் வேல்முருகன்'' என்று பா.ம.க.வினர் காலரைத் தூக்கிச் சொல்கிறார்கள். எதைப் பற்றியும் கவலைப்படாமல் துணிந்து களத்தில் நிற்கிறது தே.மு.தி.க. வழக்கம்போல,

இந்த ஒரு இடைத்தேர்தலுக்கு மட்டும் தி.மு.க. 120 கோடி செலவுசெய்கிறது.



அதிகார வர்க்கம் ஆளும்கட்சிக்கான சேவையைத் தொடர்கிறது.

பணமா - இனமா?

பா.ம.க.வின் தேர்தல் பணி கடந்த மூன்று மாதங்களாகவே நடந்து வருகிறது. வெளியூர்களிலிருந்து வந்திருக்கும் பா.ம.க. தொண்டர்கள் கிராமங்களில் உள்ள வன்னியச் சொந்தங்களோடு தங்கி, குடும்பத்தில் ஒருவராகவே ஆகிவிட்டார்கள். நல்லாம்பட்டியில் உள்ளூர்ப் பெண்களைச் சந்தித்தபோது ''எங்கள் டாக்டரை என்றும் கைவிட மாட்டோம். எத்தனைப் பணம் கொடுத்தாலும் எங்களை விலைக்கு வாங்க முடியாது'' என்றார்கள். ஆனால், ஆண்கள் மதுவுக்கும் பணத்துக்கும் ஆசைப்பட்டு விலை போய்விடுவதாக நொந்து போகிறார்கள். எர்ரபையனஹள்ளி என்ற ஊரில் நாம் சந்தித்த நடராஜன் ''டாக்டருக்காக ஒரு காலத்தில் உயிரைக் கொடுக்கத்·துணிந்தவன்தான் நான். ஆனால், இனத்து மக்களைப் பற்றிக் கவலைப் படாமல், தன் சுயநலத்துக்காகக் கூட்டணிகளை மாற்றிக்கொண்ட அவரது போக்கைக் கண்டு வெறுத்து, தி.மு.க.வில் இணைந்து விட்டேன். தி.மு.க.வில் முதல் தவணையாக ஆயிரம் ரூபாய் கொடுத்துட்டாங்க'' என்றும் சொல்கிறார்.

கொட்டப்படும் கோடிகள்!

''**சா**தனைகளை வைத்து வோட்டுக் கேட்க முடியாத தி.மு.க. இன்று பண பலம், அதிகார பலம், ஆள் பலத்துடன் தேர்தலைக் கேலிக் கூத்தாக்கிக் கொண்டிருக்கிறது. சுய உதவிக் குழுக்களுக்குப் பத்தாயிரம் ரூபாயாம். தொடர்ந்து வந்த அரசுகள் ஒகேனேக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமல்படுத்தாமல் இந்தப் பகுதியை வஞ்சித்து விட்டன. குடம் தண்ணீர் இரண்டு ரூபாய். இந்த ஒரு இடைத்தேர்தலுக்கு மட்டும் தி.மு.க. 120 கோடி செலவு செய்கிறது. மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக இருந்தபோது என் முயற்சியால் செயல்வடிவம் பெற்ற தருமபுரி மருத்துவக் கல்லூரியையும், 108 ஆம்புலன்ஸ் திட்டத்தையும் தங்கள் சாதனை என்று பொய் சொல்லித் திரிகிறது தி.மு.க.'' என்கிறார் அன்புமணி. தேர்தல் வேலை செய்யும் வெளியூர் தொண்டர்களுக்கு 'ராமசாமி' என்றும் உள்ளூர்த் தொண்டர்களுக்கு 'முனுசாமி' என்றும் மாற்றுப் பெயர் வைத்திருக்கிறது பா.ம.க! ஒவ்வொரு வாக்காளரையும் சென்றடையும் வகையில் இருக்கிறது பா.ம.க.வின் தேர்தல் பணி. இருந்தாலும், இரண்டு முறை இங்கே வெற்றி பெற்ற ஜி.கே.மணி மட்டும் தன் முத்திரையை அழுத்தமாகப் பதித்திருந்தால் பா.ம.க. இன்னமும் சற்று ரிலாக்ஸா தேர்தல் பணி செய்யலாம் என்றும் பா.ம.க. வினர் சொல்கிறார்கள். இந்தத் தொகுதியில் கிடைக்கும் நிலத்தடி நீரில் ஃப்ளோரைட் கலந்திருப்பதால் மக்களுக்



குப் பலவித நோய்கள்.

மாண்டாயோ வீரப்பா?

இரண்டு முறை பா.ம.க வெற்றி பெற்ற ரகசியத்தைக் கிசுகிசுக்கிறார்கள் சில பா.ம.க.வினர். ''வீரப்பன் எங்க அனுதாபி. அவன் இருக்கும் வரை கிராமங்களில் வேறு கட்சிக்காரர்கள் யாரும் நுழைய முடியாது. அவன் சொன்னபடி எங்களுக்கே வோட்டு விழும்'' என்கிறார்கள்.

"எஜமான் எங்களுக்குப் பணமே வேண்டாம். ஒரு குடம் தண்ணீருக்கு ஏற்பாடு பண்ணனுங்க."



✱ தமிழ்க்குமரன்





✱ அன்பழகன்

வீரப்பன் இல்லாததாலோ என்னவோ(?!) தமிழகம் முழுக்க இருந்து வந்த தி.மு.க. பிரமுகர்கள் தொகுதியின் உட்புறக் கிராமங்களிலும் பரவியிருக்கிறார்கள். ''பழைய தேர்தல் கணக்கைப் பார்த்துக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இன்று தி.மு.க. அரசு செய்துள்ள சாதனைகள் ஒவ்வொரு குடும்பத்தையும் சென்றடைந்துள்ளது. கூட்டுக் குடிநீர்ப் பணிகள் நடக்கின்றன. இங்கு அரசு கலைக் கல்லூரி வருகிறது. சாலை, பேருந்துகள் என்று பல வசதிகளை நாங்கள் செய்து கொடுத்திருக்கிறோம். பா.ம.க தேர்தல் விதிகளை கடைப்பிடிக்காதது மட்டுமல்ல; பணமும் கொடுக்கிறார்கள் என்பதே உண்மை'' என்கிறார் தி.மு.க. வேட்பாளர் இன்பசேகரன்.

நெருப்பாறு!

சமீப காலங்களில் எந்த இடைத்தேர்தல் பிரசாரத்துக்கும் செல்லாமல் இருந்த கருணாநிதி, இந்த இடைத்தேர்தலில் பிரசாரம் செய்ய இருப்பதையே 'தங்கள் முதல் வெற்றியாக'க் கருதுகிறது பா.ம.க.

ஆனால், பா.ம.க. வினரின் உற்சாகத்தைத் தகர்க்கும் வகையில் வேலைகள் நடக்கின்றன. ''தேர்தலுக்கு இரண்டு நாட்கள் முன்பு வெளியாட்கள் தொகுதியைக் காலி செய்ய வேண்டும். அதன்பின் நாங்கள்தான் இங்கே இருப்போம்'' என்கிறார்கள் பா.ம.க உள்ளூர்ப் பிரமுகர்கள்.

''தி.மு.க. ஜொலிக்கிறது'' என்று சுருக்கமாகச் சொல்கிறார் பாப்பாரப்பட்டியில் நாம் சந்தித்த நெசவாளர் மாணிக்கம். தற்போது பா.ம.க நெருப்பாற்றில் நீந்திக்கொண்டிருக்கிறது.

- ப்ரியன்

படங்கள்: **ராஜன்**

‘23ம் புலிகேசி’, ‘அறை எண் 305ல் கடவுள்’ படங்களைத் தொடர்ந்து ‘இரும்புக்கோட்டை முரட்டு சிங்கம்’ கௌபாய் படத்தைத் தயாரித்திருக்கிறார் இயக்குனர் சிம்புதேவன். அவருடன் ஒரு ஜாலியான சந்திப்பு.



“நக்கல் ஸ்டைலில் இன்றைய பிரச்னைகளையும் சொல்லி இருக்கிறதை நிச்சயம் ரசிப்பாங்க”

அவனவன் கதைக்காக சிண்டைப் பிய்த்துக் கொண்டிருக்கும் போது நீங்க என்னடான்னா, புலிகேசி, கடவுள் பூமிக்கு வர்றாரு, கௌபாய் கதைன்னு காதுல முழம் முழமா பூ சுத்தறீங்களே?

''காமிக்ஸ் என்பதே ஒரு ஃபான்டஸி தானே! அதனால, ஃபான்டஸி சப்ஜெக்ட்னா எல்லாரும் ரசிப்பாங்க. நீங்க நினைக்கறா மாதிரி ஒரு ஃபான்டஸி கதையை சினிமாவுல பண்ணறது சுலபமில்லை. காதுல பூன்னு நீங்க சொல்லிட்டீங்க! ஆனால், வேதாளம் கதையானாலும், திரையில் சுவாரஸ்யமா சொல்லாட்டி ஜனங்ககிட்டே எடுபடாது.''

சினிமான்னா காதல், காதல், காதல் மட்டும்தான் என்று எல்லோரும் படம் எடுத்துக்கிட்டிருக்கும் சமயத்துல இப்படியொரு படமெடுக்க உங்களுக்கு எப்படித் துணிச்சல் வந்திச்சு?

''நான் சினிமாவை ரொம்பவும் நேசிக்கிறேன். எல்லோரும் போகிற பாதையில் போகாம, வேறு ஒரு பாதையை டிரை பண்ணலாமேன்னு நினைக்கிறேன். எல்லா நாடுகள்லேயும், அவங்க அவங்களோட கலாசாரத்தை ஒட்டின ஃபான்டஸி படங்கள் நிறைய வந்துக்கிட்டுத்தான் இருக்கு. நம்ம நாட்டுல அது ரொம்பவும் குறைச்சல்! அதனால நான் ரொம்ப விரும்பி ரசிக்கிற ஒரு விஷயத்தை, சுவாரஸ்யம் குறையாம சினிமாவா குடுத்தா ஜனங்களும் ரசிப்பாங்க இல்லையா? இப்படிப்பட்ட சிந்தனைதான் எனக்கு அந்தத் தைரியத்தைக் கொடுத்திருக்கறதா நான் நினைக்கறேன்.''

ஆனாலும் கௌபாய் சப்ஜெக்ட், நம்ம நாட்டுக் கலாசாரத்துல இல்லாததாச்சே...?

''நான் சிறுவனாக இருந்தபோது, ஒரிஜினல் தமிழ் காமிக்ஸ் இல்லை; ஃபாரின் காமிக்ஸ் புத்தகங்கள்தான் தமிழில் மொழி

“லுத்தாயா

பெயர்த்து வெளியாகும். ஸ்கூல்ல படிக்கிற காலத்துல, அந்த மாதிரி காமிக்ஸ்களைப் படிச்சிட்டு, கௌபாயாக வாழ்ந்திருக்கேன். அந்தத் தாக்கத்தில்தான் மெக்சிகன் கௌபாய், தாய்(லாந்து)கௌபாய், ஜெர்மன் கௌபாய்னு பல படங்களைப் பார்த்தேன். இந்தியாவுல இந்தியிலயும், தெலுங்குலயும் கௌபாய் படங்கள் வந்திருக்கு. இந்தியில் சூப்பர் டூப்பர் ஹிட்டான 'ஷோலே' கூட ஒரு செமி கௌபாய் படம்தானே?''

தமிழ் பேசற கௌபாயை உருவாக்க ரொம்பச் சிரமப்பட்டீங்களா?

''கௌபாய் உலகத்துக்குள்ளே தமிழ் சார்ந்த ஒரு புனைகதையைச் சொல்லியிருக்கேன். ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் ஒரு அடிமையின் கதைதான். அந்தக் கதைக்குள்ளே தமிழ் மக்கள் சம்பந்தமான விஷயங்கள், பிரச்னைகள் எல்லாம் இருக்கும் போது, ரசிகர்களுக்குக் கதையோடு ஒரு ஐடென்டிடி கிடைக்கும்.''

பெரிய பட்டாளமே நடிச்சிருக்கு போலிருக்கே? ஏகத்துக்குச் செலவாச்சோ?

''ஆமாம்! ஒரு கிராமம் உண்டு; கௌபாய்ங்கறதால, சிவப்பிந்தியர்கள் வருவாங்க. அதோட இரும்புக்கோட்டைக்குள்ளே இருக்கிற வில்லனின் கூட்டம்; அதனால கதைக்கு ஏகப்பட்ட ஆர்ட்டிஸ்ட்கள் தேவைப்பட்டாங்க. 90 சதவிகிதம் செட் போட்டு எடுத்ததில் பெரிய பட்ஜெட் படமாயிடுச்சு. தகரத்துல ஒரு இரும்புக் கோட்டை செட் போட்டிருந்தோம். இடையில மழை அடிச்சதுல, இரும்புக் கோட்டை, மஞ்சள் நிறக் கோட்டையா மாறிடுச்சு! மறுபடி பெயின்ட் அடிச்சு, ஷூட்டிங்கை நடத்தினோம்.''

இந்தப் படத்தின் மூலமா என்னதான் சொல்ல வர்றீங்க?

''நக்கல் ஸ்டைலில் இன்றைய பிரச்னைகளையும் நாங்க சொல்லியிருக்கிறேன்.

புதுசா ஒரு பாஷையை உருவாக்கி இருக்கீங்களாமே?


''படத்தில் வருகிற செவ்விந்தியருங்களுக்கு ஒரு புது பாஷையை வெச்சிருக்கோம். படம் ரிலீசான பிறகு, காலேஜ் பசங்க மத்தியில் அந்த பாஷை ரொம்பவே பாப்புலராயிடும். அதுலயே பேசிக்கிட்டாலும் ஆச்சரியமில்லை. செவ்விந்தியர் பாஷையில 'கம்பத்'ன்னா கொன்னுடுவேன்; 'ஆப்ரிகோ'ன்னா கடவுளே! 'சிட்டாயா'ன்னா மன்னிச்சிடு; 'லூத்தாயா கங்கு கப்பா'ன்னா போதும் நிறுத்து!

பேட்டி : **எஸ்.சந்திரமௌலி**





கல்கி



2010 மார்ச் 28
விரோதி பங்குனி 14
மலர் : 68
இதழ் : 35

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


காலியாய் இருக்கும் கருவறை!


புதிய சட்டசபை வளாகத் திறப்பு விழா, கலைஞருக்கான புகழ் விழாவாக நடந்து முடிந்திருக்கிறது! சோனியாவும் பிரதமரும் தமிழக முதல்வரை வானளாவப் புகழ்ந்து மகிழ்ந்தனர்.

சட்டமன்றத்துக்கும் தலைமைச் செயலகத்துக்கும் புதிய வளாகம் தேவை என்பது பல காரணங்களுக்காக, வெகு காலமாகவே உணரப்பட்டு வந்திருக்கிறது. 'இதற்கான செலவை ஓரளவு கட்டுப்படுத்தியிருக்க முடியாதா?' என்கிற விவாதம் ஒருபுறம் இருக்க, தொலை நோக்குடன், பசுமைக் கட்டிடமாக, புது சட்டமன்றத்தை வடிவமைத்தது வரவேற்கப்படவேண்டியதுதான்.

ஆனால், புதிய சட்டமன்றக் கட்டிடம் அமைத்ததற்காக வரலாற்றில் இடம்பெறுவதில் பெரிய பெருமை எதுவும் இல்லை. அந்த மன்றத்தில் மக்களின் குரல் எந்த அளவுக்கு ஒலிக்கிறது; அவர்கள் நலனுக்காக எத்தகைய விவாதங்கள் நடக்கின்றன; முடிவுகள் எந்த அளவு அலசலுக்குப் பிறகு எவ்வாறு எடுக்கப்படுகின்றன என்பதே முக்கியம்.

ஓர் உதாரணத்துக்குச் சொல்லவேண்டுமானால், பா.ம.க. தலைவர் ராமதாஸ், தமிழகத்துக்கு ஒரு நிழல் நிதிநிலை அறிக்கை தயாரித்துள்ளார். ஆரோக்கியமான அணுகுமுறையைக் கைக்கொண்டால், இந்த நிழல் அறிக்கை சட்டமன்றத்துக்குள் வரவேற்கப்பட வேண்டும்; விவாதிக்கப்பட வேண்டும். அரசின் நிதிநிலை அறிக்கையை இறுதி செய்து இயற்றுமுன் இது நடைபெற்று, நிழல் அறிக்கையின் அடிப்படையில் சில மாற்றங்களையும் புதிய கோணங்களையும் ஏற்கலாம். ஆனால், அத்தகைய நல்வாய்ப்புகள் இன்றைய அரசியல் சூழலில்





மங்கலாகவே இருக்கின்றன. பெரும்பான்மை பலம் இல்லாவிட்டாலும் அரசு, விவாதங்களின்றி தன்னிச்சை முடிவுகள் எடுத்து வருகிறது. எதிர்க்கட்சிகள் முறையாக விவாதங்களில் ஈடுபடாமல், அவை நடவடிக்கைகளுக்கு இடர் செய்து வெளியேற்றப்படுவதிலோ அல்லது வெளிநடப்புச் செய்வதிலோ திருப்திகொண்டுவிடுகின்றன! கடைசியில் மக்கள் நலன் என்பது ஓரங்கட்டப் பட்டு, ஒரே தினத்தில் ஏராளமான மசோதாக்கள் விவாதமின்றியே சட்டமாகிவிடுகின்றன. தமிழக சட்டசபை மட்டுமின்றி வேறு பல மாநிலங்களிலும், மைய ஆட்சியிலும் கூட இதே கதைதான்!

சட்டசபை, நாடாளுமன்ற விவாதங்கள் மூலம்தான் சராசரி மக்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட முடியும். அரசின் செயல்பாடு குறித்து ஆராய மக்கள் பிரதிநிதிகள் கற்றுக் கொண்டு, குறை நிறைகளை விருப்பு வெறுப்பின்றி எடுத்துக் கூறுவதன் மூலம்தான் மக்களின் நலனையும் உரிமையையும் காத்துத்தர முடியும். இன்றைய அரசியல்வாதிகளின் சட்டசபை நடத்தையோ விவாதங்களைத் தவிர்ப்பதாகவே இருக்கிறது. அல்லது, தனிநபர் துதியையோ தனிநபர் விரோதத்தையோ வளர்ப்பதாக இருக்கிறது. இதனால் மக்களுக்கும் சட்டசபை நடவடிக்கைகளில் ஆர்வம் குறைந்து வருகிறது.

புதிய சட்டமன்ற வளாகத்திலாவது இந்த அவலம் மாறட்டும். ஒவ்வொரு முறையும் அதனுள் நுழையும் ஒவ்வொரு எம்.எல்.ஏவும், தமது கட்சி அடையாளத்தை உணர்வதற்கு முன்பாக, தாம் ஒரு மக்கள் பிரதிநிதி என்று உணர்ந்து, மனஒழுக்கத்துடனும் பொறுப்புணர்வுடனும் நுழையட்டும். தம் கட்சிக்கும் அதன் தலைமைக்கும் தமக்கும் எது ஆதாயம் என்று கணக்குப் போடுவதைத் துறந்து, தமிழகத்துக்கு எது மேன்மை தரும் என்று சிந்திக்கட்டும். கோவிலைப் போன்றதொரு சட்டமன்ற வளாகத்தை அமைத்துவிட்டு, ஜனநாயக நல்மரபுகள் என்ற தெய்வத்தைக் கொலுவிருக்கச் செய்யாமல், கருவறையைக் காலியாக வைத்திருப்பதில் அர்த்தமில்லை!

குளிரவைத்த ஸ்வீட்!

தமிழினியன்



சுரேந்திரன் ஷாப்பிங் மாலுக்குப் புறப்பட்டான். குழந்தை ஷிவானி ஓடி வந்தாள். ''எனக்கு ஒரு பொம்மை வாங்கி வாங்க அப்பா'' என்றாள்.

தந்தைக்கும் மகளுக்கும் குறுக்கே புகுந்தாள் நித்யா.

''ஆமாண்டி... உனக்கு வேறு வேலையே இல்லை. போன வாரம் வாங்கிக் கொடுத்த வாத்து பொம்மை போதாதுன்னு மறுபடியும் பொம்மை கேட்கறியா. வேண்டாம்.. வேண்டாம்'' என்று குழந்தையை அதட்டிய நித்யா, கணவனிடம், ''பொம்மை வாங்கக் கூடாது'' என்று எச்சரித்தாள்.

ஆனால், சுரேந்திரனுக்கு மனசு கேட்கவில்லை. நாற்பது ரூபாய் விலையில் சாவி கொடுத்தால் ஆடும் ஒரு நாட்டிய பொம்மை, கொஞ்சம் ஸ்வீட்டும் அடங்கிய பையுடன் வீடு திரும்பினான்.

''ஹாய்... அப்பா எனக்கு பொம்மை வாங்கி வந்துட்டாங்க'' என்று குதித்துக் கும்மாளம் போட்டாள், ஷிவானி.

நித்யாவின் முகத்தில் அனல் வீசியது. ''நான் அத்தனை சொல்லியும் பொம்மை வாங்கிட்டீங்களா... இங்கு பாருங்கள்'' என்று ஓடிப் போய் குப்பையில் உடைந்து கிடந்த வாத்து பொம்மையை எடுத்து வந்து காட்டினாள். ''இப்படித்தான் இந்தப் பொம்மையும் நாளைக்கு குப்பைத் தொட்டிக்குப் போகும்'' என்று கணவனை முறைத்தாள்.

அவன் சிரித்தான். ''உண்மைதான் நித்யா. பையில் பார். கால்கிலோ ஸ்வீட் வாங்கி இருக்கிறேன். அறுபது ரூபாய். இப்போது சாப்பிடப் போகிறோம். நாளைக்கு இது எங்கே இருக்கும் என்று உன்னால் சொல்ல முடியுமா...'' மழுப்பலாய்ச் சிரித்துக் கொண்டே அவன் தொடர்ந்தான். ''ஸ்வீட் நமக்குக் கொஞ்ச நேர ருசி. பொம்மையும் குழந்தைகளுக்கு அப்படித்தான். பார்த்த மாத்திரத்தில் அவர்களுக்கு உண்டாகும் குஷியும், கொண்டாட்டமும்... எவ்வளவு சந்தோஷம் பார்த்தாயா.. அதுதான் முக்கியமே தவிர, பொம்மை பழசாவதையோ உடைந்து போவதையோ பெரிதுபடுத்தக் கூடாது! அதுமட்டுமில்லை நித்யா. நாம கேட்டது கிடைக்கலை. அதுக்குக் காரணம் அம்மாதான்கற வெறுப்பு அவ மனசுல வளர்ந்துடக் கூடாது. புரியுதா?''

மார்கழிப் பனியில் நனைந்த ரோஜா வாயிற்று நித்யாவின் முகம்.




தொடரும் நன்றிகள்

திருநெல்வேலி மாவட்டச் சிறப்பிதழ்களைச் சிறப்பாகத் தயாரிக்க ஆலோசனை வழங்கி கடிதங்கள் குவிந்தன. தேர்ச்சியான தகவல்கள், படங்கள், நம்பகத்தன்மையான விவரங்கள்... என அசத்திய வாசகர்களின் பட்டியல் இது. உங்கள் உதவியால்தான் சென்ற இதழ்களைச் சிறப்பாகத் தயாரிக்க முடிந்தது. உங்களுக்கு ஒரு சபாஷ் - சல்யூட்!

(ஆர்.)

● பொருநை பாலு, நெல்லை-6, ● என்.கோமதி, நெல்லை-7, ● ஈ.லட்சுமணன் (எ) ஈஸ்வர் குமார், சென்னை-90, ● கோமதி நாராயணன், கொல்கொத்தா-42, ● ரா.சரசுவதி, சுத்தமல்லி, ● எஸ்.ஆதிலட்சுமி, பாளையங்கோட்டை, ● மு.சுந்தர், காஞ்சிபுரம், ● ஆர்.ஜானகிராமன், வேதாரண்யம், ● கல்யாணி சுரேஷ், அம்பாசமுத்திரம், ● அமர் சேவாசங்கம், ஆயிகுடி, ● பா.இசக்கிமுத்து, வெள்ளாளைக்கோட்டை, ● ரமணன், சென்னை-96, ● எஸ்.செல்லம்மாள் சிவசைலப்பன், ஆழ்வார்குறிச்சி, ● பி.பாலகிருஷ்ணன், திருநெல்வேலி-1, ● எஸ்.விஜயா சீனிவாசன், திருச்சி-13, ● கோ.அய்யனார், பாளையங்கோட்டை, ● சிம்மவாஹினி, சென்னை - 39, ● எம். சங்கரன், மும்பை, ● வைகை ஆறுமுகம் ரெங்க சமுத்திரம், ● சொ.பொன்னுசாமி, திருவைகுண்டம், ● எல்.எஸ்.சூரியநாராயணன், சின்ன திருப்பதி, ● பாளை.பசும்பொன், திருநெல்வேலி-11, ● வி.ஆர்.கிருஷ்ணன், சென்னை - 18, ● ஈ.கோதையம்மாள், செங்கோட்டை, ● இராம.கண்ணன், திருநெல்வேலி - 2, ● எஸ்.பாமாவதி, சிந்து பூந்துறை, ● கே.எஸ்.கிருஷ்ணன், சென்னை - 20, ● சரஸ்வதி ராமசுப்பிரமணியன், தூத்துகுடி, ● கு.கல்யாணி பாய், திருநெல்வேலி - 7, ● கற்பகம் லட்சுமணன், சென்னை - 90, ● ஆர்.ராஜலட்சுமி, ஹூப்ளி, ● ஜானகி ரங்கநாதன், சென்னை - 4, ● என்.கோமதி, நெல்லை - 7, ஆர்.பத்மப்ரியா, ஹூப்ளி, ● ஆர்.கிருஷ்ணசாமி, மேலகரம், ● ஜெ.சுதா, பாளையங்கோட்டை, ● சுஜாதா கணேஷ், சென்னை - 87, ● எம்.பிச்சைய்யா, உவரி, ● ஜி.நீலா, சென்னை - 18, ● பவித்ரா நந்தகுமார், ஆரணி, ● பொன்னிநாயகம், திருநெல்வேலி - 6, வசந்தாராமன், கடையம், ● கே.ராஜகோபால், சென்னை- 92, லோகா சுப்பிரமணியன் சிந்துபூந்துறை, ● உமா கல்யாணி, இடைகால், ● அ.ரா.பார்த்த சாரதி, சென்னை - 42, ● ஜெ.ராஜேஸ்வரி, நெல்லை - 7



● பிள்ளை

சிரிப்பைப் பிழிந்த ஜாலியான ஜாங்கிரித் தருணம் எது? குஷியில் மூழ்க வைத்த குலாப் ஜாமூன் ஜோக் எது? ஜோக் வரையும்போது ஜோக்கராதான் மாறணுமா? என்று பத்திரிகைகளில் ஹோலியாய் ஜாலியைப் பூசும் கார்ட்டூனிஸ்ட்களிடம் கேட்ட போது...

'ஜாலி கார்ட்டூன் வரையும்போது உங்கள நீங்க எப்படி ஃபீல் பண்ணுவீங்க'ன்னு பிள்ளையிடம் கேட்டால்... அவர் ஸ்ட்ரீப் ஜோக்காவே வரைஞ்சிக் கொடுத்துட்டாரு!

மனசுக்கு ஜாலி பூசுற வேலை!



படிச்சா லேசா ஸ்மைல் பண்ணக்கூடிய ஜோக்குகளைக்கூட 'குபீர்'னு சிரிக்க வைக்கிற அளவுக்கு குஷியை பூசுற வேலை எங்களுக்கு. இப்போ வர்ற ஜோக்குளைப் பார்த்தா, அப்போ இருந்தா மாதிரி இப்போ ஜனங்களுக்கு ஹாஸ்யம் குறைஞ்சுப் போச்சா இல்ல, நமக்குப் பழைய மாதிரி சிரிக்க முடியாத அளவுக்குச் சூழல் நெருக்கடி கூடிப் போச்சா தெரியல. எப்படியிருந்தாலும் நான் வரைஞ்ச இந்த மன்னர் மாதிரி வாழ்க்கையில தெனாவட்டா 'தில்'லா நடந்துப் போனா துக்கம் கிட்டக்கூட வராதுல்ல'' என்கிறார் ஓவியர் சேகர்.

● சேகர்



"கதைகளுக்குச் சிந்தித்துப் படம் போட மூடு (Mood) அவசியம். ஆனால் கேலிச் சித்திரங்கள் (கார்ட்டூன்) வரைய சிந்திக்க வேண்டியதில்லை. சிரமங்கள் இல்லை. இதுக்கு ஸ்பெஷலான ஜாலி மூடு இருக்கணும். அப்போது கை தானாகவே குறும்பா வரைய ஆரம்பிச்சுடும். அப்புறமென்ன புத்தியின் குஷியான கிறுக்கலெல்லாம் ஜாலி சித்திரம்தான்.

நான் சமீபத்தில ரசித்ததுன்னு பார்த்தா... இந்த ஜோக்குதான். அதாவது... அந்த மாடி வீட்டு ஹஸ்பெண்ட் ஆபீசுக்கு டைம் ஆச்சுன்னு வேகமாக இறங்கி வந்துட்டு ரோட்டிலிருந்து மனைவிக்கு குரல் கொடுப்பாரு..! அம்புஜம் என்னோட செல்ஃபோனும் கர்சீப்பும் இருக்கு பாரு. மேலே இருந்து போடு சீக்கிரம்'னு. அவள் முதல்ல செல்லைத் தூக்கிப் போடுவா. இவரால கேட்ச் பிடிக்கமுடியாம கீழே விழுந்து உடைஞ்சுடும். இவரு உடனே 'ஏய் போடவாணாம், நான் கர்சீப்பை





* ராமு

மேல வந்து வாங்கிக்கிறேன்'னு மாடிப் படிக்கு ஓடுவார் அவசரமா...' என்று ஓவியர் ராமு சிரித்துக்கொண்டே விவரித்தார்.

"குழந்தைகளை 'குஷி'ப்படுத்த வரையப்படும் கார்ட்டூன்கள்தான் எனக்கு மிகவும் பிடிக்கும். அந்த வகையில் சமீபத்தில் சிறுவர்களுக்கான 'கோகுலம்' மாதஇதழில் பிரசுரமாகியிருந்த என்னுடைய கார்ட்டூன் சித்திரம்தான் குழந்தையைப் போல 'குஷியா' வரைஞ்சது. பூனையும் எலியும் பண்ணுகிற திருட்டு சேஷ்டையும் அதைப் பார்த்துக் குழந்தை அழுவதும்... அட அழுவதுகூட அழகுதாங்க'' என்கிறார் கார்ட்டூனிஸ்ட் கலா.

* கலா





தொகுப்பு:
ஜெயசூர்யா

பழனி முருகனும் பரம்பரை மோதலும்!

பூமிக்குள் புதைந்த ரகசியம் அப்படியே உறங்கிவிடும்; ஆனால் மனித மனங்களுக்குள் புதைந்த ரகசியம் உறங்காது. அம் மனிதர்களையும் உறங்கவிடாது. நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்னால் நம் மண்ணில் வாழ்ந்த சித்தர்கள் விட்டுச் சென்ற மர்மங்கள் ஏராளம்; அத்தகைய மர்ம முடிச்சுகள் அவிழாத இடங்களுள் ஒன்று பழனி. அங்கே முருகன் உண்டு; வேலுண்டு; மயிலுண்டு; அதைப் போலவே விடை தெரியாத பல புதிர்களும் உண்டு; பரபரப்பான சர்ச்சைகளுக்கும் இடமுண்டு! புதுமையாக என்ன பண்ணினால் டி.ஆர்.பி. ரேட் எகிறும் என்று யோசனை செய்து, விஜய் டீ.வி., இப்போது பழனியைக் கையில் எடுத்துக் கொண்டிருக்கிறது. பிப்ரவரி இறுதியில் பரபரப்பாக டேக் ஆஃப் ஆகியிருக்கும் 'யாமிருக்க பயம் ஏன்?' சீரியல் பற்றிப் பேசுகிறார் விஜய் டீ.வி.யின் பிரதீப்.



இப்போதுமிருக்கு

இரண்டாவது சிலை?

"பழனி முருகன் சிலையை உருவாக்கியவர் சித்தர் போகர். அவர் நவபாஷாணம் கொண்டு இரண்டு சிலைகளை உருவாக்கினார். அவற்றில் ஒன்றுதான் பழனி கோயிலில் இருப்பது; இரண்டாவது சிலை எங்கே? என்பது இன்றுவரை பதில் கண்டறியப்படாத மர்மமாகவே தொடர்கிறது. பழனி மலைப் பகுதியில் மறைந்துள்ள இரண்டாவது முருகன் சிலையைத் தேடும் முயற்சியில் பல்வேறு தரப்பினரும் பல்லாண்டுகளாக ஈடுபட்டுள்ளனர்; அப்படித் தேடிச் செல்லும் இந்திராணி குடும்பமும், திணைக்காத்தான் குடும்பமும் ஒன்றோடொன்று மோதலில் இறங்குகின்றன. இதுதான் 'யாமிருக்க பயம் ஏன்?' தொடரின் சூட்சுமம்.

அமானுஷ்ய கொலை

"பாரம்பரிய நிகழ்வுகளைத் தற்காலச் சூழ்நிலையோடு இணைத்திருப்பதுதான்

"சம்பவங்களுக்கு என்ன ஆதாரம் என்று யாரும் கேட்க வேண்டாம்."

போகர் ஆவி!

சேனல்

கதையில் புதுமை. தலைமுறைகளைத் தாண்டிப் புதிராகத் தொடரும் இந்த மர்மத் தேடலில், தற்காலத்தில் ஒரு மரணம் நிகழ்கிறது. அடுத்தடுத்து நடக்கும் நிகழ்ச்சிகள் மனிதப் புரிதலுக்கும் மீறிய நிஜங்களாக அமைகிறது.''

ரசவாத சித்தர்கள்

''இந்தத் தொடரின் கதைக்குத் திரை வடிவம் கொடுத்திருப்பவர் எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜன். பல்வேறு ரசவாத சித்தர்கள் குறித்துப் பெரும் ஆர்வம் கொண்டு, அதுபற்றி ஏராளமாகப் படித்துத் தெரிந்துகொண்டவர் அவர். தான் படித்த, கேள்விப்பட்ட விஷயங்கள் பலவற்றையும் கதையில் தகுந்த இடங்களில் புகுத்தி விறுவிறுப்பு ஏற்றி இருக்கிறார்.''



• இந்திரா சௌந்திரராஜன்

போகரின் ஆவி

''இந்த மெகா தொடரில் மையமான ஒரு கேரக்டரான சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த சாணக்கியாவாக நடிக்கும் மாஸ்டர் குகன் எதிர்பாராதவிதமாகத் தண்ணீரில் மூழ்கிவிடுகிறான். அவனுக்கு சிகிச்சையளித்ததும், தூக்கம் கலைந்து விழிப்பவனைப் போல எழுந்திருக்கிறான். அந்த வினாடி முதல் அவனிடம் மாற்றம் தெரிகிறது.

உண்மையில் தண்ணீரில் மூழ்கும் பையன் இறந்துவிட, அவன் உடலில் சித்தரான போகர் புகுந்து கொள்கிறார். குகனின் உடலில் புகுந்துகொண்டு போகர் என்னென்ன சித்து வேலைகள் செய்யப் போகிறார் என்பதுதான் தினம் தினம் சஸ்பென்ஸ் என்கிறார் பிரதீப்.

பழனி ரவுண்டு-அப்

இந்தத் தொடருக்காகப் பழனியில் முகாமிட்டு, அங்கே வீதிகளில் திரியும் பிச்சைக்காரர்கள் முதல், சித்தர்கள் பற்றிய ஆழ்ந்த ஞானம் படைத்தவர்கள் வரை பல தரப்பினருடன் பேசி, ஏராளமான விவரங்களைத் திரட்டிக்கொண்டு வந்து அவற்றைத் தக்கபடி கதையில் பயன்படுத்தி இருக்கிறாராம் இந்தத் தொடரின் மூலக்கதாசிரியர்களுள் ஒருவரான ராம்ஜி.

''இந்தக் கதை மக்கள் நிஜம் என்று நம்பிக்கொண்டிருக்கிற விஷயங்களை அடிப்படையாக வைத்துக் கற்பனையில் எழுதப்பட்டது தான். எனவே, இதில் இடம் பெறும் சம்பவங்களுக்கு என்ன ஆதாரம் என்று யாரும் கேட்க வேண்டாம். விறுவிறுப்புக் குறைந்தால் மட்டும் கேளுங்கள்'' என்பதுதான் கதாசிரியர் இந்திராசௌந்திரராஜன் வழங்கும் இப்போதைய கியாரண்டி.

– எஸ்.சந்திரமௌலி

''**நா**ன் இந்த வாழ்வை நிறைவா வாழ்ந்துகிட்டிருக்கேன். இது இப்படியே தொடர்ந்து வாழ்க்கையை முழுமையாக்கினாலே போதும்...'' என்றார் பூவேந்தன்.

பூவேந்தன்தான் எங்கள் செட்டில் சீனியர். நாற்பத்தெட்டு வயது. குடும்பஸ்தர். இரண்டு பையன்கள். ஒருவன் என்ஜினியரிங் முடித்து, பெங்களூருவில் பிரபல ஐ.டி.கம்பெனியில் பணி. சின்னவன் என்ஜினியரிங் சேர்ந்திருக்கிறான். இந்த ஆண்டில் அவருக்கும் எக்ஸ்போர்ட் நிறுவனத்தில் உயர் பதவி.



அவரது திட்டவட்டமான பதிலுக்குப் பின், என் பார்வை மணி மீது தாவியது.

''ஊஹூம்...'' என்று தலையசைத்தான் மணி அவசரமாக.

''வேணாம்...''

''ஏன் வேணாம்...?''

''எனக்கு இப்ப இருக்கறதே போதும். இனிமேல் வயசு குறைஞ்சு ஆகப் போறதில்லை...''

''பூவேந்தன் சார் சொன்னாரு. நிறைவான வாழ்க்கை வாழ்ந்துகிட்டு வர்றேன். அதனால் என் வயசைக் குறைச்சுக்க வேண்டிய அவசியமில்லைன்னு சொன்னார். ஓ.கே. ஆனால் உன் வாழ்க்கை அப்படியில்லை. நிறைய மேடுபள்ளங்கள், கஷ்டநஷ்டங்கள். சிரமங்கள். இருபது வருஷம் பின்நோக்கிக் கொண்டு போய் நிறுத்தினால் - குறைகளை நிவர்த்தி செய்து கொண்டு, தவறுகளைத் திருத்திக் கொண்டு மேலான ஒரு வாழ்க்கை நடத்தலாமே...'' என்றேன்.

படுதலம் சுகுமாரன்

''அந்தத் தவறுகளும், குறைகளும், துன்பங்களும் நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும். மீண்டும் பழைய இடத்துக்குப் போகவேண்டாம்...'' என்ற மணி, தொண்டையைச் செருமிக் கொண்டு என்னைப் பார்த்துக் கேட்டான்:

''கடவுள் வந்து, 'உங்கள் வாழ்க்கையை பாதி வயசிலிருந்து மீண்டும் வாழ வாய்ப்புக் கொடுத்தால் ஏற்பீர்களா, மாட்டீர்களா?'னு எங்களைக் கேட்டே. இதையே உன்னைக் கேட்டால் உன் பதில் என்னவோ?''

சிரித்தேன்.

''ஏற்பேன்.. வித் ஒன் கண்டிஷன்..''

''என்ன?'' என்றனர் மணியும், பூவேந்தனும்.

''என் நாற்பது வயதிலிருந்து இருபது வயதுக்குத் திரும்ப நான் தயார். ஆனால்,



'ஆமாம்'னு சொல்லிடுவேன்..!

என் இருபதாவது வயதில் இந்த உலகம் எப்படி இருந்ததோ அப்படியிருக்கவேண்டும். அதாவது உலகமும் இருபது வருடம் பின்நோக்கிப் போக வேண்டும். அப்போ.. நான் விவசாயியாக இருந்தேன். நாலு ஏக்கர் நஞ்சை இருந்தது. ஓரளவு தண்ணீர் சுரந்துகொண்டிருந்தது. இரவு நேரங்களில்தான் த்ரீ ஃபேஸ் கரண்ட் கிடைக்கும். விழித்திருந்து நீர் பாய்ச்ச வேண்டும். சினிமா கொட்டகையில் செகண்ட் ஷோ பார்த்துவிட்டு, நள்ளிரவில் நடந்து, நேரே.. வயலுக்குப் போய்.. விடிய விடியத் தண்ணீர்ப் பாய்ச்சிவிட்டு வந்து தூங்கி... பாசமான கூட்டுக் குடும்ப வாழ்க்கை... அஞ்சலில் டிகிரி படிப்பு... அஞ்சலையுடன் காதல் படிப்பு... சனிக்கிழமை சந்தை.. ஆடியில் இரு விழான்னு இருபதுல வாழற வாழ்க்கை இருக்கே... சொர்க்கம்தான்...''

என் கண்களில் இறந்த காலம் தவழ்ந்தது.


''இருபத்தொன்னிலிருந்து தொடங்கினால்.. அஞ்சலையை கட்டிக்கொள்ளப் போராடியிருப்பேன். அவசரப்பட்டு நிலத்தை விற்கவிட்டிருக்க மாட்டேன். கிடைத்த வேலை போதுமென்று ஊரை உதறி வந்திருக்க மாட்டேன்...'' என்று அடுக்கினேன்.

பூவேந்தன் குறுக்கிட்டார்.

''சரண்... நீங்களும் உலகமும் இருபது வருஷம் பின்னோக்கிப் போனாலும், மீண்டும் அங்கிருந்து இப்போதுள்ள வாழ்க்கைக்கு எப்படி வந்து சேர்ந்தீர்களோ... அதேவிதமாகத்தான் வந்து சேர்வீர்களே தவிர ஒரு மாற்றத்தையும் உங்களால் பண்ணியிருக்கவே முடியாது...'' என்றார்.

அவரை நிமிர்ந்து பார்த்தேன்...

''ஆமாம் சரண்.. யோசிச்சுப் பாருங்க. நிலத்தை விற்றிருக்கமாட்டேன், அஞ்சலையை விட்டிருக்கமாட்டேன், வேலைக்கு வந்திருக்கமாட்டேன்னு சொல்றீங்க. ஃபர் எக்ஸாம்பிள் நிலத்தை விற்ற சம்பவத்தை எடுத்துக்குவோம். அது நீங்கள் ஒருவர் மட்டுமே சம்பந்தப்பட்ட விஷயமில்லை. உங்கள் குடும்பம் சம்பந்தப்பட்டது. வாங்கியவர் தொடர்புடையது. விற்கவேண்டிய சூழ்நிலை தொடர்புடையது. அந்த நேரத்தைய - கால, தேச வர்த்தமானத்தை உள்ளடக்கியது.



தோழிகளோடு ஜாலியா பள்ளிக்கூடம் போய்க்கிட்டிருப்பேன்

நீங்கள் இருபதாவது வயதில் எவ்வளவு அறிவு, உணர்வு, ஆளுமை, விழி7ப்புணர்வோடு இருந்தீர்களோ அதே போலத்தான், நாற்பதிலிருந்து இருபதுக்குத் திரும்பும் போதும் ஆவீர்கள். அப்போதுதான் அஞ்சலி - சினிமா கொட்டகை - த்ரீ ஃபேஸ் கரண்ட் - வயல்வெளி எல்லாவற்றையும் முன்பு அனுபவித்த அதே மனோ நிலையில் அனுபவிக்கமுடியும். அப்படியானால், முன்பு நிலத்தை விற்க உண்டான சூழ்நிலையை எப்படி உங்களால் மாற்ற முடியாமல் போனதோ அப்படித்தான் இப்போதும் இருக்குமே தவிர, நீங்கள் புதிதாக ஒன்றும் செய்யமுடியாது.

கடந்த இருபது ஆண்டில் நடந்த நிகழ்வுகளே தனிமனிதனுக்கும் உலகத்துக்கும் மீண்டும் உண்டாகுமே தவிர, வேறு மாற்றங்கள் உண்டாக வாய்ப்பில்லை...''

என்று என்னை யோசிக்க வைத்தார்.

எங்களுக்கெல்லாம் காஃபி தயாரித்துக் கொண்டு வந்த என் மனைவி உமா :

''நீங்கள் பேசிக்கொண்டிருந்தது எனக்கும் கேட்டது. கடவுள் என் எதிரில் வந்து 'வயதைப் பாதியாகக் குறைத்துக் கொள்ளச் சம்மதமா'ன்னு கேட்டால் மறு பேச்சில்லாமல் 'ஆமாம்'னு சொல்லிடுவேன்...'' என்றாள்.

''ஏன்?''

''ஏன்?''

''ஏன்?''

- என்று எல்லோரும் கேட்டோம்.

''அஞ்சலைக்குப் பின்னால் திரிஞ்சது போதாதுன்னு, மணசுலயும் அல்லாடிக்கிட்டிருக்கிற மனுஷனுக்கு வாழ்க்கைப்பட்டு தொலைச்சோமேனு நொந்து கிடக்கறதுக்குப் பதிலா, பதினேழு வயசுல சைக்கிள் ஓட்டிக்கிட்டு, பாவாடை, தாவணியில... கவலைன்னா என்னன்னே தெரியாம, தோழிகளோடு ஜாலியா பள்ளிக்கூடம் போய்க்கிட்டிருப்பேன்...'' என்று என்னை ஒரு குத்தலான பார்வை பார்த்துவிட்டுப் போனாள்.

வரம் தரக் கடவுள் வந்திருந்தால், சுவற்று மறைவிலிருந்து அப்படியே திரும்பிப் போயிருப்பார் போலும்.

எனக்கு மட்டும் காஃபியில் ஏனோ இனிப்பே தெரியவில்லை. ●

அமரர் கல்கி



கல்வெட்டுகள்



ஒரு மனிதன், சினிமாக்காரனாயினும் வேறு யாராயினும், ஒழுக்கக் கேடு அடைந்தால், அதற்குரிய தண்டனை அவனை வெகு சீக்கிரத்தில் வந்து அடைகிறது. இது புருஷனுக்கும் சரிதான்; ஸ்திரீக்கும் சரிதான். அவரவர்களுடைய துன்மார்க்கத்தின் பலனை அவரவர்களே சீக்கிரத்தில் அநுபவிக்கிறார்கள். துன்மார்க்கமும் அதன் தீய பலனும் அவர்களுடனே போய்த் தொலைகின்றன.

ஆனால், ஒரு மனிதனுடைய துன்மார்க்கத்தைக் கண்டுபிடித்து வெளிப்படுத்துவதாகச் சொல்லிப் பத்திரிகையில் வெளியிடுவதன் பயன் என்ன? பிரபலஸ்தகர்களைப் பற்றித் தெரிந்துகொள்ளும் ஆசையினால் அதை ஆயிரக்கணக்கானவர்கள் படிக்கிறார்கள். ஸ்திரீ கள் படிக்கிறார்கள்; இளம் பிள்ளைகள் படிக்கிறார்கள். எல்லாருடைய மனங்களும் அசுத்தமாகின்றன.

இன்னும் சில பத்திரிகையாளர்கள் வேறு ஒரு நவீன முறையைக் கையாளுகிறார்கள். உண்மைக் கதை என்று சொல்லிக்கொண்டு பொய்க் கதைகளை ஆபாசமான விவரங்களுடனும் வர்ணனைகளுடனும் எழுதுகிறார்கள்.

உண்மைக் கதையாக இருந்தால் என்ன? கட்டுக் கதையாயிருந்தால் என்ன? ஆபாசம் ஆபாசமேயல்லவா?

பண்பாட்டில் சிறந்த தமிழ்நாட்டிலும் அவ்வப்போது மேற்படி தீமை தலைகாட்டுகிறது. சிற்சில சமயம் ஓங்கி வளர்கிறது என்று கூடச் சொல்லலாம்.

சிறு பிள்ளைகள் வாலிபப் பருவத்தை அடையும் சமயத்தில் அவர்களுடைய மனம் ஸ்திரீ புருஷ சம்பந்தம் பற்றிய விவரங்களில் செல்லுவது சகஜம். அப்படிச் செல்லாமல் தடுத்து வாலிபர்களுடைய கவனத்தை உடற்பயிற்சி, கலை உணர்ச்சி, இலக்கிய ஆராய்ச்சி, சமூகத் தொண்டு ஆகியவற்றில் செல்லும்படி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் **அத்தகைய வாலிபர்கள் தீரப் புருஷர்களாக வளர்ந்து வாழ்க்கையில் அரும் பெரும் செயல்களைச் செய்யக் கூடியவர்களாவார்கள்.**

ஆனால், ஆபாசப் பத்திரிகைகளும் பிரசுரங்களும் வாலிபர்களுடைய கவனத்தை மிகக் கீழான காரியங்களில் இழுத்து அவர்களுடைய முன்னேற்றத்தைத் தடை செய்கின்றன. மேற்படி தீமையினால் அதல பாதாளத்தில் விழுந்து நாசமடைகிறவர்களும் உண்டு. பண்பாட்டுக்கு விளையும் கேட்டைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

-'பத்திரிகை தர்மம்' கட்டுரையிலிருந்து...

உலகமெங்குமே உணவு என்பது வயிற்றுக்கும் மனசுக்கும் ஜாலியான விஷயம்தான் என்றாலும் நம் நாட்டில் அது ரொம்பவே ஸ்பெஷல்! உணவே கடவுள் (அன்னபூரணி) உணவே மருந்து (ஆயுர்வேதம்) உணவே தத்துவம் (இல்லறம்) உணவே தர்மம் (ஈகை - அன்னதானம்) என்று அகர வரிசையில் அடுக்கலாம். அண்டை மாநிலங்கள் அடித்துக் கொண்டாலும் டீ கடைகளும் உடுப்பி, ஆந்திரா ஹோட்டல்களும் குஜராத்தி பவன்களும் இல்லாத இந்தியா ஸ்தம்பித்துத்தான் போகும்.

பசி எடுத்ததும் உணவு வந்ததா...
உணவைப் பார்த்ததும் பசி எடுத்ததா...
(கொடியசைந்ததும் மெட்டு)

பசி, உணவு இரண்டுமே கைகோத்து நடந்து நமக்கு அவ்வப்போது டெஸ்ட் வைக்கும். நாம் ஒருத்தரையொருத்தர் ஞாபகம் வைத்துக்கொள்வதுகூட உணவு மூலமாகத்தான். ''உன் சித்தப்பா வீடு தானே... மறக்க முடியுமா? கல்லு கல்லா இட்லி, தண்ணி காப்பி'' என மனைவியிடம் நக்கலடிக்கும் கணவர்களும் -



டேஸ்டி டூர்!

லதா சேகர்

''மம்மி, ராகுல் ஸ்கூலுக்கு ஆலு பரோட்டா, நூடுல்ஸ் கொண்டு வரான். நீயும் பண்ணும்மா ப்ளீஸ்'' எனும் வாண்டுகளும் ஏராளம்.

பல்வேறு விதமான மொழிகளும், பண்டிகைகளும் நம் நாட்டின் சிறப்பு. ஒவ்வொரு மாநிலத்துக்கும் பல்வேறு விதமான உணவு வகைகள் பிரத்யேகமாக இருக்கிறது.

டீ.வியில் வேளா வேளைக்கு மசாலா மணக்கும் சமையல் நிகழ்ச்சிகள்! நெட்டில் ஃபுட் ப்ளாக்ஸ் புதுசு புதுசாகப் பூக்கின்றன. வருகின்றன. எந்தப் பெண்ணுமே 'இப்போதெல்லாம் சமைக்கத் தெரியாதே, என்ன பண்றதுன்னு' மாமியாருக்கு எதிரே திருதிருன்னு முழித்துக் கொண்டு நிற்கத் தேவையில்லை. நெட்டைப் பார்த்துச் சட்டுபுட்டுன்னு சமைத்துப் பட்டெனப் பெயர் வாங்கி விடலாம். வத்தக் குழம்பிலிருந்து கோபி மஞ்சூரியன், ஃப்ரைட் ரைஸ், புலாவ், மலாய் கோஃப்தா... என படத்துடன் செய்முறை சூப்பர் சுத்தம்.

நமக்குத்தான் உணவில் சாய்ஸ் என்றில்லை. கடவுளுக்கும் ஃபுட் சாய்ஸ் உண்டு. சிவனுக்குப் பிடித்தது கத்திரிக்காய் கொத்ஸு (சிதம்பரத்தில் நைவேத்தியம்), பிள்ளையாருக்குக் கொழுக்கட்டை, லட்டு- அம்பாளுக்குப் பால் பாயசம், முருகனுக்குத் தினை மாவு, பஞ்சாமிர்தம், வெங்கடாசலபதிக்குப் புளியோதரை, ததியோன்னம்... என ஸ்ட்ரிக்டாக பக்தர்களிடம் சொல்லிவிட்டார்கள்.

இங்கு நாம் ஒரு பண்டிகை என்றாலே குளித்து, மடியாக, மணிக்கணக்காக கொழுக்கட்டையும், போளியும், வடையும், புளியோதரையும் பண்ணுகிறோம். கொல்கத்தாவில் வங்காளிகள் கோயிலாக இருந்தாலும், 'வீடாக இருந்தாலும் அழகாகக் கடையிலிருந்து தூத்பேடா, சந்தேஷ் என வாங்கி நைவேத்யம் நிமிஷமாகப் பண்ணிவிடுகிறார்கள். அங்கு துர்க்கையும் காளியும் பெண் கடவுள்கள் என்பதால் கிச்சன் பிராப்ளம் தெரிந்திருக்கும்! பெண்களுக்கு ரிலாக்ஸ் டைம் வேண்டும் என்பதும் தெரிந்திருக்கும்.

உணவுப் பழக்க வழக்கங்கள்கூட அந்தந்த மாநிலத்தின் தட்பவெப்ப நிலைக்கேற்றவாறே இருக்கிறது. உழைப்புக்கேற்ற, உடலுக்குச் சக்திக்கு ஊட்டும் உணவுகள், ஏழை எளியோரின் (சத்தான ரொட்டி, கஞ்சி) உணவு, அழகிகள், நடிகைகளின் டயட் உணவு, டாக்டர்கள் அறிவுரைக்கும் சரிவிகித உணவு, எனர்ஜி + ஃபிட்னஸ் வகை உணவுகள், உடலைப் பருமனாக்காத உணவுகள்... என ஏகப்பட்ட வகைகள் உள்ளன. ஆனால் அதையெல்லாம் நாம் எங்கு சரிவரச் சாப்பிடுகிறோம்?

க்விக் ரெஸிப்பி

கொல்கத்தாவில் மட்டுமே கிடைக்கும் ஒரு இன்ட்ரஸ்டிங் ஸ்வீட் 'லேடி கினி' இதன் பெயர் வந்த கதையும் ஸோ ஸ்வீட்.

18-ம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் அரசின் கமிஷனரான லார்ட் கானிங்கின் மனைவி லேடி கானிங் (Canning)கின் பெயரில்,

புதிய பகுதி

அவரை கௌரவிக்கும் விதமாக ஒரு ஸ்வீட் அறிமுகப்படுத்தப்பட்டது. காலப்போக்கில் ஸ்வீட்டின் பெயர் பலர் வாயில் அகப்பட்டு மருவி 'லேடிகினி'யாகி விட்டது. மால்புவா (அதிரசம்) என்னும் பெயர் கொண்ட இந்த வங்காள ஸ்வீட்டைச் செய்து சாப்பிட்டால்தான், லேடி கானிங் இங்கிலாந்து திரும்பிச் சென்றபோது ஏன் பெட்டி பெட்டியாக இதை எடுத்துச் சென்றார் எனப் புரியும்.

லேடி கானிங்கை கௌரவிக்கவே இந்த ஸ்வீட் அறிமுகமானது.





லேடி கினி (அ) மால்புவா செய்முறை:

பாகுக்குத் தேவையான பொருட்கள்:

சர்க்கரை - 2 கப்
தண்ணீர் - 7 டேபிள் ஸ்பூன்
எலுமிச்சை ரசம் - 1 டேபிள் ஸ்பூன்

மால்புவாவுக்குத் தேவையானவை:

மைதா - 2 கப்
நெய் - 2 டேபிள் ஸ்பூன்
பால் - முக்கால் கப்
சோம்பு - 1 டீஸ்பூன்
நெய்/எண்ணெய் - பொரிக்க
ரவை - 1 ஸ்பூன்

- பாகுக்குத் தேவையான பொருட்களைக் கலந்து அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். கம்பிப் பாகாக இருக்கக் கூடாது. முதலிலேயே கவனமாக இறக்கிவிட வேண்டும்.
- மைதா, நெய், பால், சோம்பைச் சேர்த்து நன்கு கலக்கவும். சோம்பு போடுவதால் மால்புவாக்கள் தனி மணத்துடன் இருக்கும் .
- நெய்/எண்ணெயை வாணலியில் வைத்துச் சூடாக்கிய பின், கரண்டியால் மைதா கலவையை நெய்யில் வட்ட வட்டமாக ஊற்றி, பொரித்தெடுக்கவும். மெல்லியதாக ஊற்ற வேண்டும்.
- இரண்டு பக்கமும் பிரௌனாகும்வரை மொறுமொறு பதத்தில் எடுத்து, டைரக்டாக சர்க்கரைப் பாகில் தோய்த்து வைக்கவும்.
- ஊறிய பிறகு 'கிருஷ்ணார்ப்பணம்' என்று சொல்லி, லேடி கினியை ஜாலியாக வயிற்றுக்கு அனுப்பவும்! வீட்டிலிருக்கும் ஜென்ட்ஸுக்கும், 'லேடி' கினியைக் கொடுக்கவும்.

அடுத்த வாரம் வேறொரு ரெஸிப்பி வேறொரு மாநிலம்... என்ன ஃபுட் டூருக்கு ஜாலியா தயாராயிட்டீங்க இல்லே...?

நெட்ஷூட்















- கௌதம்ராம்

"அவரு பயங்கர இன்டலிஜென்ட்'

'அவரோட துறையில அவரு கலந்து கிட்டு உரையாற்றாத பன்னாட்டு ஆய்வரங் கங்கள் இருக்க முடியாது', 'எந்த கெட்டப் பழக்கமும் கிடையாது. எல்லாத்துலயும் ரொம்பவே கரெக்டா இருப்பார்', 8 மணிக்கு ஆஃபிஸ்னா 7.50க்கு சீட்ல இருப்பாரு', 'இவ்ளோ பெரிய ஆளு!' தன்னுடைய வேலைகள் எல்லாத்தையும் கரெக்டா செய்யறார்' ஆனா அந்த ஒரு விஷயத்துல மட்டும்தான் சார் இப்படி பிஹேவ் பண்றாரு. அவருக்குப் போயி ட்ரீட்மென்ட் கொடுக் கணும்னா எப்படி டாக்டர்? அவருக்கு எல்லா சப்ஜெக்ட்டும் தெரியும். சைக்காலஜி எல்லாம் கூட நிறையவே படிச்சிருக்கார். நானும் அந்த விஷயத்துல எவ்வளவோ argue பண்ணிப் பார்த்துட்டேன். தான் நினைக்கிறதுதான் சரின்னு பிடிவாதமா இருக்காரு. அவரோட நடத்தையே பெரிய புதிரா இருக்கு. இப்ப வெல்லாம் அதிகம் argue பண்ணா பயங்கர கோபப்பட்டு அடிக்க வந்துடறாரு. இந்த பிரச்னையை எப்படி டீல் பண்றதுன்னு சொல் லுங்க ப்ளீஸ்! எனக்குப் பயமா இருக்கு."



இப்படியொரு கலக்கத்துடன் ஒரு பெண்மணியோ, மனைவியோ, மகனோ, மகளோ, நெருங்கிய நண்பரோ வருவதுண்டு.

"அந்த விஷயத்தில் மட்டும்" என்றால் எந்த விஷயம்?

அந்த விஷயம் கீழ்க்காண்பவைபோல் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்:

'என்னை என் துறை சார்ந்த வல்லு னர்கள் ஹோமோசெக்சுவல் என்று நினைப்ப



தோடல்லாமல் உலகம் முழுக்கவும் பரப்பி வருகிறார்கள்."

"மறைந்த பாப் பாடகர் மைக்கேல் ஜாக்ஸன் என்னுடைய தம்பி. அவன் இறந்த பிறகு விஷயத்தை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்ட நினைத்தேன். இப்பொழுது யாருமே நம்ப மறுக்கிறார்கள்."

"என்னை எனக்குத் தெரியாமல் வீடியோ எடுக்கிறார்கள். எனக்குன்னு ஒரு தனிப்பட்ட வாழ்க்கை கிடையாதா? ஏன்

புதிரான பொய் நம்பிக்கை!

டாக்டர்.பி.ஆனந்தன்

நான் குளிக்கிறத, பாத்ரூம் போறதகூட படம் பிடிக்கிறாங்க. டார்ச்சர் வர வரத் தாங்க முடி யல. போலீஸ்ல கம்ப்ளைன்ட் கொடுத்தா சைக்கியாட்டரிஸ்ட்ட பார்க்கச் சொல்றாங்க.''

''நான் ரோட்ல நடந்து போனா மொத்த ஜனமும் என்னையே வாட்ச் பண்ணுது. எப்படி நான் கேஷுவலா இருக்க முடியும்? இப்ப ஆறுமாசமாக இதே தொல்லையால வீட்டைவிட்டு வெளில கூடப் போறதில்ல.''

இப்படியாக யதார்த்தத்துக்குப் புறம்பான பல பிரச்னைகளுடன் மனிதர்கள் அழைத்து





வரப்படுவார்கள்.

''நடிகர் அஜீத் என் அத்தை மகன்'' என்ற பிரச்சனையுடன் அழைத்து வரப் பட்ட இராமநாதபுரம் கிராமத்து ஏழைக் கல்லூரி மாணவி,

''நடிகை ஸ்ரீதேவி என் மனைவி,'' ''நடிகை சினேகா என் மனைவி என

சமீபத்தில் ஊடகங்களில் பரபரப்பாகப் பேசப்பட்ட மனிதர்கள்''

ஓசாமா பின்லேடன் தம்மை அவருடைய குருவாகப் பொய்ப் பிரசாரம் செய்து வருவ தாகவும், நம்பவேண்டாம் எனவும் பூக்கடை போலீஸ் ஸ்டேஷனில் கம்ப்ளெய்ன்ட் கொடுத்ததற்காக கீழ்ப்பாக்கம் மனநலக் காப்பகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட பிளாட்ஃபார்மில் சி.டி விற்கும் ஏழை இஸ்லாமிய இளைஞன்...''

இந்த மனிதர்களின் எண்ணங்களைத்தான் டெலூஷன் என உளவியலில் குறிப்பிடு கிறார்கள்.

டெலூஷன் (Delusion) என்பதன் வரை யறை False Unshakable Belief என்பதாகும். அதாவது ''நேர்த்தமான, வாஜிக்கலான விளக் கங்களாலும் மணிக்கணக்கான விவாதங் களாலும் அசைக்கமுடியாத தவறான நம் பிக்கை'' என்பதே டெலூஷன் என்பதன் பொருள். இந்த டெலூஷன் மட்டுமே ஒரு நோயாகவோ, அல்லது வேறு சில நோய் களின் ஓர் அறிகுறியாகவோ வெளிப்பட

லாம். இது பெரும்பாலும் நாற்பது வயதைக் கடக்கும் காலக்கட்டத்தில் பொதுவாக வரக் கூடிய பிரச்னை.

குறிப்பிட்ட ''அந்த ஒரு விஷயத்தை'' (எண்ணத்தை) தவிர, அன்றாடம் செய்யவேண்டிய குடும்ப மற்றும் அலுவலகப் பணிகள் வரை எல்லாவற்றையுமே சரியாகச் செய்பவர்களாக, ஏற்கெனவே குறிப்பிட்டபடி எந்த கெட்டப் பழக்கமும் இல்லாத, நேரம் - கடமை



தவறாத, நேர்மையான மனிதர்களாக, குளித்து ஷேவ் செய்து, முடியை ட்ரிம் செய்து, மடிப்புக் கலையாத புத்தம் புதிய முழுக்கை சட்டையின் பட்டன்கள் கூடக் கழன்று விடாமல், பார்ப்பதற்கு ஜென்டில்மேன் என்று சொல்லக்கூடிய அம்சங்களுடன் இருக்கும் அந்த நபர் ''அந்த ஒரு விஷயத்தில்'' மட்டும் அப்படி இருப்பார். அந்த விஷயத்தைக் கடவுளே இறங்கி வந்து 'லாஜிக்கா யோசி' என விளக்க முயன்றாலும் கடவுளையே சந்தேகப்படுவார். இந்த டெலூஷன் ஏற்படக் காரணம் மூளையில் டோபமைன் சிஸ்டம் (Dopamine System) எனப்படும் உயிர் வேதிப் பொருளின் அதீத செயல்பாடு. இதற்குக் கவுன்செலிங் கொடுக்கிறேன் பேர்வழி என உட்காரவைத்து மணிக்கணக்கில் பேசுவது.

உதாரணமாக ''மைக்கேல் ஜாக்ஸனுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? சும்மா தேவையில்லாம கற்பனை பண்ணிக்காதே!''

''எல்லாருக்கும் வேற வேலையே இல்லையா? உன்னையே கவனிச்சுகிட்டு இருக்க? நீ என்ன பெரிய வி.ஐ.பியா? உன்னை வீடியோ எடுக்க?''

- இது போன்ற ஆலோசனைகளும், விவாதங்களும்!

எப்படித்தான் சரி செய்வது? மருந்துகளே தீர்வு.

மேலைநாடுகளில் இந்த நோய் பாதிக்கப்பட்ட மனிதர்கள் ஒரு கட்டத்தில் பப்ளிக் நியூசன்ஸ் (Public Nuisance) எதிலேனும் மாட்டிக்கொள்ளும்போது போலீசாரால் கைது செய்யப்பட்டு, மாஜிஸ்ட்ரேட் உத்தரவுப் படிக் கட்டாயமாக மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுவர்.

ஆனால், நமது நாட்டில் குடும்பம் என்கிற அமைப்பு இன்னமும் சிதையாமல் இருக்கின்ற காரணத்தால், குடும்பத்தினர் பாதிக்கப்பட்டவரை வைத்துக்கொண்டு படும்பாடு மிகவும் வேதனையானது. போலீசில் சென்று கம்ப்ளைன்ட் கொடுத்தால் ''ஏம்மா இங்க குற்றவாளிகளைப் பிடிக்கறதே பெரிய ரோதனையா இருக்கு, கீழ்ப்பாக்கத்துக்குக் கூட்டிட்டுப் போம்மா'' என்பார்கள். கீழ்ப்பாக்கத்துக்கு இவர்கள் அழைத்த இடத்துக்கு வருகிற நிலையிலிருந்தால் ஏன் போலீஸிடம் போகவேண்டும்? சரி, தனியாக சென்று விசாரிப்போம் என கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனைக்குச் சென்றால் ''பேஷன்டை அழைச்சுட்டு வாம்மா'' என்று துரத்தியடிக்க, ஒரு கட்டத்தில் உறவினர்கள் பலராகச் சேர்ந்து அமுக்கிப் பிடித்துக் கொண்டு போய்க் கீழ்ப்பாக்கத்திலோ, தனியார் மருத்துவமனையிலோ சேர்ப்பதற்குள் குடும்பத்தாரின் மனமும் சோர் வடைந்து சிகிச்சையளிக்க வேண்டிய நிலையில் இருக்கும்!

இப்படி டெலூஷன் உள்ளவர்களுக்கென்று இப்பொழுதெல்லாம் மாதம் ஒரு முறை போடக்கூடிய ஊசிகள் வந்துள்ளன. அவை மூளையின் டோபமைன் சிஸ்டத்தை ஒழுங்குபடுத்தும்.

(விவாதிப்போம்.)

அருள்வாக்கு!



ஆனந்த மயம்!

உனக்கு ஒவ்வொரு சமயத்தில் கொஞ்சம் ஸ்புரிக்கிறது என்று சொல்கிறாயே அந்த ஆனந்தம்தான் வஸ்து. இது உனக்குத் துளித்துளி உண்டாகிறது. இதுவே நிறைந்துவிட்டதானால் அதைத்தான் பேரானந்தம் என்கிறோம். அந்தப் பேரானந்தம் எப்போதும் குறைவு இல்லாமல் காலத்தாலும் தேகத்தாலும் நிறைந்து இருக்கும்படியான ஒரே வஸ்து. சரீரம், பிராணன், மனசு, அறிவு எல்லாவற்றுக்கும் ஆதாரமாக, இவை எல்லாவற்றையும் கடந்த ஒன்று 'ஆத்மா' என்று இருக்கிறது. அது தன்னைத்தானே அறிந்து அநுபவிப்பதில்தான் இந்த ஆனந்தம் உண்டாகிறது.

அந்தப் பேரானந்த சமுத்திரத்தின் ஏதோ ஒரு திவலைதான் நமக்கு எப்போதாவது உண்டாகிறது. கிளைகள், இலைகள் எல்லாம் அடர்ந்து இருக்கும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தால் கீழே கொஞ்சம்கூட வெயில் படாமல் நிழல் இருக்கிறது. காற்று அடிக்கும்போது, இலைகள் கிளைகள் நகர்ந்து விலகுகிற சமயத்தில் சூரியனுடைய வெயில் கீழே அந்த இடைவெளி அளவுக்கு விழுகிறது. அப்புறம் மறுபடியும் கிளைகள் மூடி, அது மறைந்துவிடுகிறது. அந்த மாதிரியாகத்தான் நமக்கு ஆனந்தம் அவ்வப்போது வந்து வந்து மறைந்து போகிறது. ஆனந்தம் என்பது எங்கும் பரிபூரணமாக நிறைந்திருக்கும்படியான வஸ்து. ஆனால் நம்முடைய கெட்ட கர்மா, மனம், புத்தி இவற்றினால் அது நம்மிடம் படாமல் மறைந்திருக்கிறது. ஒரு க்ஷணம் நாம் பண்ணியிருக்கிற புண்ணிய கர்மாக்களினாலே அவை விலகும்போது, காற்று அடித்து இலைகள் விலகும்போது, சூரிய ஒளி அதன் வழியாக வருவது போல், நம்முடைய கர்மாக்கள் விலகியதால், எங்கும் பரவிய ஆனந்தத்தின் திவலை நமக்கு உண்டாகிறது. இதுவே வளர்ந்துவிட்டால் பேரானந்தமாகிறது. அந்த ஆனந்த சமுத்திரத்தில் லவலேசத்தைத்தான் நாம் எப்போதாவது அடைந்தவுடன் மிகவும் ஆனந்தமாக இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறோம். தபஸ் பண்ணிப் பண்ணி விசாரம் செய்தால் எப்போதும் ஆனந்த மயமாக இருக்கும் சமுத்திரத்திலேயே கலந்து அதாகவே இருக்கலாம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

மேஷம் : வரவுக்கேற்ற செலவு வந்து கதவைத் தட்டும். புதிய நண்பர் வருகை யால் வீட்டில் மகிழ்ச்சி விண்ணை முட் டும். பணியில் உயர்வை எதிர்பார்த்திருப் போர்க்கு வெற்றிக்கனி கிட்டும். திருமணம் உள்ளிட்ட சுப நிகழ்ச்சிகள் களை கட்டும். மண், மனை விவகாரங் களில் ஆதாயம் இலக்கை எட்டும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

ரிஷபம்: வீட்டில் அனைவரிடமும் விட்டுக் கொடுத்துப் போவது நலம் பயக் கும். பணவரவு தேவைக்கேற்ப கிடைத்து வரும். பிறர் விவகாரங்களில் மூக்கை நுழைக்காமல் ஒதுங்கியிருத்தல் நல்லது. இறைவழிபாட்டினைத் தொடர்ந்தால் இன்னல்கள் குறையும். உடல் ஆரோக் கியத்தில் கவனம் தேவை.

மிதுனம்: நீண்ட காலமாகக் காத்திருந்த தகவல் கிடைக்கப் பெறுவீர்கள். வெளி யூர், வெளிநாட்டுப் பயண வாய்ப்புக் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம் உண்டு. கடன் சுமைகளிலிருந்து விடு தலை கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல லாபம் பெறுவீர்கள். சுறுசுறுப்பாக அனைத்துக் காரியங்களிலும் செயல்பட்டு வெற்றியடைவீர்கள்.

கடகம்: முட்டுக்கட்டைகள் விலகி, முன்னேற்றப் பாதையில் முனைப்பாகச் செல்வீர்கள். சுபவிசேஷங்கள் கைகூடும். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் திருப்புமுனை ஏற்படுத்தும். மனக் கவலைகள் முற்றிலும் மறைந்து மகிழ்ச் சிப் பெருக்கெடுக்கும்.

சிம்மம்: துவண்டு கிடந்தவர்கள் கூட தோளுயர்த்திக் கிளம்பிவிடுவீர்கள். எதிரி களை எளிதில் வெற்றி கொள்வீர்கள். சுப காரிய முயற்சிகளில் வெற்றியடைவீர்கள். வழக்கு விவகாரங்கள் உங்களுக்குச் சாதக மாக முடிவடையும். குடும்பத்தில் உங்கள் செல்வாக்குப் பெருகும். உடல் ஆரோக்கி யம் திருப்தி தரும்.

கன்னி: உங்கள் கனவுகள் நனவாகும் தருணம் நெருங்கிவிட்டது. எதிரிகள் எவ் வளவு தொல்லை கொடுத்தாலும் இறை வன் அருளால் அவற்றை முறியடிப்பீர்கள். பணியில் இருந்து வந்த அழுத்தம், பகல வனைக் கண்ட பனியாய் மறையும். மனக் கவலைகளுக்கும், பணக்கவலைகளுக்கும்

தஞ்சை பரத்வாஜ்



நிவாரணம் கிடைக்கும். திருப்புமுனை ஏற்படும்.

துலாம் : தொட்ட காரியமெல்லாம் துலங்கும். செய்தொழிலில் எதிர்பார்த்ததை விட இரட்டிப்பு லாபம் கிடைக்கும். சுபச் செலவுகள் கூடும். வம்பு, வழக்குகளில் சாதகமான திருப்பம் ஏற்படும். அண்டை அயலாரின் நன்மதிப்பைப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். மனக் குறைகள் அனைத்தும் மறையும். உடல் ஆரோக்கியம் சிறக்கும்.

21.03.10 முதல் 27.03.10 வரை



விருச்சிகம் : பிறர் விவகாரங்களில் தலையிடுவது கசப்பான விளைவுகளை ஏற்படுத்தும். ஒதுங்கியிருப்பதே நலம் பயக்கும். பேராசையால் கையிருப்பையும் இழக்க நேரிடும். வழக்குகள் கவலையை அளிக்கும். மனஉளைச்சல் கூடும். உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை.

தனுசு: நீண்ட காலமாக இழுபறியில் இருந்து வந்த பிரச்னைகள் நல்ல தீர்வுக்கு வரும். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் நன்மதிப்பு கூடும். பணச்சிக்கல்கள் தீரும். பிரிந்தவர் இணையும் தருணம் இது. சுபச் செலவுகள் பெருகும். உடல் நிலை மேன்மையடையும்.

மகரம்: சாதனைச் சிகரத்தைத் தொடுவீர்கள். பொருளாதார நிலைமையில் உயர்வு காண்பீர்கள். தடைப்பட்டு வந்த முயற்சிகள் தொய்வின்றித் தொடரும். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

கும்பம்: எதிர்ப்புகள் வலுக்கும். எச்சரிக்கையாய் இருப்பது நல்லது. எவரிடமும் வாக்குவாதம் வேண்டாம். மனபலம் குன்றும். ஆனால் உடல்நலம் சீராகவே இருக்கும். பணவரவில் எந்தப் பாதிப்புக்கும் இடமில்லை. வழக்குகளில் பின்னடைவும் உண்டு.

மீனம் : வீடு, நிலம் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோக உயர்வு கிடைக்கும். செய்தொழில் சிறப்படையும். நண்பர், உறவினர் வகையில் நன்மைகள் நடக்கும். பணவரவு அமோகமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலமான நிலைமையும், மனத்தில் மகிழ்ச்சிப் பெருக்கும் நிலவும். போட்டி, பொறாமைகள் மறைந்து எங்கும், எதிலும் வெற்றி கிடைக்கும்!



● வால்ட்டன்

1945-ல் துக்குனூண்டுக் கடையாகத் தொடங்கிய வால்மார்ட்டின் வெற்றிக்கு, அதன் நிறுவனர் சாம் வால்ட்டன் கையாண்ட புதுமையான யுக்திகள்தான் முக்கிய காரணம். வேலை சுமையாக இருக்கக் கூடாது, ஊழியர்கள் தங்கள் பணியை ரசித்துச் செய்யவேண்டும் என்பது வால்ட்டனின் கொள்கை. வாராந்தரக் கூட்டங்களில் ஊழியர்கள் வைத்துக் கொள்ளும் பந்தயங்களும், ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொள்ளும் சவால்களும் மிகச் சுவாரஸ்யமானவை.

1984. ஒரு சனிக்கிழமைக் கூட்டம். டேவிட் கிளாஸ் என்ற உயர் அதிகாரியிடம் வால்ட்டன் கேட்டார், ''டேவிட், இந்த வருட லாபம் விற்பனையில் எத்தனை சதவிகிதம் வரும்?'', ''எட்டு சத

குட்டி டான்ஸ்; கோடி வருமானம்!

டாட்டா, பிர்லா, ரிலையன்ஸ் போன்ற இந்தியாவின் ஒரு முன்னணி நிறுவனத் தலைவர் சென்னையின் பிரதான அண்ணா சாலையில் பட்டப் பகலில் குத்தாட்டம் போட்டால்..? அமெரிக்காவின் அப்படியான ஒரு பரபரப்பு நிகழ்ச்சி இது.

வால்மார்ட். உலகின் மிகப் பெரிய ரீட்டெய்ல் கடை. உலகம் முழுக்க 7955 கிளைகள். நம் ஊர் ராட்சசக் கம்பெனியான ரிலையன்ஸைவிட பதினான்கு மடங்கு வருமானம்.



இப்படியும் விற்கலாம்!

ஜப்பான் நாட்டின் முக்கிய நாளிதழ்களில் ஒரு நாள் முழுப்பக்க விளம்பரம் வந்தது. மணப்பெண் தேவை! ஜப்பானின் பிரபல தொழிற் குடும்பத்தைச் சேர்ந்த இருபத்து எட்டு வயது இளைஞர் தனக்கு ஏற்ற மணப்பெண் தேடுகிறார். இளைஞர் அமெரிக்காவில் எஞ்சினியரிங், எம். பி. ஏ பட்டங்கள் பெற்றவர்.

அவருக்கு எப்படிப்பட்ட பெண் தேவை?

மினோரி தனகா என்கிற பிரபல எழுத்தாளரின் 'வசந்தப் பூக்கள்' என்கிற நாவலின் கதாநாயகிபோல் இருக்கவேண்டும். ஜப்பான் முழுக்க இளைஞர்களும் இளைஞிகளும் அவர்களுடைய பெற்றோர்களும் புத்தகக் கடைகளுக்கு ஓடினார்கள். அடுத்த சில நாட்களில் 'வசந்தப் பூக்கள்' நாவல் லட்சக் கணக்கான பிரதிகள் விற்பனையாகிச் சாதனை படைத்தது.

பக்கத்தில் வாருங்கள், ஒரு ரகசியம்சொல்கிறேன், அந்த விளம்பரம் போட்டவர் மினோரி தனகாதான்! (பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.)

விகிதம்'' என்று டேவிட் சொல்ல, ''அது முடியவே முடியாது'' என்று வால்ட்டன் சாதித்தார். டேவிட் தன் இலக்கை எட்டினால், அவர் என்ன கேட்டாலும் தருவதாக வால்ட்டன் சவால்விட்டார். டேவிட் கேட்ட பரிசு யாருமே எதிர்பார்க்காத பரிசு!

''பாஸ், நான் எட்டு சதவிகித லாபத்தை எட்டினால், நீங்கள் நியூயார்க் நகரின் பிரபல வால் ஸ்ட்ரீட்டில் ஹுலா நடனம் ஆட வேண்டும்.''

''டேவிட், ஹுலா என்பது ஹவாய் பெண்கள் இலை, தழை, வைக்கோல் ஆகியவற்றால் மட்டுமே ஆன பாவாடைகளை அணிந்து, இடுப்பை வளைத்து நெளிந்து ஆடும் நடனம் அல்லவா? என்னைப் பொது மக்களின் கேலிப்பொருளாக்கப் பார்க்கிறாயா? நான் ரெடி.''

மூன்று மாதங்கள். டேவிட் தன் இலக்கை எட்டினார். வால்ட்டன் தன் வாக்கைக் காப்பாற்றுவாரா? வால்மார்ட் கம்பெனியில் மட்டுமல்ல, அமெரிக்கா முழுக்கப் பரபரப்பு. அந்த நாள்.....வால்ட்டன் தன் காரில் ஹுலா காஸ்ட்யூமில் வந்து இறங்கினார். டேவிடும் சாதா ஆள் இல்லை. டஜன் கணக்காக ஹுலா நடனப் பெண்கள், டிவி. காமிராக்கள், பத்திரிகை நிருபர்கள் எல்லோரையும் தயாராக வைத்திருந்தார். கிறுகிறுக்கும் இசை முழங்கியது. வால்ட்டன் அந்த இளம்பெண்களோடு சேர்ந்து அபாரமாக ஆடினார். மாபெரும் வால்மார்ட் நிறுவனத் தலைவர் வால் ஸ்ட்ரீட்டில் போட்ட ஆட்டம் எல்லா ஊடகங்களிலும் தலைப்புச் செய்தியானது.



வால்ட்டனுக்கு படா சந்தோஷம். கோடி கோடியாய்ச் செலவழித்தாலும், வால்மார்ட்டுக்குக் கிடைக்காத விளம்பரம் ஒரே நாளில், ஓசியில்! வால்ட்டனின் இந்த ''தில்'' வால்மார்ட்டின் மாபெரும் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணம்.

எஸ்.எல்.வி. மூர்த்தி



அப்பு என்ன



"ரேஷன் கடை ஊழியர்கள் போராட்டத்திலே எங்கே சத்தத்தையே காணோம்?"

"அதையும் குறைச்சுத்தான் போட்டாங்க...!"

- ஆர்.ஆர்.பூபதி.

"என் மனைவி சரியான புடைவை பைத்தியம்."

"நிஜமாவா?"

"ஆமாம்; பாத்திரக்காரன்கிட்டே பாத்திரத்தைப் போட்டு அவன்கிட்டே இருக்கிற பழைய புடைவையை வாங்குவா..."

- வி.சாரதி டேச்சு

"பேசாம சொந்தத்திலேயே பொண்ணு எடுக்கலாம்னு பார்க்கிறேன்..."

"பேசாம இருக்கிறதுக்கு சொந்தம்னா என்ன? அசல்னா என்ன? எதையோ செய்ங்க!"

- லால்குடி வெ. நாராயணன்

"நீங்க வரதட்சணை கேட்டால் போலீசுக்குப் போவேன்."
"போங்க... போங்க! அங்கே லஞ்சம், நன்கொடை, மாமூல்னு விதவிதமாக கேப்பாங்க. அப்ப என்ன பண்ணுவீங்க?"

- ஆர்.நரசிம்மா



பண்ணுவீங்க?

"உயிர்னா நம்மை விட்டு ஒரு நாளைக்குப் பிரிஞ்சுதானே ஆகணும்!"

- ஆர்.ஆர்.பூபதி.



ரிலாக்ஸ் ஏரியா!

"உங்க பையனைக் கொஞ்சம் கண்டிச்சு வையுங்க."
"ஏன்?"
"நீதான் இந்தியாவின் வருங்காலத் தூண்னு சொன்னா, 'என்னால் ஒரே இடத்தில் நிற்க முடியாது' சார்ன்னு சொல்றான்!"

- அதிரை புகாரி

"ஆழ்ந்த யோசனையில் இருக்கிறாயே ஏன்?"
"பி.டி.கத்தரிக்காய் மாதிரி சண்டை போடாத மரபணு மாற்றம் செய்யப்பட்ட மாமியார் கிடைப்பாரா என்ற யோசனைதான்."

- நாஞ்சில் சு.நாகராஜன்

"வியாபாரம் எப்படிப் போவுது?"
"ஏழெட்டுப் பேருக்கு வட்டி கொடுத்து வாழ வைச்சுக்கிட்டிருக்கேன்!"

- கு.அருணாசலம்

அஜயன் பாலா



24

குதிரைக்கு சேனை கட்டிய வாழ்க்கைதான் நம்முடையது. அடுத்தவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்? அவர்கள் ஏன் நம்மிடம் அன்புகாட்டுகிறார்கள்? அல்லது வெறுக்கிறார்கள்? பகைமை பாராட்டுகிறார்கள் என்பது பற்றியெல்லாம் நமக்குத் தெரியாது.

எல்லோருடைய மனதுக்குள்ளும் ஒரு ஜன்னல் மட்டும் இருந்து, அதை வேண்டியபோது திறந்து பார்க்கக் கூடிய வசதி மட்டும் இருந்துவிட்டால், வாழ்க்கையில் நமக்குப் பிரச்னைகளே இருக்காது அல்லவா?

ஆனால், அந்தத் தெரியாத பகுதிதான் வாழ்க்கையின் திருப்பங்களுக்கும், சுவாரஸ்யங்களுக்கும் வாழ்வின் மீதான ஆர்வத்துக்கும், இன்பத்திற்கும் காரணமாக இருக்கிறது.

தேன்மொழி மட்டும் சூர்யாவின் மனத்துக்குள் என்ன இருக்கிறது எனத் துவக்கத்திலேயே அறிந்திருந்தால் இவ்வளவு தூரம் அவள் அவஸ்தைப்பட வேண்டியதே இல்லை. அப்போதே விலகிப் போயிருப்பாள். இப்படியெல்லாம் காதலித்து அவஸ்தைப்படவேண்டியது இருக்காது. அதுபோல, சூர்யாவுக்கும் துவக்கத்திலேயே, முத்து இறப்பதற்கும், தேன்மொழிக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்பதை அறிந்திருந்தால், அவனும் அவளிடம் நாடகமாடி அவளை நெருங்கி வந்து, பின் காதலில் விழுந்து நோக்கத்திற்கும் செயலுக்கும் இடையில் இப்படித் தடுமாறியிருக்கமாட்டான்.

ஆனால், இப்படி ஒருவர் மனத்தை ஒருவர் அறியாமல் ஈர்க்கப்பட்டு நெருங்குவதில்தான் வாழ்க்கையின் சுவாரஸ்யமும் அடங்கியிருக்கிறது.

உண்மையில் முத்துவின் மரணத்துக்குத் தேன்மொழி காரணமேயில்லை. அப்படியானால், முத்து எப்படி இறந்தான்? அவன் தேன்மொழியின் மேல் பழிசுமத்திக் கடிதம் எழுதியதன் பின்னணி என்ன? தேன்மொழி முத்துவைக் காதலித்தாளா?

எல்லோரையும் காதலிக்கத் தூண்டும் இளமையும் அழகும் கொண்ட தேன்மொழியின் துடிப்பு, அக்காலத்தில்

கல்லூரியில் மாணவ மாணவிகள் மட்டுமல்லாமல் பேராசிரியர் வரை பிரசித்தம்.

துருதுரு கண்கள், அனைவரிடமும் அன்பைப் பூரணமாக வெளிப்படுத்தும் பாங்கு, கல்லூரி நிகழ்ச்சிகளை முன் னெடுத்துச் செல்லும் தலைமைப் பண்பு ஆகியவற்றால் தேன்மொழி ஒரு புது வெள்ளி நாணயமாக பிரகாசித்து, அனை வரையும் கண்கூச வைத்தாள்.

அன்று முதல் வருடம். கல்லூரியில் ஒரு சிறிய விழா. அதனால் தோழிகள் அனைவரும் பட்டுப் புடைவையும், கைகளில் ஒற்றை ரோஜாவுமாகக் கூடியிருந் தனர். முதன் முதலாகத் தேன்மொழி புடைவை கட்டி வந்திருந்தாள். அவளது உயரம், இடுப்பளவு, எடுப்பான தோள் களுக்குப் புடைவை சர்வ லட்சணமாகப் சட்டை போட்டிருக்க வேண்டும்'' எனக் கூற மாணவிகளிடத்தில் சிரிப்பு அலை!

''அப்ப பச்சை சட்டை போட்ட யாரா யிருந்தாலும் லவ் பண்ண ஆரம்பிச்சிடுவ'' எனக் கூற, தேன்மொழியும் தலையாட் டினாள்.

''யூமீன் ராமராஜன்?''

''யெஸ்.''

தேன்மொழி இப்படிக் கூறிய சில நிமி டங்களில், அனைவரும் ஆச்சர்யப்படும் வகையில் ஒரு சம்பவம் நடந்தது.

அங்கு பச்சை சட்டை அணிந்தபடி ஒரு மாணவன் வந்தான். முத்து... உறுதியான தோற்றம். கிராமத்து முகம்.

மாணவிகள் அனைவரும் ''ஏய்... பச்சை சட்டை.... தேன்மொழியின் ஆள்'' என ஆளாளுக்குப் பரபரப்புக் காட்டினர்.

அன்று அந்த நிமிடம் மட்டும் முத்து வராதிருந்தாலோ, அல்லது தோழிகளில்

பகல் மீன்கள்

பொருந்தியிருந்தது. வி.ஐ.பிக்களின் வரு கைக்காக வரவேற்புப் பணியில் காத்திருந்த அந்த இடைப்பட்ட நேரத்தில், பேச்சு அங்கு இங்குத் திரும்பி, காதல் பிரச் னைக்கு வர ஆளாளுக்குத் தங்களது காதலன் தோற்றம் குறித்து அபிப்ராயத்தைக் கூறினார்கள். கிட்டத்தட்ட அனைவருமே யாரோ ஒரு நடிகரின் அல்லது கிரிக்கெட் வீரனின் தோற்றத்தை ஒப்பிட்டுத் தங் களது தேர்வுகளைக் கூறிக் கொண்டிருந்த போது தேன்மொழியின் முறையும் வந் தது.

தேன்மொழி தன் விருப்பத்தைக் கூறா மல் விளையாட்டாக, அவன் பச்சை ஒருத்தி முத்துவிடம், ''ஹலோ இவ உங்களை லவ் பண்றா'' என அவசரப் பட்டுக் கூறாதிருந்தாலோ, மூன்று பேரது வாழ்க்கையும் ஒரு திருப்பத்தைச் சந்தித் திருக்காது.

முத்து மாணவிகளின் சிரிப்பொலி களைக் கடந்து, விழா அரங்கிற்குள் நுழைந்தபோதுதான் சட்டென அந்தப் பெண்ணின் குரல் கேட்டுத் திரும்பி னான்.

''சார் இவதான்... ரேவதி'' தேன் மொழியின் தோளைத் தட்டி முத்துவிடம் கூற, முத்து தேன்மொழியின் முகத்தைப் பார்த்தான். கல்லூரியே காதலிக்கும் அந்த

முகம்.

முத்துவின் மனத்தில் அந்தக் கணம் சூழலே உறைந்து, சத்தமிழந்து அபிராமியாக, தேன்மொழி அவன் மனதுள் நுழைந்தாள்.

தேன்மொழி கூட அந்தச் சமயம் தோழியைக் கடிந்து கொண்டாளே ஒழிய, ஒருவனின் வாழ்க்கைத் திசைதிருப்பலுக்கு அவளது குரலும், தான் கூறிய பச்சையும் காரணமாகப் போகிறது என நினைக்கவில்லை.

முத்து அதன் பிறகு மெல்ல, தன்னை மாற்றத் துவங்கினான். உடைகள் மாறியது. ஹேர்ஸ்டைல் மாறியது. அதிகமாக பாக்கெட் வைத்த ஜீன்ஸ் பேன்ட் போட ஆரம்பித்தான். ஆனால், முத்து தன்னால் ஒருமாதிரியாக ஆகிக்கொண்டிருக்கிறான் என்பது எதுவுமே தேன்மொழிக்குத் தெரியாது.



"கஷ்டப்பட்டு முழங்கால் வரை முடி வளர்த்து, பராமரிக்கிறது சாதாரணமில்லைங்க... அதனோட பலபலனே, பொறாமையோடு ஆச்சரியமா மத்தவங்கப் பார்க்கிறப்ப வர்ற ஜாலிதான்."

- எம்.சரண்யா, மகாலஷ்மி மகளிர் கல்லூரி, பருத்திப்பட்டு

பொறாமைப்படும் ஜாலிதான்!

அதுபோல, அவள் கல்லூரிக்கு வரும் நேரம், செல்லும் நேரம் என்று - என்ன உடை உடுத்தி வருகிறாள் என எல்லாவற்றையும் எழுதிவைத்துக் கொண்டான். அதே நிறத்தில் ஆடைகளை அணிந்து கொண்டான். இருவரும் ஒரே நாளில், ஒரே உடையில் கல்லூரிக்கு வர வேண்டும் என கடவுளைத் தொழுதான்.

தேன்மொழி மட்டுமல்லாமல் அவளது தோழிகள் எதிரில் வந்தால் கூட வெட்கப்பட்டு மறைந்துகொண்டான். அதே சமயம் தேன்மொழி யதேச்சையாகச் செய்யும் அனைத்தும் தனக்காகத்தான் என்பதுபோல கற்பனை செய்துகொண்டான். ஒருநாள் தேன்மொழி அவனைப் பார்த்தும் அந்தச் சம்பவம் ஞாபகத்துக்கு வந்து சகஜமாக சிரிக்க, அன்று இரவு முத்து கண்ணீர் விட்டு அழுதான்.

கொஞ்சநஞ்ச சந்தேகமும் தீர்ந்தது. அவனுக்கு, அவள் தன்னிடம் பேசத் தயங்குகிறாள் என அவனாக நினைத்துக்கொண்டான். தீபாவளி விடுமுறைக்குக் கிராமத்துக்குப் போனபோது, அவளும் தன்னோடு திருமணமாகித் தலைதீபாவளி கொண்டாடுவதாகக் கற்பனை செய்துகொண்டான். திருமணம் குறித்து வீட்டில் பேச்சு வந்தபோது, அம்மாவிடம் நாசூக்காகத் தன்னை ஒரு பணக்காரப் பெண் காதலிப்பதாகச் சொன்னான். கிராமத்துத் தாயான முத்துலட்சுமியின் மனம் முதலில் சஞ்சலப்பட்டாலும், தன் மகனுக்கு அவன் விருப்பப்படித் திருமணம் செய்யவேண்டும் என முடிவெடுத்துக்கொண்டாள்.

தன்னிடம் அவளை அழைத்து வரும்படி அவள் கேட்க, அவனோ படிப்பு முடியட்டும், எனச் சொன்னதைக் கண்டு அவள் பெருமிதம் கொண்டாள்.

ஒருநாள் இந்த விபரீத நாடகத்திற்கு திருப்புமுனையாகத் தேன்மொழிக்கு ஒரு



"முயற்சி திருவினையாக்கும், இதுலேர்ந்து என்ன புரியது?"
"அரியர்ஸ் வைக்கறது தப்பில்லைனு புரியுது சார்!"
- எஸ்.கோபாலன்

நான் அந்தத் தொலைபேசி அழைப்பு வந்தது. அந்தக் குரல் தயங்கித் தயங்கிப் பேச, தேன்மொழி புரிந்துகொண்டு, அனுசரணையாக அந்தக் குரலைப் பொருட் படுத்தினாள்.

"என்ன...? என்னை மீட் பண்ணணுமா? எதுக்கு...?"

தேன்மொழிக்கு அந்தக் குரலுக்குரியவன் யாராக இருக்கும் எனத் தெரியவில்லை.

"சரி, இன்னைக்கு சாயந்திரமா? எங்கே வரணும்?"

தேன்மொழிக்கு ஆவல். அந்தக் குரலுக்குரியவன் யாராக இருக்கும்? அந்தக் கணத்திலேயே அவள் மூர்க்கமாக ரியாக்ட் செய்திருந்தால் கூட இந்தப் பிரச்னை இவ்வளவு விபரீதமாகியிருக்காது.

அன்று மாலை. கல்லூரியின் ஆடிட்டோரியம் ஹாலுக்கு அடுத்த அந்த அசோக மரத்தைத் தேடிச் சென்றாள். முத்துவைப் பார்த்து அதிர்ந்தாள். பச்சை சட்டை ஞாபகம் வந்தது. உடன் அவன் மேல் பரிதாபமும் வந்தது. அவன் மேல் தவறு இல்லை, தானும் இதற்குப் பொறுப்பு என உணர்ந்தாள். அதைப் பக்குவமாக எப்படி உணர்த்துவது என யோசித்தாள். அப்போதைக்கு அவன் நீட்டிய கடிதத்தை வாங்கிக் கொண்டவள், அவன் பதற்றத்துடன் பேசுவதைத் தலையை ஆட்டியபடி உணர்ச்சியை வெளிக்காட்டாமல் கேட்டுக்கொண்டாள். முதன் முதலாக அவன் அவளைப் பார்த்த பச்சை சட்டை சம்பவத்தின் போதுதான் தனக்குக் காதல் வந்ததாக வியர்வையைத் துடைத்தபடி பேசினான். அவனது உளறலான பேச்சுக்கு ஒரே வரியில் மட்டும் தேன்மொழி பதில் சொன்னாள். "அன்னைக்கு நடந்தது ஒரு தமாஷான சம்பவம். நான் யாரையும் காதலிக்கலை. காதலிக்கற ஐடியாவும் இல்லை. உங்க மனசு நோகக் கூடாதுன்னுதான் நான் இதை வாங்கிக்கறேன்" எனப் பதில் கூறிவிட்டுத் தேன்மொழி புறப்பட்டுச் சென்றாள்.

அவள் அப்படிச் சொல்லிச் சென்றதும், நெடுநேரம் அங்கேயே முத்து அமர்ந்திருந்தான். அவனால் சிறு நிராகரிப்பைக் கூடத் தாங்க முடியாத நிலை! மீண்டும் அவளைத் தேடி ஓடினான். அவள் புறப்பட்டிருந்தாள். அவள் வீட்டுக்குப் பஸ்ஸைப் பிடித்தான். அவள் வீடு வழியாக இரவு முழுக்கச் சுற்றினான்.

மறுநாள் காலையில் புறப்பட்டு, அவள் வீட்டு வாசலுக்குச் சென்றான். வழியில் டூவீலரில் எதிர்ப்பட்ட அவளிடம் இங்குதான் தன்னுடைய வீடுமிருப்பதாகப் பொய் சொன்னான். நண்பனாகவாவது ஏற்குமாறு கேட்டுக்கொண்டான். அவனை ஏற்றிக்கொண்டு கல்லூரிக்குள் நுழைந்தாள். பலரும் இதைப் பார்த்தனர். அடிக்கடி இருவரும் பேசுவதையும் டூவீலரில் வருவதையும் பார்த்து மாணவர்கள் பொறாமைப்பட்டனர்.

அவனிடம், "அப்படியா?" என வியந்தனர். அவனும் அவள் தன் மேல் உயிராக இருப்பதாகக் கூறினான். தோழிகளுக்கும்

கூட சந்தேகம் வந்தது. மூன்றாம் வருடம் முடியும் தருவாயில், அம்மாவிடம் கல்லூரிக்கு வரச் சொல்லி மருமகளை, அறிமுகப்படுத்துவதாகக் கடிதம் எழுதினான். முத்துலட்சுமி மறுத்தாள். அவனை வீட்டுக்கு வரவழைக்கும்படி சொன்னாள்.

தேன்மொழியிடம் விவரத்தைச் சொல்லி அதிரவைத்தான். தேன்மொழி ''லூசு பைத்தியம்'' எனக் கத்தினாள்.

அம்மாவிடம், அவள் தன்னுடன் கிராமத்துக்கு வருவதை அவளுடைய பெற்றோர் விரும்பவில்லை எனக்



"என்ன... என்னை மீட் பண்ணனுமா எதற்கு..? எங்கே வரணும்?"

கடிதம் எழுதினான்.

முத்துலட்சுமியோ இரண்டு நாளில் கல்லூரிக்குதானே வருவதாகக் கடிதம் எழுதினாள்.

இம்முறை அக்கடிதத்துடன் தேன்மொழியை முத்து சந்தித்தான்.

தன்னை ரொம்ப வித்தியாசமானவளாகக் காண்பிப்பதும் அல்லது நினைத்துக்கொள்வதும் பெண்ணுக்கு ஆபத்து என்பதை முதன் முறையாகத் தேன்மொழி உணர்ந்தாள்.

தனக்குத் துளிக்கூட அவனைப் பிடிக்கவில்லை. இனிமேல் தன்னை டார்ச்சர் செய்தால் போலீசுக்குப் போய்விடுவதாக அவள் காட்டமாகக் கூறிவிட்டுச் செல்ல முத்து அதிர்ந்தான்.

ஒருபக்கம் காதல் தோல்வி. இன்னொரு பக்கம் அதை நம்பி அம்மா வருகை.

அம்மா வரும்போது தான் சொன்னது அனைத்தும் பொய்யாகிவிடுமே...? முத்து தனக்குள்ளாகக் குமைந்தான். தன்னை அந்தப் பெண் காதலிக்கவில்லை என்பது தெரிந்தால் அம்மா என்ன நினைப்பாள்? முத்துவுக்குத் தன் காதலை விடவும் அம்மாவின் வருகை நெருக்கடியைத் தந்தது.

மறுநாள் காலை முத்துவின் தற்கொலை கல்லூரியையே அதிரவைத்தது. தன்னைக் காதலித்தவள் இப்போது திடீரெனத் திருமணம் செய்ய மறுத்துவிட்டதாக முத்து எழுதிய கடிதம் போலிசின் கைகளில் சிக்கியது.

அன்று கல்லூரிக்கு டூவீலரில் வந்துகொண்டிருந்த தேன்மொழிக்கு செல்ஃபோனில் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதிர்ச்சி... அப்படியே கீழே வண்டியுடன் விழுந்தாள். கூட்டம் சூழ்ந்தது. அருணாச்சலம் பதற்றத்துடன் மருத்துவமனைக்கு ஓடி வந்தார்.

அன்று முத்துலட்சுமி கல்லூரிக்குள் போட்ட அழுகை கட்டடத்தையே நடுங்க வைத்தது.

அதிர்ச்சியில் தேன்மொழிக்கு முதல் முறையாக, நரம்பு மண்டலங்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருந்த காரணத்தால், இரண்டு மாதங்கள் என்ன நடந்தது என்றே அவளுக்கு நினைவில்லை. அருணாச்சலமும் மகளுக்கு எதுவும் தெரியாதபடிக்குப் பாதுகாத்துக் கொண்டார்.

(மீன்கள் துள்ளும்)

நூல் விமர்சனம்!

மண் ஆராதனை!

தமிழ் இலக்கிய வரம்புக்குள் பெருமளவில் ஆராயப்படாத, ஆனால், தனிச்சிறப்பு பெற்றவை நாட்டுப்புறப் பாடல்கள்!

தாலாட்டு முதல் ஒப்பாரி வரையிலான பாடல்கள் மட்டுமல்ல; தெம்மாங்கு, ஏற்றம், களையெடுப்பு... என்று தொழில் சார்ந்த பாடல்கள், வேடிக்கை, கேலி எனப் பல தரத்தவையாக அமைபவை இவை. இவற்றில் திருநெல்வேலி மாவட்டப் பகுதியில் பாடப்படும் பாடல்கள் பற்றிய ஆய்வாக அமைந்திருக்கிறது இந்த நூல்!

இந்தப் பாடல்களை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பகுக்கின்றனர். குழந்தைப் பாடல், தொழிற் பாடல், மணப்பாடல், பிணப்பாடல் மற்றும் வழிபாட்டுப் பாடல் என்னும் இந்தப் பிரிவுகளில் ஆசிரியரின் ஆய்வு நீள்கிறது.

அந்தப் பாடல்களின் வழியே சமூக அமைப்பு, வாழ்க்கை முறை, வழிபாடு, நம்பிக்கைகள், விளையாட்டு, மொழி வழக்கு, வட்டாரச் சொற்கள் என்று நீண்டுபரந்த ஆய்வு! ஆழ்ந்த நோக்கும், தெளிந்த தேடலும் நூலாசிரியரின் திறமைக்குச் சான்று!

திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள் என்று சொன்னாலும், திருநெல்வேலி பற்றியும், அங்கே புனல் கொழிக்கும் தாமிரபரணி பற்றியும் சங்க இலக்கியங்களின் பேச்சு; காவடிச்சிந்து, முக்கூடற்பள்ளு, குற்றாலக் குறவஞ்சி என்று நெல்லை மண்ணின் பெருமை பேசும் இலக்கியங்கள், தல புராணங்கள் என்று விவரிக்கிறார்.

புத்தகங்களுக்குள் மூழ்கித் தேடாமல், மக்களை நேரில் சந்தித்துப் பாடல்களைத் தொகுத்திருப்பதும், இதில் ஆசிரியர் கொண்டிருந்த முனைப்புக்கு ஒரு சாட்சி! கணவனை நினைத்துப் பாடுகிறாள் ஒரு மனைவி!

...குட்டையிலே கல் பொறுக்கி கோபுரங்கள் உண்டு பண்ணி

கோபுரத்தின் கீழே குயிலிருந்து வாடு தம்மே?

குட்டை இருக்கிறது; கோபுரம் இருக்கிறது; எதற்காக இது நடந்ததோ அந்தத் துணை இல்லை. மனத்தை தைக்கிற மாதிரி வெளிப்படுகின்றன வார்த்தைகள்! ஆலாபனை அவசியப்படாத அழுத்தமான சொற்செட்டு! இது, நம் நீண்ட பாரம்பரியத்தைப் பேசும் மண் ஆராதனை!



✱ சு.சண்முகசுந்தரம்



திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள்

முனைவர் சு.சண்முகசுந்தரம்,

வெளியீடு: காவ்யா, எண்.16, இரண்டாம் குறுக்கு வீதி, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 24, விலை ரூ.400/-

– ராகவன்



போலிருக்கிறதே!

முதலில் ஆச்சரியத்துடன் நெருங்கி வந்து பார்த்தார்கள். ''இதை நீங்கள்தான் உருவாக்கினீர்களா?'' என்று வியந்தார்கள்.

''எதற்காக இதைச் செய்தீர்கள்?'' என்று லேசாகச் சிரித்தார்கள். பிறகு, மெல்ல மெல்ல ரசிக்க ஆரம்பித்தார்கள். இப்போது பாட்ரிக் ஐரோப்பா, ஆசியா, வட அமெரிக்கா என்று டூர் சுற்றிக் கொண்டிருக்கிறார். ஒரு ஜாலிக்காக ஆரம்பித்த விஷயம், இன்று உலக அளவில் பேசப்படுகிறது, ரசிக்கப்படுகிறது.

ஆங்கிலத்தில் இதனை ட்விக் ஆர்ட் என்கிறார்கள். பாட்ரிக் வடக்கு கரோலினாவைச் சேர்ந்தவர். இயற்கை மீதான காதலே தன் கலைக்கு உந்துசக்தியாக இருக்கிறது என்கிறார். இயற்கையில் கிடைக்கும் பொருள்களை மட்டுமே பயன்படுத்தித் தன் கலைப்படைப்பை உருவாக்கவேண்டும் என்றும் முடிவுசெய்தார். தனது ஆசான்களாகப் பறவைகளிடம் இருந்து பாடங்கள் கற்றுக்கொள்ள ஆரம்

பச்சைப் பசேலென்று நீண்டிருக்கும் புல்வெளியில் திடீரெனச் சில கூடுகள் முளைத்திருக்கும். பறவைகள் தங்கும் கூடு அல்ல. மனிதர்கள் உள்ளே சென்று உட்கார்ந்து பேசும் அளவுக்குப் பெரியவை. குச்சிகள், சருகுகள், மர வேர்கள் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட கூடுகள் அவை. சில சமயம் இந்தக் கூடுகள் மரத்துக்குக் கீழே, அந்த மரத்தைத் தாங்கிப் பிடித்தபடி அமைந்திருக்கும்.

அதைக் கலை என்று அழைப்பதா; அல்லது இயற்கை நிகழ்வு என்று விட்டு விடுவதா; அல்லது அதிசயம் என்று பிரமிப்பதா? பாட்ரிக் டோகெர்டியின் படைப்புகளை எப்படி வகைப்படுத்துவது என்று தெரியாமல் தொடக்கத்தில் பலர் விழித்திருக்கிறார்கள். அதைவிடப் பெரிய பிரச்னை நிஜமாகவே இது படைப்புத் தானா என்னும் குழப்பம். மாடர்ன் ஆர்ட் தெரியும். இது அதையும் மிஞ்சிவிடும்



பித்தார். கூடுகள் அவரை ஆச்சரியப் படுத்தின. கூடுகளின் விதவிதமான கட்டு மானத்தை ஆராய்ந்தார். குறிப்புகள் எடுத் துக்கொண்டார். 1982-ல் தனது முதல் கூட்டை உருவாக்கினார்.

பிறகு வடிவம் மாற ஆரம்பித்தது. மனிதர்கள் சென்று வசிக்கும் அளவுக்கான கூடுகளை வகைவகையாக உருவாக்கிக் கொண்டே போனார் பாட்ரிக்.

இதுவரை இருநூறுக்கும் அதிகமான கூடுகளை இவர் உருவாக்கியிருக்கிறார். 'எங்களுக்கும் ஒன்று உருவாக்கிக் கொடுங்கள்' என்று கேட்டு அருங் காட்சியகங்கள் உலகம் முழுவதிலும் இருந்து தொடர்புகொள்ள ஆரம்பித் தனர்.

''நான் உருவாக்குபவை கூடுகள் அல்ல, சிற்பங்கள்'' என்கிறார் பாட்ரிக். ''மரக் கிளைகளும் வேர்களும், கொடிகளும் எனக்கு வரிகளாகத் தெரிகின்றன. அந்த வரிகளை எப்படி இணைக்கலாம் என்று என் மூளை யோசிக்கிறது. உடனே வேலையை ஆரம்பித்துவிடுவேன்'' என் கிறார். ஒரு வருடத்துக்கு எட்டு அல்லது பத்து வடிவங்களையே உருவாக்கு கிறார்.

சமீப காலமாகச் சில பயிலரங்கங்கள் நடத்தினார் பாட்ரிக். இது கலையே அல்ல, ஒரு பொழுதுபோக்கு மட்டுமே என்று சிலர் இணையத்தில் எழுதி வருகிறார்கள். ''நீங்கள் ஏதாவது சொல்லிக் கொண்டு போங்கள், நான் என் வேலையைப் பார்க்கிறேன்'' என்று ஒரு மூங்கில் கம்புடன் தனது அடுத்த கூட்டைப் படைக்கப் பறந்து சென்று கொண்டிருக்கிறார் பாட்ரிக்.


ஆத்தா எக்ஸ்பிரஸ்ல
எப்பவும் வித்தவுட்ல
ஏறிக்குவேன்...


உன் அப்பனோட
நான்வெஜ் ருசியையும்
சேர்த்து டப்பாவுல
அடைச்சா எங்களுக்கு
ஜாலி!


ஏன்யா! ஐந்நூறு
பேருக்கு பிரியாணி காசு
வாங்கினே கூட்டத்துக்கு
ஈ -காக்காகூட
வரலியே!


என் ஷூவுக்குக் கீழேதான் சொர்க்கம்!
இப்படி இழுத்து ஜோலி பார்க்கறது எம் மகனோட ஜாலிக்குதான்!
ஜாலி க்ளிக்!
இவ்வளவு ஆசையாய் செதுக்குனது எப்படி துயரமாகும்? எனக்கே ஜாலியாய் இருக்கே?

இளமைப்

இந்திரா பார்த்தசாரதி

நான் 1952ல், திருச்சி தேசியக் கல்லூரியில், 22 வயதில் ஆசிரியராகச் சேர்ந்தேன். இதற்குப் பிறகு, நாற்பது ஆண்டுகள், 1992 வரை, ஆண்டு தோறும் இளைஞர்களுடன்தான், ஆசிரியர் என்ற முறையில் உரையாடி வந்திருக்கிறேன். ஆகவே என் சரீரம் காலெண்டர் ஆளுமைக்கு உட்பட்டுப் பல மாறுதல்களை அடைந்திருந்தாலும் , என் மனம், தொடர்ந்து இளைஞர்களுடன் பழகி வந்த நட்பின் காரணமாகவோ என்னவோ, இன்னும் நரைகொள்ளவில்லை. அவர்களுடன் இன்றைய அவர்கள் மொழியில் பேசமுடியுமென்று தோன்றுகிறது.

'காதல் செய்வீர் உலகத்தீரே' - பாரதி

இன்றைய இளைஞர்களை ஈர்க்கின்ற தலைப்பு என்னவாக இருக்க முடியுமென்று பார்க்கும்போது, இப்பொழுது, சமீபகாலமாகத் தொடர்ந்து வரும் திரைப் படங்களின் பெயர்களைப் பார்த்தால் போதும். வெவ்வேறு விதமாகச் சொல்லப்பட்டாலும், பெரும்பான்மையான இத் திரைப்படங்கள் பேசுவதெல்லாம், 'காதல்', பற்றித்தான்.

உலகத்தில், நரை தோன்றாமல், அன்றும் - இன்றும் - என்றும் இளைமையாக இருந்து செங்கோலோச்சி வரும் கருத்து 'காதல்'. ஏவாள், ஆதாமுக்கு ஈடன் தோட்டத்தில் கொடுத்த ஆப்பிள் கனி இன்னும் இனித்துக்கொண்டே இருக்கிறது, பைபிள் வழியில் சொல்லப் போனால்.

'காதல்' பற்றி நம்முடைய இந்தியப் பாரம்பரியப் பார்வையே வேறுபட்டது. ஆண்-பெண் உறவில், நம்முடைய சமய, இலக்கியக் கருத்தோட்டத்தில் எந்த விதமான 'குற்ற மனப்பான்மையும்' (Concept of original sin) கிடையாது. நம்முடைய கடவுளர்களில் பலர் காதல் திருமணம் செய்துகொண்டவர்கள் தாம்.

'மாதர்' என்ற சொல்லுக்குப் பொருள் என்ன தெரியுமா?



1999ல் 'சரஸ்வதி சம்மான்' விருதையும் 2009க்கான 'பத்மஸ்ரீ' விருதையும் பெற்றவர். 'சங்கீத் நாடக அகாடமி' விருதையும் 'சாகித்ய அகாடமி' விருதையும் பெற்ற ஒரே தமிழ் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி.

பாலம்



'பெண்கள்' என்று சொல்வீர்கள். அதற்கு இன்னொரு பொருளும் உண்டு. தமிழனின் ஆதி நூலாகச் சொல்லப்படும் 'தொல்காப்பியம்' என்ன சொல்லுகிறது தெரியுமா?

'மாதர் - காதல்' '' 'மாதர்' என்ற சொல் குறிப்பினால் 'காதலை' உணர்த்தும். 'மாதர் நோக்கு' என்றால் 'காதல் நோக்கு' என்ற பொருள்'' என்கிறார் உரையாசிரியர்.

ஒரு கதை இங்கு நினைவுக்கு வருகிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பின், ராணுவ வீரர்களைப் போர் எப்படிப் பாதித்திருக்கிறது என்று கண்டறிய அவர்களை உளவியல் மருத்துவர்களிடம் அனுப்பினார்களாம்.

ஓர் இளம் ராணுவ வீரனைப் பார்த்து மருத்துவர் தம் கையிலிருந்த பேனாவைச் சுட்டிக் காட்டி, 'இது உனக்கு எதை நினைவுறுத்துகிறது?' என்று கேட்டார்.

'பெண்' என்றான் அவ்விளைஞன்.

மருத்துவர் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. சமாளித்துக்கொண்டு, அவருக்குப் பின்னாலிருந்த திரைச் சீலையைக் காட்டி, 'இது எதை உனக்கு ஞாபகப்படுத்துகிறது?' என்றார்.

'பெண்' என்றான் ராணுவ வீரன்.

இப்படி அவர் எதைப் பற்றிக் கேட்டாலும், அவ்விளைஞனின் ஒரே பதில், 'பெண்'..

இவ்வாறு அவன் சொல்வதைப் பொறுத்துக்கொள்ளமுடியாமல், 'உலகத்தில் பெண்ணைத் தவிர வேறு எதுவும் உனக்குத் தெரியாதா?' என்று அலுப்புடன் வினவினார் மருத்துவர்.

'என்னைப் போல் எந்த நிமிஷத்திலும் சாகலாம் என்ற நிலையில், பெண்வாடையே இல்லாமல், இரண்டாண்டுகள் போர்க்களத்தில் இருந்து விட்டுத் திரும்பி வாருங்கள். நீங்களும் இதே பதிலைத்தான் சொல்வீர்கள்' என்றானாம் அவ்விளைஞன்.

தொல்காப்பியக் காலத்தியத் தமிழகத்தில் இலக்கியத்தின் பாடுபொருள்கள் இரண்டு. 'அகம், புறம்'. அதாவது, காதலும், போரும். சங்க நூல்களில் பெரும்பான்மையானவை காத

லையும், போரையும் பற்றித்தான் பாடுகின்றன. போர் வருணனைகளைப் படிக்கும் போதுதான், அவை எப்படிப்பட்டக் கடுமையான போர்கள் என்று புரியும். மரணத்தை நேருக்கு நேர் சந்திப்பவர்கள் தாம், மனித வாழ்க்கையின் அநித்தியத்தைப் பற்றி அறிந்துகொள்ளமுடியும். ஆகவே, மரணத்தினின்றும் தப்பித்துக் கொண்டு வரும்போது, வாழ்க்கையைக் கணம் கணமாக வாழ்ந்து அநுபவித்துவிட வேண்டுமென்ற வெறி அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகின்றது. ஒரு பெர்ஷியக் கவிதை உண்டு. 'நிகழும் கணம், இறந்த கணத்தைப் பார்த்துக் கேட்கின்றது, யார் இந்த அயலான்?'என்று. இந்த இனிய அநுபவத்துக்குப் பெண் துணை தேவை. காதல் தேவை. காதலும் பெண்ணும் வேறல்ல. அதனால்தான், 'மாதர்' என்றால் 'காதல்' என்று உளவியல் குறிப்பாகத் தொல்காப்பியர் கூறுகின்றார் என்று கருத இடமிருக்கிறது.

கிரேக்கக் காவியமாகிய இலியட்டும்(Iliad), இராமாயணமும், காதலையும், போரையுந்தான் அடிநாதமாகக் கொண்டுள்ளன.

ட்ராய் என்ற குறுநிலத்தின் மன்னனாகிய ப்ரயாம் என்பவனின் மகன் பாரிஸ், அவன் கிரேக்கப் போர்த்தளபதி அகமெம்னன் தம்பி மெலெனஸ் என்பவனின் மனைவியும் பேரழகியுமாகிய ஹெலனைக் கடத்திக்கொண்டு வந்துவிடுகின்றான். கிரேக்க நாடு, ட்ராயின் மீது போர் தொடுக்கின்றது. இதுதான் இலியட்டின் கதை. ஆனால் இதைக் காதல் காவியம் என்று சொல்ல முடியாது. ஹெலன், பேரழகியாக இருக்கலாமே தவிர, அடிப்படையில் அவள் ஒரு "flirt" (தளுக்குக்காரி) என்று சித்திரிக்கிறார் ஷேக்ஸ்பியர், தம் 'ட்ராயிலஸ் அண்ட் க்ரெஸ்ஸிடா' (Troilus and Cressida') என்ற அற்புதமான நாடகத்தில். ஹெலனுக்காக நடந்த போரே, 'வெட்கப் படவேண்டிய செயலுக்காகப் புரிந்த ஆன்ம விரயம்' (expense of spirit over a waste of shame') என்கிறார் அவர்.

ஆனால், கம்பராமாயணத்தில் வரும் சீதையோ, ஹெலனைப் போலல்லாமல் 'தவம் செய்த தவமாம் தையல்'. வான்மீகத்தில் வரும் இராவணனைப் போல், இரக்கமற்ற வெறும் காமுகன் அல்லன் கம்பனின் இராவணன். சீதையைக் கண்டதும், அவன் அதுவரை அறிந்திராத



ஒரு மென்மையான காதல் உணர்வு அவனை ஆட்கொள்கின்றது. அசோக வனத்தில் அவள் உடலைச் சிறை வைத்ததோடு மட்டுமல்லாமல், அவன் மனத்தில் விரிந்த சீதை என்ற ஓர் அழகிய கனவை 'இதயமாம் சிறையில்' வைக்கின்றான். அவன் இறந்த பிறகு, அவன் மனைவி மண்டோதரியும், 'சானகியை மனச் சிறையில் கரந்த காதல் உள்ளிருக்குமென நினைத்து உள் புகுந்து தடவியதோ ஒருவன் வாளி (அம்பு)' என்று புலம்புவதின் மூலம் இதை உறுதி செய்கின்றாள்.

இந்தக் காதலின் காரணமாகத்தான், 'சீதையை விட்டு விடு' என்று அவன் தம்பிகளும், மகனும் கூறியபோதுகூட 'என்னையே நோக்கி நான் இந்நெடும் பகைத் தேடிக்கொண்டேன்' என்று அவனால் சொல்ல முடிந்தது.

அவன் சீதையின்பால் இத்தனைக் காதல் கொள்ளும்படிச் செய்தவர் யார்? காதல் நோய்க்கு அடிமையாகிய இன்னொருவர்தான். அவள் யாரென்றால், அவன்தான் அவனுடைய சகோதரி சூர்ப்பனகை. இராமனைக் கண்டதும் அவள் அவன் மீது காதல் கொள்

காதலும் பெண்ணும் வேறல்ல. அதனால்தான் 'மாதர்' என்றால் 'காதல்' என்று உளவியல் குறிப்பாகத் தொல்காப்பியர் கூறுகின்றார்.

கின்றாள். இலக்குவனால் மான பங்கம் செய்யப்பட்ட பிறகு, இராவணனிடத்துச் சென்று, சீதையின் அழகைச் சித்திரித்துக் கூறி, அவளை அவன் அடைவதுதான் பொருத்தமானது என்கிறாள்.. சீதையை அவள் கற்பனை நயத்துடன், அழகுணர்வு ஆவேசத்தில், வருணித்துச் சொல்லும்போது, அவன் மனக் கண் முன் அவளை ஆக்ரமித்து நிற்பது, அவள் காதல் கொண்ட இராமனின் உருவம். அவளுடைய சொல்லாற்றல் உருவாக்கிய உருவெளித் தோற்றத்தைக் கண்டு, இராவணன் காதல் ததும்பக் கேட்கிறான்; ' இவளா சீதை?' சூர்ப்பனகை கூறுகிறாள்: 'இல்லை இவன் இராமன்'. என்ன அழகியல் அடிக்கோடிட்ட உளவியல் பார்வை!

இன்னொரு மென்மையான காதல் சித்திரம் 'பெரியாழ்வார் திருமொழியில்' வருகிறது.

அநுமன் அசோக வனத்தில் சீதையைச் சந்திக்கின்றான். அவன் இராமனின் தூதுவன்தானா அல்லது இராவணனால் அனுப்பப்பட்டவனாக இருக்கக்கூடுமோ என்று சீதை சந்தேக்கின்றாள். அப்பொழுது இராமனின் தூதுவன்தான் என்பதை நிறுவ அநுமன் இராமனுக்கும், சீதைக்கும் மட்டும் தெரிந்திருக்கக்கூடிய ஒரு பிரத்யேகமான காதல் நிகழ்வைக் கூறுகிறான்.

'அல்லியம்பூ மலர்க்கோதாய்!
அடிபணிந்தேன் விண்ணப்பம்
சொல்லுகேன் கேட்டருளாய்
துணைமலர்க்கண் மட மானே!
எல்லியம்போது இனிதிருத்தல்
இருந்ததோர் இடவகையில்
மல்லிகை மாமாலைகொண்டு
அங்குஆர்த்ததும் ஓர்அடையாளம்.'

'கொடுமையான காட்டில், ஒரு அந்திப் பொழுதில், நீயும் இராமனும் தனித்திருக்கும்போது, நீ அவனை நறுமணம் மிகுந்த மல்லிகை மாலையினால் கட்டி அணைத்தாய், நினைவிருக்கிறதா? இராமன் என்னிடம் கூறிய செய்தி இது.'

அற்புதமான காதல் காட்சியைச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுகிறார் பெரியாழ்வார்!

(அடுத்த வாரம் - நட்பு)

ஜாலியா ஒரு கப் காஃபி!

சிக்காகோ நகரின் யூனியன் ஸ்டேஷனில் புறப்படத் தயாராகயிருக்கும் மின்சார ரயிலைப் பிடிக்க ஓடிக்கொண்டிருக்கும் ஒரு பெண், தன்னுடைய அவசரத்திலும் அந்தக் கடையின் 'ரஷ்' கவுன்ட்டரில் கார்டைக்காட்டி, ஒரு கப் காஃபி வாங்கிக் கொண்டு ஓடுகிறார். நியூயார்க் நகருக்கு வெளியே அந்த நீண்ட ஹைவேயில் சென்றுகொண்டிருக்கும் கார், வலது புறம் தெரியும் போர்டைப் பார்த்தவுடன், வேகம் குறைந்து அந்த ட்ரைவின் கவுன்ட்டர் அருகே செல்கிறது. ஓட்டுபவரின் கரம் நீண்டு, காரின் சீட் அருகே பொருத்திக் கொள்ளும் வசதியுள்ள கப்பில் ஒரு காஃபி வாங்கிக்கொண்டு பறக்கிறது. ஸான் பிரான்ஸிஸ்கோ நகரின் பரபரப்பின் சந்தடி எதுவும் கேட்காத அந்த பாரிஸ்டாவில், தனது லாப்டாபில் மூழ்கிக் கிடக்கும் அந்த இளைஞன் அருகில் ஒரு பெரிய கோப்பை காஃபி. இப்படி அமெரிக்க தேசமே இந்த ஸ்டார்பக் நிறுவனத்தின் காஃபிக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறது.

காஃபி பயிரே விளையாத தேசமான அமெரிக்காவை உலகில் அதிகம்பேர் காஃபி அருந்தும் நாடாக உயர்த்தியதில் (87% மக்கள்) ஸ்டார் பக் நிறுவனத்திற்கும் ஒரு கணிசமான பங்கு உண்டு. அமெரிக்கா முழுவதும் 11200 கடைகளும், உலகின் 43 நாடுகளில் பல கிளைகளுமாக ஒரு தனி சாம்ராஜ்யமாகியிருக்கிறது

''சூடா ஒரு கப் காஃபி கொண்டு வாங்க'' என்று இவர்கள் கடையில் ஆர்டர் செய்யமுடியாது. 20வகையான காபியை 160 வித முறைகளில் தயாரிக்கிறார்கள். அமெரிக்க தேசத்தின் பல பகுதி மக்களின் ருசிக்கேற்ப பல காஃபி வகைகளைப் பட்டியலிட்டிருக்கிறார்கள். அந்த மெனுவிலிருந்து தேர்ந்தெடுப்பதை உடனடியாக தயாரித்துக் கொடுக்கிறார்கள், இதற்காக இந்த நிறுவனத்தின் கல்லூரியில் பயிற்சி பெற்று 'காஃபி மாஸ்டர்' பட்டம் பெற்றவர்கள் பணியிலமர்த்தப்பட்டிருக்கிறார்



கள். அதிக காஃபி உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் என்பதை மறுக்கும் இவர்கள், தங்கள் தயாரிப்பில் எந்த வகையில் - எந்தமாதிரிப் பாலில் - எவ்வளவு கொழுப்பு, எவ்வளவு சர்க்கரை, எவ்வளவு கார்போஹைட்ரேட் என்பதைப் பட்டியலிட்டுத் தேவையானதை மட்டும் தேர்ந்தெடுத்து ஆர்டர் செய்யுங்கள் என்று வாடிக்கையாளருக்கு அறிவுறுத்துகிறார்கள். ''60 லிருந்து 110 வரையிலான கலோரியில், 11 கிராம் கொழுப்புச்சத்துடன், திக்காக சர்க்கரை போடாமல், ஆனால் தித்திப்புடன், கொஞ்சம் விட்டமின் ஈ சேர்க்கப்பட்ட ஆர்கானிக் பாலில் ஒரு சின்ன கப் காஃபி தாருங்கள்'' என்று கூட ஆர்டர் செய்யலாம். இதற்காக இவர்கள் விற்கும் காஃபிகளில் இருக்கும் கலோரி, கொழுப்பு, சோடியம், சர்க்கரை, கால்சியம், இரும்பு, காஃபையன் போன்றவைகளின் அளவுகளைக் குறிப்பிட்டு டயட்டிஷியன் தருவதுபோல சார்ட் தருகிறார்கள். இதை ஆராய்ச்சி செய்து மண்டையை உடைத்துக் கொள்ளும் கஸ்டமர்களுக்கு உதவி செய்யத் தனி பணியாளர் களுமிருக்கிறார்கள். இதைத் தவிர, சட்டென்று தேர்ந்தெடுக்க 200 கலோரிகளுக்கு குறைவான 20 சுவையான தேர்வுகள் என்ற குட்டி லிஸ்ட்டும் தருகிறார்கள்.



வேலைசெய்ய சிறந்த பணியிடம் என ஃபார்ச்சூன் 100 நிறுவனத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இந்த நிறுவனத்தில் வேலை செய்வோர் ஒரு லட்சத்துக்கும் மேல். கடந்த ஆண்டின் வர்த்தகம் 10,000 பில்லியன் டாலர்களுக்கும் மேல். இந்த நிறுவனத்தின் வெற்றியைப் பற்றிய கேஸ் - ஸ்டடியை உலகெங்கும் எம்.பி.ஏ மாணவர்கள் படிக்கின்றனர்.

...ம்ம், இங்கேயும் கால் டம்ளர் காஃபியில் முக்கால் டம்ளர் நுரையில்லாம காஃபி பாக்கியம் கிடைக்க ஒரு பயிற்சி மையம் வந்தா தேவலை!



- ரமணன்

உலகப் பெண்கள் தினத்தை ஒட்டி ஒருவழியாக 'பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் ஒருபங்கு பெண்கள்' மசோதா ராஜ்யசபாவில் நிறைவேறியது. இதற்குள் எத்தனை அமளிகள்! 'இதற்கென்ன இத்தனை கலாட்டா' என்று ஸேஷெல்ஸ்-வாசிகள் வியப்படைந்திருந்தால் வியப்பில்லை. காரணம் இந்த விதத்தில் சத்தமின்றிஒரு சாதனையைத் தொடர்ந்து செய்து வருகிறது ஸேஷெல்ஸ்.

ஸேஷெல்ஸ் பெண்களுக்குத் தனி கௌரவம் உண்டு. அரசியல், சட்டம், பொருளாதாரம் இப்படி எல்லாக் கோணங்களிலுமே ஆண்களுக்கு உள்ள அத்தனை உரிமைகளும் பெண்களுக்கும் உண்டு. அந்த நாட்டின் மிகப் பெரும் கல்வி நிறுவனமான ஸேஷெல்ஸ் பாலிடெக்னிக்கில் பாதிப் பேர் பெண்கள்தான். நாட்டின் வெளியுறவு அமைச்சராகவும், திட்ட அமைச்சராகவும் பெண்கள் இருந்திருக்கிறார்கள்.

1993ல் மனித உரிமைகள் அமைப்பு, 'உலகிலேயே தனது பாராளுமன்றத்தில் மிக அதிகப் பெண்களைக் கொண்ட நாடு' என்று ஸேஷெல்லை அறிவித்தது. 45.8 சதவீத பாராளுமன்ற உறுப்பினர்கள் பெண்கள்தான்.

குடும்பங்களில் கூட அம்மாவுக்கு 'வாய்ஸ்' அதிகம். கணக்கு வழக்குகளைப் பார்ப்பது அவர்கள்தான். ஆப்ரிக்க கண்டத்தின் மிகச்சிறிய நாடு ஸேஷெல்ஸ். இந்தியப் பெருங்கடலில் உள்ள தீவுக்





ஸேஷெல்ஸ் பறவைத் தீவு!

கூட்டம். ஆப்ரிக்க நாடுகளிலேயே மிகக் குறைந்த மக்கள்தொகையைக் கொண்டதும் இதுதான்.

ஸேஷெல்ஸ் குடியரசு 115 தீவுகளை அடக்கியது. (அவற்றில் 41 கிரானைட் தீவுகள்). மொத்த நிலப்பரப்பு 455 கிலோ மீட்டர் மட்டுமே.

பூமத்திய ரேகைக்கு நான்கிலிருந்து பத்து டிகிரி தெற்குப் புறமாக உள்ளது.

சரித்திரப் புகழ்பெற்ற நாடு ஸேஷெல்ஸ். ஆப்ரிக்காவுக்கும் ஆசியாவுக்கும் நடந்த கப்பல் வாணிபத்தில் வணிகர்கள் தங்கிச் செல்ல ஸேஷல்ஸ் பயன்பட்டது. இதன் காரணமாகவே, கடற்கொள்ளையர்களின் கைவண்ணமும் இங்கு மிக அதிகம். கடல் சூழ்ந்த இந்த நாடு ரத்த ஆறுகளை அடிக்கடி சந்தித்துள்ளது.

பிரபல கடற்கொள்ளையன் 'பைரேட் ஆலிவர் வஸ்ஸெயர்' என்பவன் கொள்ளையடித்துச் சேர்த்த மாபெரும் புதையல் (சுமார் பதினாறு கோடி டாலர் மதிப்பு) இன்னமும் கூட ஸேஷல்ஸ் மண்ணின் வட பகுதியில் எங்கோ புதைந்திருக்கிறதாம். போர்த்துக்கிசிய அட்மிரல் வாஸ்கோடகாமாகூட இங்கு தங்கிச் சென்றிருக்கிறார்.

இப்படி சரித்திர சாயம் பூசிக்கொண்டிருந்தாலும், வேறொரு கோணத்தில் ஸேஷெல்ஸ் ஜுனியர் தேசமும் கூட! இங்கு மக்கள் தொடர்ச்சியாக வசிக்கத் தொடங்கியது 1770லிருந்துதான். இப்படி முதலில் தங்கத் தொடங்கியவர்கள் ஃபிரெஞ்சுக்காரர்கள். பிறகு இந்தியர்கள், ஆப்பிரிக்கர்கள் என்று பலரும் குழுமத்





தொடங்கினர்.

ஆனால் வாட்டர்லூவில் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட பிறகு ஸேஷெல்ஸ் தீவுகள் ஃப்ரான்ஸ் அதிகாரத்திலிருந்து நீங்கியது. 1814ல் பாரிஸ் ஒப்பந்தத்தின்படி ஸேஷெல்ஸ் பிரிட்டனுக்குத் தாரை வார்க்கப்பட்டது. அப்போது ஸேஷெல்ஸின் மக்கள் தொகை வெறும் 3,500தான். மேலும் பத்து வருடங்களுக்குப் பிறகுதான் இது இருமடங்கானது. (இன்று அந்த எண்ணிக்கை 81,000ஐ தாண்டி விட்டது). விக்டோரியாவைத் தலைநகராகக் கொண்ட ஸேஷெல்ஸ் பெரும் பொருளாதாரச் சரிவை அந்தக் காலகட்டத்தில் சந்தித்தது. காரணம் அடிமை முறையை அது ஒழித்ததுதான்.

ஆரம்பத்தில் ஸேஷெல்ஸ் அடிமைகள் ராஜ்ஜியமாக விளங்கியது.

ஒரு காலகட்டத்தில் ஸேஷெல்ஸ் நாட்டில், எஜமானர்களைவிட அடிமைகளின் எண்ணிக்கை அதிகமாக ஆகிவிட்டது. 1827 கணக்கெடுப்பின்படி 6,638 அடிமைகளும், 685 முதலாளிகளும் இருந்தனர்!

வில்லியம் வில்பெங்ஃபோர்ஸ் என்பவரால் இங்கு துவங்கப்பட்ட அடிமை எதிர்ப்பு இயக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் வலிமை பெற்றது. ஒருவழியாக 1835ல் அடிமை முறை இங்கு அகற்றப்பட்டது.

பிரதம மந்திரி ஃபிரான்ஸ் ஆல்பர்ட் ரெனே நாட்டின் குடியரசுத் தலைவர் ஜேம்ஸ் மன்சாம் என்பவரைப் பதவிநீக்கம் செய்து, தானே நாட்டின் தலைவரானார்.

1991 வரை ஸேஷெல்ஸ் மக்கள் முன்னேற்றக் கட்சி என்ற ஒரே கட்சிதான் இந்த நாட்டில் இருந்தது. 1991ல் ஒருவழியாக ஜனாதிபதி ஃப்ரான்ஸ் ஆல்பர்ட் ரெனே பல கட்சிகள் இருக்கலாம் என்று அறிவித்தார். இதைத் தொடர்ந்து 1993ல் நடைபெற்ற தேர்தலில் அதே ஜனாதிபதிதான் மீண்டும் வென்றார். 2003 தேர்தலிலும் வெற்றி தொடர்ந்தது. ஜூன் 2004ல் தானாக முன்வந்து இந்தப் பதவியை ஜேம்ஸ் மிஷேல் என்பரிடம் ஒப்படைத்தார்.

சுற்றுலா, மீன்பிடித் தொழில் இந்த இரண்டையும்தான் ஸேஷெல்ஸ் தனது வருமானத்துக்கு நம்பியிருக்கிறது.

உலகில் வேறு எந்தப் பகுதியிலும் காணமுடியாத பறவைகளை (Seychelles bush warbler, bare&legged scops owl paradise fly&catcher போன்றவை) இந்தப் பறவைத் தீவில் காணமுடியும். புதிய கடல் மார்க்கங்



களைக் கண்டறிந்த பிரபல மார்க்கோ போலோ ஸேஷெல்ஸில் தங்கிச் சென்றிருக்கிறார். அப்போது ஒரு புராணப் பறவையைக் கண்டதாக அவர் கூறினாராம். அதாவது யானையைக் கூடத் தூக்கிச் செல்லும் வலிமை படைத்த பறவை!

ஆனால் எந்த வகைப் பறவைகளையும் ஸேஷெல்ஸுக்குள் பிற நாட்டினர் எடுத்து வர அனுமதி இல்லை.

'அட ஒருமுறை ஸேஷெல்ஸுக்கு விசிட் செய்யலாம் போலத் தோன்றுகிறதே. விசா பெறுவதில் சிக்கல் எதுவும் இருக்காதே' என்று நீங்கள் கேட்டால் 'நிச்சயம் இருக்காது' என்பதுதான் பதில். காரணம் ஸேஷெல்ஸ் செல்ல விசாவே தேவையில்லை! பாஸ்போர்ட், சென்று வருவதற்கான டிக்கெட்டுகள், ஸேஷெல்ஸில் தங்கும் முகவரி, தங்குவதற்குத் தேவையான பணம் உள்ளது என்பதற்கான சான்று இவற்றை சரிபார்த்துவிட்டு, உடனே 'விசிட்டர் லைசன்ஸ்' ஒன்றை வழங்கி விடுகிறார்கள். பொதுவாக மூன்று மாதங்கள் வரை தங்க அனுமதி உண்டு.

* மிகச் சிறிய நாடுகள் பட்டியலில் இடம் - 36. மிகக் குறைவான மக்கள் தொகை கொண்ட நாடுகளில் இடம் - 38

* மிக அதிகமானோர் ரோமன் கத்தோலிக்கர்கள். பிரிட்டிஷார் இங்கு ப்ராடெஸ்டென்ட் மதப் பிரிவை அதிகரிக்க மிக முயற்சி செய்தும் முடியவில்லை.

* இத் தீவுகளை முதலில் கண்டுபிடித்தவர் வாஸ்கோடகாமா. வருடம் 1502.

* ஸேஷெல்ஸ் நாடு இந்து மாக்கடலில் 14 லட்சம் கிலோமீட்டர் வரை பரவிக் கிடக்கிறது. அந்த அளவு தீவுகள் தள்ளித் தள்ளி உள்ளன.

* 44 ஆண்டுகள் ஃபிரான்ஸிடமும், 162 ஆண்டுகள் பிரிட்டனிடமும் அடங்கிக் கிடந்தது ஸேஷெல்ஸ்.

* இயற்கைச் சீற்றங்கள் மற்றும் அபாயங்கள் காணப்படாத உலகின் மிகச் சில இடங்களில் ஸேஷல்ஸும் ஒன்று.

* 1893ல்தான் தந்திச் சேவை இங்கு வந்து சேர்ந்தது. இதற்காக ஜன்ஜிபாரிலிருந்து ஸேஷல்ஸ் மற்றும் மௌரீஷியசுக்கு கடலுக்கு அடியில் கம்பிகள் நிறுவப்பட்டன.

* ஆதாம் ஏவாள் வாழ்ந்த ஈடன் தோட்டம் என்பது ஸேஷல்ஸ் பகுதியில் உள்ளது என்ற நம்பிக்கையும் நிலவுகிறது.

(அடுத்த இதழில் - சதாம் உசேனின் நெருப்பு வளையத்துக்குள் வந்த நாடு)



தர்ஷிணிப் பூ



அந்தப் பெயரை அப்பா உச்சரிக்கும் போதெல்லாம் இனம் புரியாத சந்தோஷ அலைகள் என்னுள் எழும். வனக் காவலராக பாபநாசத்தில் வேலை செய்கிறார் அப்பா. எங்கள் வீடும் மலையடிவாரத்தில்தான் இருக்கிறது. பாணதீர்த்தம் அருவியில் குளிக்க வரும் கூட்டத்தை கட்டுப்படுத்துவதே அவரது வேலை. பலமுறை அப்பாவுடன் அருவிக்குச் சென்றிருக்கிறேன்.

போன மாதத்தில் ஒருநாள் இரவு வீடு திரும்பிய அப்பா, அம்மாவிடம் முதன் முதலாய் அந்தப் பெயரை உச்சரித்தார் . அதுவரை அப்படியொரு பெயரை நான் கேட்டதேயில்லை. அம்மாவிடம் வேறெதுவும் சொல்லாமல் உறங்கிவிட்டார் அப்பா. அதன்பிறகு அப்பாவின் நடவடிக்கைகளை யாராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. பின்னிரவில் வெளியில் போவதும் திரும்பி வருகையில் மலர்ந்த முகத்துடனும் வருகின்ற அப்பா தூக்கம் தொலைத்த, சோகம் கவ்விய முகத்துடன் மாறியிருந்தார்.

மந்திரமாய் அப்பா முணுமுணுக்கும் அந்த பெயருக்குச் சொந்தமானவரை சந்தித்துவிட துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தேன். ஒரு சனிக்கிழமை இரவு, உறக்கம் வராமல் புரண்டுகொண்டிருந்தபோது அப்பா வெளியே கிளம்புவது தெரிந்தது. அவருக்குத் தெரியாமல் தொடர்ந்து செல்ல முடிவெடுத்தேன். அம்மா நல்ல உறக்கத்தில் இருந்தாள். டார்ச்சை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பினார் அப்பா. மெல்லப் பின் தொடர்ந்தேன். குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது. பல முறை அருவிக்குப் போய் வந்த வழி என்பதால் இரவிலும் சரியான பாதையில் பயணிக்க முடிந்தது.

அவர் பார்வைக்குப் படாதவாறு, சற்று தொலைவிலிருந்த பாறைக்குப் பின்னால் மெதுவாக மலையில் ஏற ஆரம்பித்தேன். மனிதர்கள் தனது தேவைக்கு இன்னும் நுழையாத இடமாக இருந்தது. இரவில் தனியாக இங்கே வருவது ஆபத்தானது. உள்ளுக்குள் இதயம் படபடத்தாலும், அப்பா யாரைப் பார்க்க இந்த இரவில் வருகிறார் என்கிற ஆவல் என் பயத்தை ஒதுக்கியது. வேகமாக அருவி விழுகின்ற திசைநோக்கி நடந்தேன். அருவியில் நீர்வரத்து அதிகமாக இல்லை என்றபோதும் அது விழுகின்ற சத்தம் அதிகமானதாக இருந்தது. அவ்வனத்திலிருந்த மிகப்பெரிய மரத்தின் அடியில்தான் அந்த அபூர்வமான காட்சியைக் கண்டு, முதுகுத் தண்டு சில்லிட அங்கேயே நின்றுவிட்டேன்.

அந்த மரத்தடியில் ஒரு பெண் படுத்திருந்தாள். இதுவரை இப்படி ஓர் அழகியை நான் பார்த்ததே இல்லை. இன்னும் அருகில் சென்று ஒரு மரத்தின் பின்னால்



நிலாரசிகன்

நின்று பார்த்தபோது அவளது முகம் மிகத்தெளிவாகத் தெரிந்தது. அந்தப் பேரழகான முகத்தில், சொல்லமுடியாத வலியின் ரேகைகள் தென்பட்டன. அவளது அழகிய கண்களில் நீர் வழிந்துகொண்டிருந்தது. எதற்காக அழுகிறாள் இவள்? அப்போதுதான் அந்த விசித்திரத்தைக் கண்டேன். அவளது முதுகில் சிறகுகள் இருந்தன. வலியில் அவள் அச்சிறகுகளை அசைத்தபடி இருந்தாள். அவளது காலில் வெண்நிறத் திரவம் வழிந்துகொண்டிருந்தது. முதன் முதலாய் இப்பொழுதுதான் வெள்ளை நிறத்தில் ரத்தத்தைக் காண்கிறேன். அப்பா அவளுக்கு வைத்தியம் பார்த்துக்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அவளது முனகல் நின்றுபோனது. சிறகுகள்

அசைவற்றுக் கிடந்தன. அவள் கண்கள் மூடியிருந்தன. அப்பா அவளது கருநிறக் கூந்தலை சில நிமிடம் வருடிவிட்டு அங்கிருந்து கிளம்பினார். இரவுப்பூச்சிகளின் சப்தம் அதிகரிக்கத் தொடங்கியது. உறங்கிக்கொண்டிருக்கும் அவளையே பார்த்தபடி இருந்தேன். இன்னும் சற்று நேரத்தில் விடிந்துவிடும்; அப்போது இவள் எங்கே செல்வாள்? சிறகுகள் இருப்பதால் பறந்துவிடுவாளா? அவளிடம் போய்ப் பேசலாமா? குழப்பத்தில் தவித்தபோது அவள் கண் விழித்தாள். எழுந்து, தன் காலில் காயம்பட்டிருந்த இடத்தைத் தடவிக் கொடுத்தாள். பின் யானைக்கால் மரத்துக்கு முன்பாக நின்று ஒரு முறை சிறகுகளை அடித்தாள்.சட்டென்று இரண்டாகப் பிளந்தது அந்த மரம். அதனுள் அவள் உள் நுழைந்ததும் மரம் மீண்டும் இணைந்து கொண்டது. நான் மயக்கம் வரும் நிலையில் இருந்தேன். தலைசுற்றியது. அங்கிருந்து, படகை நோக்கி மிக வேகமாக ஓடத் துவங்கினேன்.

மறு நாள் நண்பர்களிடம் நான் பார்த்த விஷயங்களைச் சொன்னபோது சிரித்தார்கள். எல்லாம் வெறும் கனவு என்றார்கள். இரவு அப்பாவிற்கு முன்பே போய் விட தீர்மானித்துப் பதினோரு மணிக்குக் கிளம்பினேன். வனத்தில் அம்மரம் சலனமற்று நின்றிருந்தது. சருகுகள் நொறுங்க நான் நடக்கும் சப்தம் கேட்டதும் அந்தக் குரல் கேட்டது.

''வந்துவிட்டீர்களா?'' அவளது குரல். பதிலேதும் பேசாமல் நகராமல் அங்கேயே நின்றேன். மீண்டும் அந்த அற்புதமானவளின் குரல் கேட்டது ''வந்துவிட்டீர்களா?''. மூச்சின் சப்தம்கூட வெளிக்கேட்கா வண்ணம் அமைதியாய் நின்றிருந்தேன். நான்கு நிமிட மௌனத்திற்குப் பின் மரம் இரண்டாகப் பிளந்தது. உள்ளிருந்து வந்தவள் என்னைக் கண்டதும் திடுக்கிட்டாள். உடனே திரும்ப எத்தனித்தவளிடம் -

''என்னைப் பார்த்துப் பயப்படாதீர்கள் நேற்று உங்களுக்குச் சிகிச்சை அளித்தவரின் மகன் நான்''

மெல்லத் திரும்பி என்னிடம் வந்தாள்.

''அவரை எங்கே?''

''அப்பா இனிதான் வருவார்''

''நீங்கள் ஏன் என்னைப் பார்க்க வந்தீர்கள்?''

''முதல்முறை உங்கள் பெயரை அப்பா உச்சரித்தபோதே எனக்கு உங்களைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அதனால்தான் வந்தேன். நீங்கள் யாரென்று தெரிந்து கொள்ளலாமா?''

''நான் வனப்பூக்களின் அரசி.''

''பூக்களின் அரசியா? இதெப்படி சாத்தியம்? உங்களுக்குச் சிறகுகள் இருப்பதைப் பார்த்தவுடன் ஏதோ வனதேவதை என்று நினைத்தேன்''

''இரவில் மட்டுமே இந்த உடலில் என்னால் உலவ முடியும். வனம் என் தாய் என்பதால் நானும் ஒரு வகையில் தேவதைதான்.''

''பகலில் என்ன ஆகும் இந்த சரீரத்துக்கு?''

''பகலில் இந்த மரத்தைச் சுற்றியிருக்கும் கொடியில் பூவாகக் கிடப்பேன்''

''உங்கள் பெயரை உச்சரிக்கும்போதெல்லாம் என்னுள் இனம்புரியாத உணர்வுகள் ஏற்படுகிறது. யார் வைத்தது ''தர்ஷிணிப்பூ'' என்கிற இந்த அற்புதப்பெயரை?''

''தர்ஷிணி என்றால் அழகு என்று பொருள். உங்கள் அப்பாதான் இந்தப்

"உம் மருமக, எதைச் சொன்னாலும் எட்டிக்குப் போட்டியா செய்றான்னு எப்படிச் சொல்றே?"
"கூட்டுப் பெருங்காயம் வாங்கிட்டு வான்னு சொன்னா, கழித்தல் பெருங்காயம்தான் வாங்குவேன்னு சொல்லிட்டுப் போறாளே!"
- ஏ.ஹம்சத்

பெயரை எனக்குச் சூட்டினார்''

''ஓ என் அப்பா வைத்த பெயரா'' எனக்குக் கோவிந்தசாமி என்று பெயர் வைத்ததற்காக மனத்துக்குள் அப்பாவைத் திட்டினேன்.

''சரி,என் அப்பாவை எப்படி சந்தித்தீர்கள்?''

''சில நாட்களுக்கு முன் இரவில் அருவியில் குளித்துக்கொண்டிருந்தேன். அந்நேரம் உங்கள் அப்பா என்னைப் பார்த்துவிட்டு அருகில் வந்தார். எனக்கு மனிதர்கள் என்றாலே பயம். ஆனால் அவர்



என்னைக்கண்டு பயப்படவே இல்லை. அன்பாகப் பேசினார்.''

''மனிதர்களைக் கண்டால் மட்டும்தான் உங்களுக்குப் பயமா?''

''என் விலங்குத் தோழர்களையும், எங்கள் இருப்பிட எழிலையும் அழிக்கும் அராஜகவாதிகள் அவர்கள். எனக்கு மனித இனத்தில் பிறந்ததற்காக வெட்கமாக இருந்தது. என் மௌனத்தைப் புரிந்துகொண்டவள்போல் அவளே தொடர்ந்தாள்.

''சில நல்ல மனிதர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். உங்கள் அப்பாவைப் போல''

அப்பாவை நினைத்துப் பெருமையாக இருந்தது. அம்மா கொடுத்துவைத்தவள்.

''சரி நான் கிளம்புகிறேன். இன்னொரு நாள் வருகிறேன்''

''சரி உங்கள் பெயரைச் சொல்லவே இல்லையே''

''கோவிந்தசாமி''

அவள் புன்னகைத்தபடி விடைகொடுத்தாள். திரும்பும் வழியெங்கும் அவளை நினைத்துக்கொண்டே இருந்தேன்.

அந்தக் காட்சியும் பேச்சும் கடும் காய்ச்சலில் என்னை இரண்டு நாட்கள் கிடத்தியது. வீட்டருகே வந்தமரும் எல்லாப் பறவையின் முகமும் அவளைப் போலிருந்தது. அதே நேரம் அப்பாவின் நடவடிக்கைகள் முற்றிலும் மாறியிருந்தன. இரவில் வீடு திரும்பும் அவரது முகம் இப்போது கோரமாகத் தோன்றியது. எப்போதும் அமைதியாகத் தோன்றுபவர், இந்த இரு நாட்களில் மிகுந்த படபடப்புடன் காணப்பட்டார்.

இரவில் அவளைப் பார்ப்பதற்காகக் கிளம்பினேன். அவளுக்குப் பரிசாக ஏதாவது தரவேண்டும் என்று தோன்றியது. அருவிக்கரையை அடைந்து யானைக்கால் மரத்தின் அருகே சென்றபோது வித்தியாசமான தொரு உணர்வு என்னை ஆட்கொண்டது.

''தர்ஷிணிப்பூ'' பதிலில்லை.

மீண்டும் அழைத்தேன், ''தர்ஷிணிப்பூ''. பதில் இல்லை. சுற்றி வரப் பார்த்தேன்.

பூட்ஸ் கால் தடங்கள், ரத்தம் வடிய தந்தம் பிடுங்கப்பட்டு செத்துக்கிடந்த யானை, அடுப்பு மூட்டிய அடையாளமாய் சில கரித்துண்டுகள், தரையெல்லாம் தர்ஷிணியின் இறகுகள்.... உறைந்து சிலையாகிப்போனேன். எப்போதும் பெரும் சத்தத்துடன் விழும் அருவி, இன்று சத்தமின்றி விழுந்துகொண்டிருந்தது. இப்போது அது என் இனத்தின் குறியீடாயிருந்தது. ○



தாயான ஆண்டவனைத் தொழுதால் இன்பம்!

ஒரு கோடி இன்பத்தை இயற்கை அன்னை
வானென்றும் வண்ண மலர்ச் சோலை யென்றும்
விருந்தாக்கிப் படைத்தாலும் அனுப விக்கும்;
தத்துவத்தை அறிந்தாரோ பேதை மக்கள்;
பெரும் பணத்தின் விளைச்சலிலோ இன்பம்!
காதல்
மெய்ப்பாட்டுக் கிளர்ச்சியிலோ! மயக்கும் கள்ளோ!
புரிதுயிலோ! படக்காட்சித் தொடரில் தானோ!
புவியடங்கும் கைப்பேசி அலையின் மூச்சோ!

பூமழலைத் தேன்மொழிதான் நெஞ்சைக் கிள்ளும்;
பொக்கை வாய்ச் சிரிப்பழகே கொள்ளை யின்பம்;
பாமணக்கும் தாலாட்டில், அன்னைத் தமிழில்
பாட்டி சொன்ன பழங்கதையில், பழைய சோற்றில்,
மாவடுவைத் திருடித்தந்த 'காக்கா கடியில்',
மயில்தோகை அடைகாத்த புத்தகத்தில்,
பால்மனத்துத் தோழியவள் கடையிழுத்துப்
பிரம்படியில் பொய்யழுகை அழுதால் இன்பம்!



தஞ்சை மயிலரசன்

பொற்கிழி 1

சேயாகிச் சிரித்தாடும் தங்கை தோளில்
செம்மாந்து முதல்பரிசைத் தந்தால் இன்பம்;
ஓயாது புதுப்புனலில் ஆட்டம் போட்டு
உதைவாங்கி மூக்கொழுகக் கெஞ்சும் இன்பம்;
வாயாரப் புல்மேயும் பசுவின் கன்றை
வந்துவந்து கொத்துகின்ற காக்கைச் சிறகு;
நோயுற்ற பெற்றோரின் மலர்ச்சி கண்டு,
தாயான ஆண்டவனைத் தொழுதால் இன்பம்!

கண்ணீரால் நன்றிசொன்ன பிச்சைக் காரன்
கால்தொட்டுக் கடல்நீட்டும் விரலின் தாகம்!
மண்பட்டு மறைகின்ற மழைநீர்ப் பூக்கள்
மரம் வைத்துப் பூக்கின்ற உவகைக் காடு!
விண்தொட்ட விஞ்ஞானம் மஞ்சள் மாலை
உள்ளந்தான் இன்பத்தின் எல்லைக்கோடு!
துன்பத்தைச் செருப்பாக்கு! தோள் நிமிர்த்து!
இன்பத்தேன் கொப்பளித்துக் கிளம்பும் ஊற்று!

பிரம்மத்தின் பெருமிதம்

எல்லா உபநிஷத்களுக்கும் மேலாக, அவற்றின் உட்தத்துவமாகவும் அவற்றைத் தாண்டியும் இருக்கிறாள் ஸ்ரீ லலிதாம்பிகை - **ஸர்வோபநிஷத் உத்குஷ்டா** என்கிற திருநாமம் இதையே குறிக்கிறது.

சாந்த்யாதீதகாலத்மிகா - கலைகளில் சாந்த்யாதீத கலை என்று ஒன்று உண்டு. 360 கலைகள் என்று கணக்கு. ஆய கலைகள் 64 என்பது ஒரு பக்கம் இருக்க, அம்பாளை உபாஸிக்கக்கூடிய கலைகள் என்று பார்த்தால் 360 என்று கணக்கு வரும். இந்த மாதிரி கலைகளைப் பற்றி நிறைய செய்திகள் உண்டு. அதில் சாந்த்யாதீதம் என்பது ஒரு உபாஸனை முறை. அக் கலையின் ஆத்மிகாவாக இருப்பவள்.

கம்பீரா - கம்பீரமாக இருக்கக்கூடியவள். கம்பீரம் என்பதற்கு அளவும் அழிவும் இல்லாதவள் என்று பொருள். ஒருவர் கம்பீரமாக இருக்கிறார் என்றாலே, அழிவில்லாமல் இருக்கிறார் என்றுதான் அர்த்தம்.

ஆகாசத் தத்துவம்

ககனாந்தஸ்தா - ககனம் என்றால் ஆகாசம். ஆகாசத்தில் ஸ்திதமாக இருக்கக்கூடியவள் என்று அர்த்தம்.

மூன்றுவித ஆகாசங்களாகவும் அவளே இருக்கிறாள் என்று பார்த்தோம் அல்லவா? அதையே சற்று ஆழமாகப் பார்த்தால், ஆகாசத்திலும், ஆகாசத்தின் அந்தத்திலும், அதைத் தாண்டியும் இருக்கக்கூடியவள் என்று கூறலாம். ஆகாசத்தையும் தாண்டி என்றால், எங்கே...? எப்படி...? யோசித்தோ கற்பனை செய்தோ பார்க்க முடியவில்லை. இத்தனைக்கும் அப்பாற்பட்டவளாக இருக்கக்கூடியவள், நினைவுக்கு அப்பாற்பட்டவள், எண்ணங்களுக்குள் உட்படாதவள் என்கிற போது... 'அப்படியும் இருக்க முடியுமோ?' என்று கூடத் தோன்றும்.

தர்க்க ரீதியாக, ஆகாசத்துக்கு ஓர் எல்லை இருக்கிறது. அந்த எல்லையளவுக்குள்ளும் அம்பாள் இருக்கிறாள் - நுணுக்கமாகவும் அதே நேரத்தில் கட்டுக்கடங்காத வெளியிலேயும் ஒரே சமயத்தில் இருக்கிறாள்.

ஆகாயத்தின் விஞ்ஞானத்தை ஆராய்ந்தவர்கள், அண்டவெளியானது தொடர்ந்து விரிவடைந்துகொண்டே இருப்பதாகச் சொல்கிறார்கள். நவீன விஞ்ஞானமும் இதை ஏற்கிறது. எத்தனையோ பில்லியன் ஆண்டுகளுக்கு முன் பிரபஞ்சம் இத்தனை யூண்டாக - துளியாக இருந்தது. அது கொஞ்சம் கொஞ்சமாக விரிவடைந்து வருகிறது, என்பது விஞ்ஞான சூத்திரம். இந்த சூத்திரத்தை எடுத்துச் சொன்னபோது, இந்த பிரபஞ்சத்தின் ஆரம்பக் கட்ட உருவத்துக்கு ஒரு பெயரும் வைத்தார்கள் - காஸ்மிக் எக் (cosmic egg) என்று!

இந்த cosmic egg-ஐ நாம் எங்கு பொருத்திப் பார்க்கலாம் என்றால் நமது இந்தியப் பாரம்பரியம் குறிப்பிடும் ஹிரண்ய கர்ப்பத்துடன் பொருத்திப் பார்க்கலாம். அந்த ஹிரண்ய கர்ப்பத்திலிருந்துதான் மற்ற எல்லாமே தோன்றின.


கம்பர் பாடுகிறபோது, 'ககன முட்டை' என்று பாடினார்! 'கிழிந்தது ககன முட்டை/சிரித்தது செங்கட்சீயம்'...!

23

ஸ்ரீ லலிதா

நான்காம் பாகம்

சுதா சேஷய்யன்



ஸ்ரீ அழகிய பொன்னம்மை அறையணி நல்லூர்

நரசிம்ஹர் அப்படியே தூணிலிருந்து வந்ததை வர்ணிக்க, 'கிழிந்தது ககன முட்டை' என்று கம்பர் பாடியது பன்னிரண்டாம் நூற்றாண்டு என்று வைத்துக் கொள்வோம். Cosmic egg என்கிற வார்த்தையை ஒரு பெல்ஜிய வானசாஸ்திர நிபுணர் அதற்கு ஏழு நூற்றாண்டுகளுக்குப் பிறகே முதன் முதலில் உபயோகிக்கிறார் 1927ல்.

ஹப்பிள் (Hubble) என்ற விஞ்ஞானி தான் முதலில் பிரபஞ்ச விரிவாக்கத் தத்துவத்தைச் சொன்னார். இது 1924-25-ல். அதற்குச் சில ஆண்டுகள் சென்றே 'காஸ்மிக் எக்' என்கிற சொற்றொடர் உருவாயிற்று.

இந்தப் பெயரை ஹப்பிள் வைத்தவுடனே மேலை உலகம், ''ஆஹா! இப்படியொரு அற்புதமான பெயரா? என்று சிலாகித்தது. சர்வ சாதாரணமாக, 'ககன முட்டை கிழிந்தது' என்று கம்பர் பாடிப் போய்விட்டார்! அதற்கும் முன்பே ஹிரண்ய கர்ப்பம் பற்றிப் பேசினர் நம் முன்னோர்கள்.

இந்த காஸ்மிக் ஈகோ நாம் எங்கு பொருத்திப் பார்க்கலாம் என்றால் நமது இந்தியப் பாரம்பரியம் குறிப்பிடும் ஹிரண்ய கர்பத்துடன் பொருத்திப் பார்க்கலாம்.

அம்பாளைப் பற்றிச் சொல்கிறபோது, **ககனாந்தஸ்தா** என்று குறிப்பிடுவது இந்த முடிவற்ற விரிவாக்கத்தை மனத்தில் கொண்டுதான். இந்த ககனத்துக்கும் அப்பாற்பட்டு அவள் இருக்கிறாள்.

கர்வம் தவறல்ல

கர்விதா - கர்வம் பொருந்தியவள். ஏற்கெனவே பார்த்தோம் - **அதிகர்விதா** என்றொரு திருநாமம். தன் திறமையினால் ஏற்படுகிற செருக்கு கர்வம். பிறரைத் தூக்கி எறிகிற குணம் அல்ல அது. தன் மீது கொண்ட நம்பிக்கையினால் இருக்கக்கூடிய ஒரு தன்மை. 'இது சரி' என்கிற உறுதிப்பாடு உள்ளபோது ஏற்படுகிற நம்பிக்கை.

இந்த வித்தியாசம் சரியாகப் புரியாததால் கர்வம் என்பதை அகங்காரம், மமகாரம் போன்ற தள்ளத்தக்க குணங்களுடன் நாம் தொடர்புபடுத்திப் பார்க்கிறோம். கர்வம் என்ற சொல்லுக்கு உண்மையான அர்த்தம், 'நியாயமான பெருமை' என்பதே.

ஆஹோ புருஷிகா

இன்னும் சொல்லப் போனால், அம்பாள் யார்...? அவள் ஆஹோ புருஷிகா - சிவகாமேசுவரருடைய ஆஹோ புருஷிகா. அப்படியென்றால் என்ன அர்த்தம்...? சலனமே இல்லாமல் இருக்கக் கூடிய பிரம்மம். அந்த பிரம்மம் யோசிக்க ஆரம்பிக்கிறது... ஏன் சிந்திக்கிறது...? உலகத்தை சிருஷ்டிக்க வேண்டும் என்கிற எண்ண ஓட்டம் வருவதற்காகச் சிந்திக்கிறது.

அப்படி உலகம் சிருஷ்டிக்கப்பட வேண்டுமானால் இந்த பிரம்மம் பிரிய வேண்டும். உலகப் பொருட்கள் அதனிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக உருவாக வேண்டும். பிரம்மத்திடமிருந்துதானே அனைத்தும் தோன்றின - 'அண்டமெல்லாம் பூத்தவளே' என்ற அபிராமி பட்டர் வாசகத்தைப் பார்த்தோமல்லவா! அவளிடமிருந்து அண்டமெல்லாம் பூக்கவேண்டுமானால்கூட முதலில் அதற்கான சிந்தனை தோன்றவேண்டுமல்லவா? அதற்காக ஏற்பட்டதுதான் ராஜ ராஜேஸ்வரி என்கிற சிந்தனை. அது பிரம்மத்தைப் பிரபஞ்சத்

திடமிருந்து தனியாகப் பிரித்தது; யோசிக்க வைத்தது.

திரிபுர ரகசியம்

எந்தச் சலனமும் இல்லாதிருந்த பிரம்மம் அதன் நிலையிலிருந்து மாறி, 'நான் என்னுடையது' என்கிற 'அஹம்' தத்துவமாயிற்று. அதன் பிறகு 'த்வம்' என்கிற இன்னொன்றாகவும் பிரிகிறது. பிரம்மம், அஹம், த்வம் என்று மூன்றாகப் பிரிவதுதான் திரிபுர ரகசியம். அதனால்தான் அம்பிகை திரிபுரசுந்தரியாக இருக்கிறாள் - இந்த மூன்றையும் தனது ஆதாரமாக வைத்துக்கொண்டு, இவற்றிலிருந்துதான் சிருஷ்டி வந்தாக வேண்டும் என்ற நிலையை உருவாக்கி - சிருஷ்டிக்கு ஆதாரமாக இருப்பவள் திரிபுரசுந்தரி.



பிரம்மத்திலிருந்து 'தான்' என்கிற எண்ண உருவாக்கத்தை ஏற்படுத்திய ஆஹோ புருஷிகாவை அறிஞர் ஆர்தர் ஆவ்லான் எப்படி அழைக்கிறார் தெரியுமா...? 'The pride of Brahmam' என்று வர்ணிக்கிறார்! எந்தச் சிந்தனையும் இல்லாத பிரம்மம், தான்தான் பிரம்மம் என்கிற உணர்வுத் தன்மையை - பெருமித கர்வத்தை அடையும் வகையில் தோற்றுவிப்பவள் கர்விதா. இந்த அஹம் என்கிற உணர்விலிருந்துதான் மற்ற எல்லாம் உருவாகின்றன. முதலில் திரிபுரம் வந்தது. அதனிடமிருந்து இருபத்தைந்து தத்துவங்கள் உருவாவதாக சாக்தம் சொல்கிறது.

இருபத்தைந்து தத்துவங்கள் யாவை? திரிபுரம் உருவானதும் அதிலிருந்து முதலில் மனஸ் வந்தது. சிந்தனை - அஹம் - என்பது வந்தாலே மனஸ் வந்துவிடும். மனஸ் தத்துவம் வந்த பிறகு ஒவ்வொன்றாகத் தன்மாத்திரைகள் ஐந்தும் வந்தன. இவை மனத்தோடு தொடர்புடைய ஆற்றல்கள். இந்தத் தன்மாத்திரைகள் வந்ததும், அவற்றை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஞானேந்த்ரியங்கள் வந்தன. அதற்குப் பிறகு, அந்த ஞானேந்த்ரியங்களைச் செயல்படுத்துவதற்கான கர்மேந்த்ரியங்கள் வந்தன.

மொத்தம் எவ்வளவு ஆயிற்று...? மனஸ் ஒன்று, தன்மாத்திரைகள் ஐந்து, கர்மேந்த்ரியங்கள் ஐந்து, ஞானேந்த்ரியங்கள் ஐந்து - இவற்றின் கூட்டுத் தொகை பதினாறு. இந்தப் பதினாறுக்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாகப் பிராணன்கள் வந்தன. அதிலிருந்து பஞ்சபூதங்கள் வந்தன - அவற்றுள் கடைசியாக வந்ததே பூமி அல்லது பிருத்வி. அத்தனையையும் சேர்த்துப் பார்த்தால் இருபத்தைந்து.

இவ்வாறு இருபத்தைந்து தத்துவங்களும் அம்பாளிடத்திலிருந்து தோன்றின. பரமாத்மாவின் கர்ப்பமாக இருந்து அவற்றைத் தோற்றுவிக்கக் காரணமான ஆஹோ புருஷிகாவாக அவள் இருப்பதால் க்ரவிதா என்கிற திருநாமம்.

(வளரும்)



ச.ந. கண்ணன்

கிரிக்கெட் வீரர்கள் அவ்வப்போது ஜாலியாகவும் பேசுவார்கள். இதோ பாருங்கள் அவர்கள் என்ன பேசினார்கள் என்று.

மிகவும் சங்கடமான சம்பவம் ஏதாவது?

அம்பயர் டேரல் ஹார்பர் : பாகிஸ்தான் - மேற்கு இந்தியத் தீவு அணிகள் கலந்துகொண்ட ஒருநாள் போட்டியில் நான் தவறுதலாக பௌலருக்குப் பந்து தர மறந்து அடுத்த பந்துக்குத் தயாராக இருந்தேன். பௌலர் என்னிடம் வந்து 'நோ பால் (பந்து இல்லை)' என்றார். அட, ஒரு பந்து நோ பாலா இல்லையா என்பதை நான்தானே முடிவு செய்யவேண்டும். அப்போதுதான் பார்த்தேன். பந்து என் பேண்ட் பாக்கெட்டில் இருந்தது. நல்லவேளை இதை கமெண்டேட்டர்கள் கவனிக்கவில்லை.

தன் நாட்டு ஜனாதிபதி பற்றி ஆப்கானிஸ்தான் பயிற்சியாளர் கபிர்கான்: - நான் ஜனாதிபதியைச் சந்தித்தபோது பிஎம்டபிள்யூ விதிமுறை பற்றி விளக்கச் சொன்னார். முதலில் பேரைச் சரியாகச் சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள். அது பிஎம்டபிள்யூ அல்ல; எல்.பி.டபிள்யூ என்றேன் நான்.

அதுதான் என் கடைசி சண்டை!

டீம் பஸ்ஸை மிஸ் செய்ததுண்டா?

ரோஹித் சர்மா: பலமுறை. இந்திய அணியில் ஆடும்போது டீம் பஸ்ஸைத் தவறவிட்டால் என் ஒருநாள் சம்பளத்தை அணிக்காகச் செலவழிக்கவேண்டும். அன்று எல்லோருக்கும் என் பணத்தில்தான் சாப்பாடு.

சண்டை போட்டதுண்டா?

யுவ்ராஜ் சிங் - அப்போது எனக்குப் பதினேழு வயது. எனக்கும் இன்னொருவனுக்கும் சரியான சண்டை... நான் அவனை நன்றாக அடித்தேன். எனக்கும் அடி விழுந்தது. மணிக்கட்டில் பத்துத் தையல்கள். அதுதான் என் கடைசிச் சண்டையாக இருக்கவேண்டும் என்று அப்போதே முடிவு செய்துவிட்டேன்.



- கவிதைகள்
- கதைகள்
- பரிசுப் போட்டி




கோகுலம்

ஏப்ரல் 2010 விலை ரூ.8/-

குழந்தைகளின் குதூகலம்!

கொளுத்துற கோடை தொடங்கிடுச்சு. நம்ம ஆற்காட்டுப் பெரியவர் அப்பப்போ கரண்ட் மெயின்ல கைய வெச்சு, வெக்கைய வீட்டுக்குள்ள இலவசமா நுழைய விட்டா... டீவி., கம்ப்யூட்டர் எல்லாமே வேஸ்ட்டுதான். அப்போ போர் அடிக்காம பொழுதுபோக்க, விடுமுறை காலமெல்லாம் விசேஷமா உருண்டோட நம்மளோட ஆதி ஆட்டங்களை

அந்தக் கால ஆட்டம்..



''வானம் கருத்து நிக்குது;
மழைய கொட்டப் பாக்குது,
உப்பு மூட்டைக் கரைஞ்சுப்
போனா
உம்பொழப்பு
என்னவாகும்?''
''கரைஞ்சி கடலில்
கலக்கட்டும் -
கரைஞ்ச உப்பைத்
தின்ன மீனு
கொழம்பா
சட்டியில்
கொதிக்கட்டும்''

ஒண்ணாங்கல்லெடுத்து..
ஓசரத் தூக்கிப் போடுகையில்
சூரியனும் சுந்தரமா
சூட்சுமமா பார்த்தாக்கா...
கூசிக்கண்ணு மூடயிலே
குண்டுக்கல்லு மறையுமில்லே



ஜாலியா ஆடலாம். ஆனா இந்தத் தலைமுறைக்கு? உங்களுக்கு அதெல்லாம் தெரியுமான்னு கேட்டதுதான் தாமதம்... கோவை வரதராஜபுரம் கே.எஸ்.ஜி. கலைக் கல்லூரி கொங்கு நாட்டு சிங்கங்க சட்டுன்னு பாண்டி ஆட்டம், கண்ணாமூச்சி ஆட்டம், அஞ்சாங்கல் ஆட்டம்னு பாட்டோட ஆடி அசத்திட்டாங்க சந்தோஷமா... அதுதாங்க இது!

அழியா ஜாலி!



"கண்ணாமூச்சி ரே... ரே...
காட்டுத் தலைச்சி ரே... ரே...
கள்ளன் வர்றான்
கண்டுக்கோ...
மெள்ள மெள்ள
நடந்துக்கோ...
மறைவிடமா
ஒளிஞ்சுக்கோ...
ஒளிஞ்சுக்கோ"



"பாவை நானும் பாண்டி ஆட,
பாண்டியரும் யானை ஏறி,
காலழகைப் பார்க்க வந்தார்...
ஐயோ! வெட்கத்துல கால் நடுங்கி
வெளியே நான் ஓடி வந்தேன்"


தொகுப்பு: **ஆர்.பாலா**

படங்கள்:
முனைவர். விஜயராமன்

அந்த அருமையான மாலைப் பொழுதில், அரசாங்க குமாஸ்தாவான இவான் மெட்ரிக் கெர்வ்யகாஃப் ''க்னகெஸ் டி கார்னெவில்லா'' இசையரங்கின் இரண்டாவது வரிசையில் அமர்ந்தபடி, தனது ஒபரா கண்ணாடியின் வழியே நிகழ்ச்சியை ரசித்துக்கொண்டிருந்தான். அப்படி ரசித்துக் கொண்டிருப்பது அவனுக்கு ஆனந்தமயமாய் இருந்தது. ஆனால், திடீரென்று... கதைகளில் இப்படித்தான், ''ஆனால், திடீரென்று'' என்ற வார்த்தையை நாம் அடிக்கடி சந்திப்போம். எழுத்தாளர்கள் சொல்வது சரிதான். வாழ்க்கை அற்புதங்கள் நிறைந்ததாகத்தான் இருக்கிறது. ஆனால் திடீரென்று அவனது முகம் கோணி, கண்கள் காணாமல் போய், மூச்சும் நின்றுபோனபொழுது, தனது ஒபரா கண்ணாடியைக் கண்களிலிருந்து கழற்றி விட்டுச் சற்றுக் குனிந்து, ''அச்சூஊஊஊஊ!''... ஆம் நீங்கள் நினைத்ததுபோல் அவன் தும்மினான். யாராக இருந்தாலும், அவர்கள் எந்த இடத்தில் தும்மினாலும், அது ஒன்றும் பெரிய தண்டனைக்குரிய குற்றமில்லை. சாமானியர்கள் தும்முகிறார்கள்; அது போலத்தான் போலீஸ் சூபிரன்டெண்டுகளும், ஏன் சில சமயங்களில் கவுன்சிலர்களும் கூட. எல்லோரும் தும்மத்தான் செய்கிறார்கள். கெர்வ்யகாஃப் முதலில் குழப்பமோ பதற்றமோ அடையாமல், தன் கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டு, மிகுந்த பவ்யமான மனிதனைப் போல, தனது தும்மல் எவரையேனும் தொந்தரவு செய்திருக்குமோ என்று சுற்றும் முற்றும் பார்த்தான். அப்படிப் பார்த்தது தான் அவனுக்குள் குழப்பத்தை உண்டு பண்ணியது. அவனுக்கு முன்னாலிருந்த இருக்கையில் அமர்ந்திருந்த ஒரு வயதான

அரசாங்க குமாஸ்தா




பிறமொழிக் கதை
1
ரஷ்ய மூலம் : ஆண்டன் செக்கோவ்
ஆங்கில வழி மொழியாக்கம் : தாராகணேசன்

மனிதர், கவனமாய்த் தமது வழுக்கைத் தலையையும் கழுத்தையும் கையுறை அணிந்த கைகளால் துடைத்தபடியே, தமக்குள் ஏதோ முணுமுணுத்துக்கொள்வதை கெர்வ்யகாஃப் பார்த்தான். அப்போதுதான் அவனுக்குத் தெரிந்தது, அந்த வயதான மனிதர் போக்குவரத்துத் துறையின் உயரதிகாரி பிரிஸ்ஹலவ் என்பது.

'ஐயோ, எனது எச்சில் அவர் மீது தெறித்துவிட்டதே... அவர்



சுழற்சி!

நின்றுபோன கடிகாரம்
காலத்தை நிறுத்துவதில்லை
இல்லாமற் போன எவராலும்
பிரபஞ்சம் இருண்டுவிடுவதில்லை
தினமும் பூக்கள் பூக்கின்றன!

–ப்ரணா

எனது துறையின் உயரதிகாரியில்லையென்றாலும் இப்படிச் செய்ய நேர்ந்தது அநாகரிகம். கட்டாயம் இவரிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்' என்று நினைத்தான்.

உடனே கெர்வ்யகாஃப் மெல்லச் செருமியபடியே, தன்னை முழுவதுமாய் வளைத்து, முன்புறமாய்க் குனிந்து அந்த அதிகாரியின் காதருகே கிசுகிசுத்தான்.

''மன்னித்துக்கொள்ளுங்கள், மரியாதைக்குரியவரே, எதிர்பாராவிதமாக என் எச்சில் உங்கள் மீது தெறித்துவிட்டது...''

''பரவாயில்லை, பரவாயில்லை''

''தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள் ஐயா, உண்மையில் நான் வேண்டுமென்றே அப்படிச் செய்யவில்லை''

''ஓ... நீங்கள் தயவு செய்து உட்காருங்கள். நான் இசை கேட்கவேண்டும்''

அவர் இப்படிச் சொன்னதும், கெர்வ்யகாஃப் என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பிப்போய், அசட்டுச் சிரிப்புடன் பின்புறம் சாய்ந்து, இருக்கையில் அமர்ந்துகொண்டு, மறுபடியும் மேடையைப் பார்க்க ஆரம்பித்தான். அவன் மேடையைப் பார்த்துக்கொண்டிருந்தானே தவிர, அவனால் அதற்குமேல் நிகழ்ச்சியை ஆனந்தமயமாய் ரசிக்கவே இயலவில்லை. ஒருவிதமான சங்கடத்துடன் நெளியத் தொடங்கினான். இடைவேளையின்போது மறுபடியும் எழுந்து, பிரிஸ்ஹலவின் அருகே சென்று, வெட்கத்தை விட்டுச் சொன்னான். ''நான் தங்கள் மீது எச்சில் தெறித்துவிட்டேன் மரியாதைக்குரியவரே, என்னை மன்னியுங்கள். நான் வேண்டுமென்றே செய்யவில்லை....''

''ஓ, போதும் நிறுத்து. நான் அதை மறந்துவிட்ட பின்பும் நீயேன் அதனைப் பற்றிப் பேசிக்கொண்டே இருக்கிறாய்?'' என்று கடிந்துகொண்டே, தமது கீழுதட்டைப் பொறுமையின்றிக் கடித்தார் அந்த அதிகாரி.

'அவர் மறந்துவிட்டார் என்றாலும், அவரது கண்களில் ஒரு கோபக்கனல் இருந்ததே' என்று எண்ணிய கெர்வ்யகாஃப் மறுபடியும் அந்த அதிகாரியைச் சந்தேகத்துடன் பார்த்தான். 'அவர் என்னோடு பேசக்கூட விரும்பவில்லையே. எப்படியாவது அவரிடம் உண்மையிலேயே நான் அவ்வாறு வேண்டுமென்றே செய்யவில்லையென்றும், இயற்கையிலேயே

தும்மல் வந்ததில் தெரித்துவிட்டது என்றும் விவரமாய்ச் சொல்லவேண்டும். இல்லையெனில் அவர் மீது நான் வேண்டுமென்றே எச்சில் துப்பினேன் என எண்ணிவிடுவார். இப்போது அவர் அப்படி நினைக்கவில்லை என்றாலும் பிறகு அப்படித்தான் நினைப்பார்.'

வீட்டுக்குப் போனதும், கெர்வ்யகாஃப் முதல் காரியமாய், தான் மரியாதைக் குறைவாய் நடந்துகொண்டதைப் பற்றி தன் மனைவியிடம் சொன்னான். சொன்னவுடன் அவன் மனைவி அதனை ஆட்சேபித்ததுடன், சற்று அச்சமும் கொண்டாள். எனினும் பிரிஸ்ஹலவ் வேறு துறையைச் சேர்ந்தவரென்று தெரிந்ததும் கொஞ்சம் நிம்மதியடைந்தாள்.''

''ஆனாலும், நீங்கள் எதற்கும் போய் அவரிடம் மன்னிப்புக் கேட்டுவிடுங்கள், இல்லையென்றால் அவர் உங்களுக்குப் பொது இடத்தில் எப்படி நடந்துகொள்வதெனத் தெரியவில்லை என்றுதான் கட்டாயம் நினைத்துக்கொள்வார்'' என்றாள்.

''நீ சொல்வது சரி



"உங்களுக்கு எது ஜாலி?"
"கொளுத்துற வெயிலில் 'ஏ.ஸி.' கடையில டீ போட்டா ஜாலி!"

தான். நானும் கூட அவரிடம் மன்னிப்புக் கேட்டாயிற்று, ஆனாலும் அவர் அதனை யொன்றும் பொருட்படுத்தவில்லை. ஒரு வார்த்தை கூட அதனைப்பற்றிப் பேச வில்லை. இருந்தாலும், அவரிடம் பேசுவதற்கு அது சரியான தருணம் இல்லை'' என்றான்.

அடுத்தநாள், கெர்வ்யகாஃப் ஒரு புதுச் சீருடையை அணிந்துகொண்டு, முடியைச் சீராக வெட்டிக்கொண்டு, பிரிஸ்ஹலவ்வைப் பார்த்து விளக்கம் கொடுக்கலாம் என்று கிளம்பினான். அப்போது, வரவேற்பறையில் காத்திருந்த மனுதாரர்களுக்கு நடுவே, அந்த அதிகாரியும் இருந்தார். அந்த மனுதாரர்களையும் அவர் விசாரிக்கத் தொடங்கியிருந்தார். அங்கிருந்த மனுதாரர்களில் சிலரை விசாரித்துவிட்டுப் பிறகு கெர்வ்யகாஃபை நோக்கித் தமது விழிகளை உயர்த்தினார்.

''நேற்றைக்கு அந்த ஆர்க்கேடியாவில், உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா, மதிப்புக்குரியவரே, நான் தும்மியதில் என்னையறியாமல் உங்கள் மீது எச்சில் தெறித்துவிட்டேன். தயவுசெய்து மன்னி...''

''அடடா, இதென்ன முட்டாள்தனம்... உன்னை இதற்கு மேல் என்னால் பொறுக்க இயலாது'' என்று கூறியபடியே, ''உனக்கு நான் என்ன செய்யவேண்டும்?'' என்று அடுத்த மனுதாரரைப் பார்த்துக்கேட்டார்.

''அவர் இனிமேல் என்னோடு பேச மாட்டார்'' முகம் வெளிறிய கெர்வ்யகாஃப், ''ஐயோ இதை இப்படியே விட்டுவிடக்கூடாது. அவருக்கு நான் சரியானபடி எடுத்துச் சொல்லவேண்டும்'' என்று நினைத்தான்

எல்லா மனுதாரர்களிடமும் பேசி முடித்துவிட்டு, அவர் தமது அலுவலக உள்ளறையை நோக்கி நடக்கத் தொடங்கிய போது, கெர்வ்யகாஃப் அவரை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தபடியே மெல்லச் சொன்னான்:

''ஐயா, உங்களைத் தொந்தரவு செய்வதற்கு மன்னியுங்கள் ஐயா, அவ்வாறு நடந்ததற்கு நான் மிகவும் வருந்துகிறேன். நான் நிச்சயமாய் அதனை வேண்டுமென்றே செய்யவில்லை என்று நீங்கள் தயவுசெய்து நம்பத்தான் வேண்டும்.''

அந்த அதிகாரி தமது முகத்தை அதிசோகமாய் வைத்துக்கொண்டு அவ



னைப் பார்த்துக் கையசைத்தார். பிறகு தமக்குப் பின்னாலிருந்த கதவை மூடியபடி. ''நீ ஏன் இப்படி என்னைக் கேலி செய்கிறாய்?'' என்று கேட்டார்.

'இதில் கேலி என்ன இருக்கிறது.' அப்படியொன்றும் இல்லை. அவர் ஒரு உயரதிகாரி என்பதால் அவரால் இதனைப் புரிந்துகொள்ள இயலவில்லை. எப்படியிருந்தாலும் நான் இனிமேல் இந்த அதிகாரம் மிக்க மனிதனிடம் மன்னிப்பு கேட்கப்போவதில்லை. இவர் சாத்தானிடம் போகட்டும். நான் இவருக்கு ஒரு கடிதம் எழுதுவேன். ரோமன் கடவுள் ஜோவ் மீது ஆணையாகக் கடிதம் எழுதாமல் விட மாட்டேன்.'

இப்படியெல்லாம் நினைத்தபடி கெர்வ்யகாஃப் வீட்டுக்கு நடந்தான். மறுபடி - மறுபடி தீவிரமாய் எதையோ யோசனை செய்தபடியிருந்ததனால் அவனால் கடிதம் எழுத இயலவில்லை. அதனால் அடுத்த நாளும் அவருக்கு விளக்கம் அளிக்கப் போனான்.

''**உ**ங்களை நேற்று மிகவும் தொந்தரவு செய்துவிட்டேன் ஐயா'' என்றவனை அதிகாரி நிமிர்ந்து கேள்விக்கணையுடன் பார்க்க, கெர்வ்யகாஃப் தொடர்ந்தான்: ''நிச்சயமாய், நீங்கள் விளையாட்டாய்ச் சொன்னது போல், நானொன்றும் உங்களைக் கேலி செய்யவில்லை ஐயா... திடீரெனத் தும்மியதால் உங்கள் மீது எச்சில் தெறித்ததற்காக நான் மன்னிப்புதான் கேட்டேன்... ஆனால் உங்களைக் கேலி செய்யவேண்டுமென்று நான் கனவில் கூட நினைக்கவில்லை. நான் தங்களைக் கேலி செய்ய நினைத்திருப்பேன் என்றாலோ, அல்லது அப்படி கேலி செய்ததாக நீங்கள் நினைத்திருந்தாலோ, பிறகு மனிதர்களுக்கு மரியாதையே இல்லாது போய்விடும்...''

''எங்காவது போய்த் தொலை'' என்று கோபமாக அவனைப் பார்த்துக் கத்திய அதிகாரியின் முகம் கோபத்தில் சிவந்து உடலெல்லாம் அதிர்ந்தது.



"ஓ, போதும் நிறுத்து. நான் அதை மறந்துவிட்ட பின்பும் நீயேன் அதனைப் பற்றிப் பேசிக்கொண்டே இருக்கிறாய்?"

அவரது பயங்கரமான கோபத்தைப் பார்த்ததும் கெர்வ்யகாஃபின்-கிசுகிசுப்பான குரல் உயிரற்று உறைந்தது.

''செத்துத் தொலைந்து போ'' என்று காலைத் தரையில் உதைத்தபடி மீண்டும் கத்தினார் அதிகாரி.

அந்தக் கோபம் கெர்வ்யகாஃபின் வயிற்றை என்னவோ செய்தது. எதையும் பார்க்கவோ கேட்கவோ இயலாமல் கதவை நோக்கி வேகமாய்ப் போனவன், வெளியில் இறங்கித் தெருவில் தள்ளாடியபடியே நடந்தான். இயந்திரம் போல வீட்டை அடைந்தவன், தனது சீருடையைக் கூடக் கழற்றாமல் அப்படியே சோஃபாவின் மீது சாய்ந்து செத்துப்போனான். ●







ஆட்சியைப் பிடிப்பாரோ அழகிரி?

தலைமைச் செயலகத் திறப்பு விழா முடிந்த கையோடு, ஆளும் கட்சியில் தேர்தல் ஜுரம் துவங்கிவிட்டது. செம்மொழி மாநாடு முடிந்தவுடன், திடீர் சட்டமன்றத் தேர்தல் கண்டிப்பாக நடக்கும் என்று உறுதியாகக் கூறுகிறார்கள் சீனியர் உடன்பிறப்புகள்!

''தி.மு.க.வுக்கு ஆதரவான சூழல் மிக நன்றாகவே இருக்கிறது. மைனாரிட்டி என்று எங்களை விமர்சித்து வரும் ஜெயலலிதாவுக்கு சவாலான சம்மட்டி அடி கொடுத்து, தனிப்பட்ட மெஜாரிட்டியுடன் ஆட்சி அமைக்கமுடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஆனால், அழகிரி தமது பேச்சு அல்லது செயல்கள் மூலம் கட்சியின் இமேஜைக் கலகலக்க வைப்பாரோ என்ற பயமும் இருக்கிறது'' என்று சொல்கிறார் ஸ்டாலினின் தீவிர ஆதரவாளரான ஓர் அமைச்சர்.

''தமது பிறந்த நாளில் முதல்வர் பொறுப்பையும் ஸ்டாலினுக்கே கொடுத்துவிட்டு, முழுமையாக ஓய்வுபெற்று விடுவார் கலைஞர்'' என்று செய்திகள் அடிபட்டாலும், தனிப்பட்ட மெஜாரிட்டியுடன் கூடியதொரு அரசை ஸ்டாலினிடம் கொடுப்பதையே முதல்வர் விரும்புகிறாராம். தி.மு.க. எம்.எல்.ஏக்களின் செயல்பாடுகளைப் பற்றிய ஆய்வு, தனியார் நிறுவனங்களின் மூலம் செய்யப்படுகிறதாம். தேறுபவர்களுக்கே மீண்டும் ஸீட். மகளிர் இடஒதுக்கீடு மசோதா சட்டம் வடிவு பெறத் தாமதமாகும் என்றால், அதைப் பற்றிக் கவலைப்படாமல், மூன்றில் ஒரு பங்கு இடங்களில் போட்டியிடப் பெண்களுக்குக் கட்சி நிச்சயம் வாய்ப்புக் கொடுக்கும் என்கிறார்கள். எது எப்படியிருந்தாலும், வரும் சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, கருணாநிதி ஓய்வுபெறுவது போன்று, மூத்த அமைச்சர்கள் அன்பழகன், ஆற்காடு வீரபாண்டி ஆறுமுகம், கோ.சி.மணி ஆகியோரும் ஓய்வுபெற்று விடுவார்கள் என்று சொல்கிறார்கள் முக்கிய உடன்பிறப்புகள்.

இந்தச் சூழலில், அடுத்த மூன்று, நான்கு மாதங்களுக்கு மின்வெட்டு கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, உடல்நலம் காரணமாக அந்தத் துறையை சரியாகக் கவனிக்க முடியாத நிலையில் ஆற்காடு இருக்கிறார். பொதுப் பணித்துறையை இழந்து வாடிக்கொண்டிருக்கும் துரைமுருகனுக்கு மின்துறை கொடுக்கப்படலாம் என்ற பேச்சும் இருக்கிறது.

காதில் விழுந்தவை

– சஞ்சயன்

● **எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்**

? காலாவதியான மருந்துகளுக்குப் புது தேதி ஸ்டிக்கர் ஒட்டி விற்பனை செய்த மோசடி வியாபாரிகளுக்கு என்ன தண்டனை தரலாம்?

! நாம் தண்டனை தர வேண்டியதில்லை. இ.பி.கோவில் விதிக்கப்பட்டுள்ள தண்டனையை விரைந்து வழங்கும் வகையில் வழக்கைத் துரிதமாக நடத்துவதே முக்கியம். மிகத் தாமதமான நீதி, காலாவதியாகிப்போன மருந்து போன்றதே.

● **என்.சீத்தாலட்சுமி, சென்னை - 40**

? ஐ.பி.எல். தொடங்கும் முன் தீபிகா படுகோனேயின் நடனம் போன்ற நிகழ்ச்சிகள் தேவைதானா?

! தீபிகா மற்றும் சீர் லீடர்ஸின் நடனம் தேவைதானா என்பதற்கு முன்னதாக, ஐ.பி.எல் போட்டி தேவைதானா என்ற கேள்வி எழுகிறது. முற்றிலும் வியாபார நோக்கில் நடைபெறும் விளையாட்டு, உன்னத உணர்வுகளை யாரிடமும் உருவாக்காது.

● **பவானி கிருஷ்ணா, பெங்களூரு**

? 'அடுத்த ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி மலரப் போகிறது' என்று ஜெயலலிதா கூறியுள்ளது இந்த ஆண்டின் சிறந்த நகைச்சுவை'' என்கிறாரே வீரபாண்டி ஆறுமுகம். காங்கிரஸ் அந்தப் பக்கம் சாய்ந்தால் நகைச்சுவை என்னவாகும்?

! காங்கிரஸ் அ.தி.மு.க. பக்கம் சாய்ந்தால் அது அடுத்த ஆண்டின் சிறந்த நகைச்சுவையாக இருக்கும். காங்கிரஸ் சிரிப்பாய்ச் சிரிக்கும் நிலைக்குத் தள்ளப்படும். சோனியா புத்திசாலித்தனமாகக் காய்களை நகர்த்துவது அவசியம்.

● **எஸ்.பி.பாலு, திருச்சி**

? அன்று பிரேமானந்தா, இன்று

✱ வெட்கக் கே(கோ)டு(டி)!





✱ வியாபார ஆட்டம்!

பணமில்லை என்கிறாரே மாயாவதி?

நீங்கள் கேட்டவை - தராசு

நித்யானந்தா! இவர்களை நம்பிய பக்தர்கள் கோவிந்தா! போலிச் சாமியாரர்கள் பற்றி உங்கள் கருத்து...?

! போலிகள் எல்லாத் துறைகளிலும் உண்டு. நித்தியானந்தாவைச் சரியாக எடை போடாமல், அவரது ஆளுமைக்கும் பிராபல்யத்துக்கும் உதவிய மீடியாவும் அந்த அளவில் போலித்தனமாகிப் போனது. பக்தர்கள் சாமியார்களை நம்பி கோவிந்தா ஆவதைக் காட்டிலும் கோவிந்தாவை நம்புவது மேலானது.

● பாலாஜி கணேஷ், கோவிலாம்பூண்டி

? தி.மு.க.வில் இனி இலவசங்கள்தான் வாக்குறுதியாமே?

! இலவசங்கள் இன்று வோட்டுப் பெறுவதற்கான, சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட லஞ்சம் என்று ஆகிவிட்டன. எனவேதான் இலவசங்களைப் பற்றிய வாக்குறுதிகளும் இலவசமாகிவிட்டன.

''எதுவுமே இலவசமில்லை. எல்லாவற்றுக்குமே வரிகள் மூலம் பணம் கொடுக்கிறோம்'' என்ற உணர்வு என்றைக்கு மக்களுக்கு வருகிறதோ, அன்றுதான் விடிவுகாலம். வரி செலுத்தும் பணக்காரர்கள் மிகக் குறைவு. மறைமுக வரிகள் மூலம் சாமானியர்களே மிக அதிக வரி செலுத்துகிறார்கள்.



✱ பத்து பர்சென்ட் பெயர்!

● மீனாட்சி குருராஜ், திருச்சி

? மனித வள மேம்பாட்டுத் துறையில் நியமிக்கப்பட்ட கமிட்டி, தமிழ்நாட்டின் ஒரு நிகர்நிலைப் பல்கலைக் கழகத்துக்கு, தர வரிசைப் பட்டியலில் பூஜ்யம் மதிப்பெண் கொடுத்துள்ளதே? கல்வியின் தரம் எங்கே சென்று கொண்டிருக்கிறது?

! காசாக மாறி, அரசியல்வாதிகளின் பாக்கெட்களை நிரப்பிக்கொண்டிருக்கிறது.

● அ.சுகுமார், காட்பாடி

? ஏழு பெண்களைப் பெற்ற லாலு, மகளிர் தொகுதி ஒதுக்கீடு மசோதாவை ஆதரிக்க வேண்டும் என்கிறாரே சோனியா?

! அப்படியென்றால் ஆண் பிள்ளைகளைப் பெற்ற எம்.பிக்கள் எதிர்க்க வேண்டும் என்று அர்த்தமா? குழப்புகிறாரே!

● சி.விஜயாம்பாள், கட்டிகானப்பள்ளி

? நீதிமன்றங்கள் எவ்வளவோ கண்டித்தும் சில வங்கிகள் மாணவர்களுக்குக் கல்விக் கடன் வழங்குவதில்லையே?

! (ஒப்புநோக்க) சிறு தொகைகளைப் பலருக்கும் பரவலாகத் தந்து விட்டு, துரத்தித் துரத்தித் திரும்பப் பெறும் தலைவலியை ஏற்க அவை தயங்குவதே காரணம்!

● அ.ராஜா ரஹ்மான், கம்பம்

? வெளிநாடுகளில் கறுப்புப் பணம் பதுக்கிய சர்வ



✱ குழப்ப கோரிக்கை!

தேச அரசியல் தலைவர்கள் 35 பேர் பட்டியலில் பாக் அதிபர் ஜர்தாரி பெயரும் உள்ளது குறித்து?

! ஜர்தாரிக்கு ஏற்கெனவே மிஸ்டர் டென் பர்சன்ட் என்ற மாற்றுப் பெயர் உண்டு. அது கிடக்கட்டும்; எத்தனை மேல் நிலை, இடைநிலை, கீழ்நிலை இந்திய அரசியல் தலைவர்கள், எந்தெந்த அயல்நாட்டு வங்கிகளில் எவ்வளவு பதுக்கியுள்ளார்கள் என்பதற்கு ஒரு பெயர்ப் பட்டியல் வெளி வந்தால் தேவலாம்; நடக்குமா?



★ ஆனந்தமே...



★... அல்ல!

● **சுபா, தஞ்சை - 7★**

? **இருக்கின்ற வேலைகளை விட்டுவிட்டு, நகைக்கடை, ஹோட்டல், துணிக்கடைத் திறப்பு விழாக்களுக்கு எம்.எல்.ஏ, எம்.பிக்கள் செல்வது அவசியம்தானா?**

! அவ்வாறு செல்வதற்கு அவர்கள் கட்டணம்கூடப் பெறுகிறார்கள் என்று கேள்வி. வேலைகள் கிடக்கு, விடுங்க!

● **கு.ப.ரகுநாதன், பூவிருந்தவல்லி**

? **2600 கோடி ரூபாய்களைக் கொட்டி உ.பி முழுவதும் தமக்கும் கன்ஷிராமுக்கும் சிலைகளை நிறுவிய மாயாவதி, ஆசிரம விபத்தில் மாண்ட 65 பேர் குடும்பங்களுக்கு நிவாரணம் தர அரசிடம் பணம் இல்லை என்று சொல்வது கொடுமை தானே?**

! கொடுமைதான். அதனினும் கொடுமை, இப்போது பொதுவிடங்களில் தமது கட்சிச் சின்னமான யானை சிலைகளை அவர் நிறுவி வருவது. இதற்கு ஆட்சேபனை எழுப்பியபோது, காங்கிரஸின் கை சின்னத்தை, அனைத்து அரசியல்வாதிகளும் தினம் தினம் பயன்படுத்துகிறார்களே (மேடையில் கை அசைக்கிறபோது) என்று விதண்டாவாதம் செய்கிறார்! போதாக் குறைக்கு, ஐந்து கோடி பெறுமானமுள்ள ஆயிரம் ரூபாய் நோட்டுக்களாலான மாலையும் அணிவிக்கப்பட்டுள்ளார்! 'வெட்கமில்லை வெட்கமில்லை வெட்கமென்பதில்லையே! இச்சகத்தில் உள்ளோரெல்லாம் இடித்துரைத்த போதிலும் வெட்கமில்லை...'' என்று பாட வேண்டியதுதான்!

● **லெமூரியன், திருவண்ணாமலை**

? **தமிழக சட்டப் பேரவையில் முதல்வர் கருணாநிதியின் படத்தை அகற்றப் போவதாக ஜெ. எடுத்துள்ள சபதம் குறித்து...?**

! கண்ணகி சிலை தன் கோபத்தையும் மறந்துவிட்டுச் சிரிக்கிறது! ○

☐ ரூ. 150/- பரிசு பெறுபவர்:
சி.விஜயாம்பாள், கட்டிகானப்பள்ளி

★ ரூ.75/- பரிசு பெறுபவர்:
சுபா, தஞ்சை - 7



ரிடர்ன் ஆஃப் தி சிக்ஸ் ஃபேஸ்!

இந்திய வம்சாவழியான அமெரிக்காவில் வாழும் சிக்ஸ் ஃபேஸ் ஜெனிஃபரைக் காதலிக்கிறார். பழங்குடிகள் ஜெனிஃபரைக் கடத்த, எதிரிகளோடு மாறுவேடத்தில் போரிட்டு, உள்ளூர் வான் வீச்சுப் போட்டியில் வெற்றிபெற்று புகழ்பெறுகிறார். அதனால் அமெரிக்க நடிகர் ராக்கின் நட்பு கிடைக்கிறது. அவர் உதவியோடு, இந்திய சினிமாவுக்குள் நுழைந்து, தமிழகத்தின் ஆட்சியைப் பிடிக்கும் சிக்ஸ்ஃபேஸ்... மாண்புமிகு ஆறுமுகமாக மாறுவதுதான் கதை. இது வொரு photoshop வெளியீடாம். இயக்கம்: மணிகண்டன்.

(இப்படித்தான் நம்ம ரஜினியை நாம எதிர்பார்க்கிறோம் ....ம்ம்ம்)

- சூர்யா


2
ஜெனிபரைக் கொடுத்துடு!


3
நேக்கா சுத்தி... டேக்கா கொடுப்பேன்.


4
'ராக்'கிங் பண்ணாதபடி
உன்னமாதிரி உடம்பு வேணும்பா!


5
கலையால் களையெடுக்கமுடியும்!


6
தமிழ்நாட்டுக்கு ஆன்மிக ஆட்சிதான் வேணும்!



3 ப்ளஸ் 3

☒ அவசியமே இல்லை!
☑ அற்புதமான பரிசு!

மகளிருக்கான 33% இட ஒதுக்கீடு என்பது அவசியமா அல்லது அனாவசியமா? பலவிதமான அமர்க்களங்கள், அமளிகளுக்கு இடையே ஒரு சரித்திரச் சாதனையாக மகளிருக்கான 33% இட ஒதுக்கீடு கிடைத்துள்ளது. இதைப்பற்றி மகளிர் என்ன சொல்கிறார்கள் என்பதை அறிய சில பெண்களிடம் நாம் கேட்ட பொழுது கிடைத்த தொகுப்பு:

செல்வி திவ்யா பிரபாகர்: *(கல்லூரி மாணவி):* இந்த மகளிருக்கான 33% இட ஒதுக்கீடு ரொம்பவும் வரவேற்க வேண்டிய விஷயம். அனைத்துத் துறைகளிலும் பெண்கள் வெற்றிக் கொடி கட்டிக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில், அரசியல் துறையிலும் பெண்கள் மேலும் பரிமளிக்க ஏதுவாக இந்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது. மகளிர் தினத்தை உலக மகளிர் அனைவரும் கொண்டாடி மகிழ்ந்திருக்க வேளையில் இந்திய மகளிருக்கென ஒரு அற்புதமான பரிசு கிடைத்திருக்கிறது. அதுதான் இந்த 33% இட ஒதுக்கீடு.

● திவ்யா பிரபாகர்:



திருமதி. சங்கீதா க்ருஷ்ணன் (பேராசிரியை): அரசியல் என்பது கடினமான - சவால்கள் நிறைந்த ஒரு துறை. ஒரு பெண் என்பவள் கல்விக்கூடங்களைத் தலைமைத் தாங்குவதாலோ அல்லது பெரிய கார்பரேட் நிறுவனங்களில் பெரிய பதவி வகிப்பதாலோ அவளது குடும்பம் அவ்வளவாக பாதிக்கப்படாது. ஆனால் அதே பெண் அரசியலில் முழுமையாக சடுபடும்பொழுது நிச்சயம் அவளது குடும்பமும், குழந்தைகளும் பாதிக்கப்படுவார்கள். 33% இட ஒதுக்கீடு என்பது அவசியமில்லை என்றுதான் நான் சொல்வேன்.

டாக்டர் வசுமதி வேதாந்தம் (கண் மருத்துவர்): நம்

நாட்டில் தொன்று காலம் தொட்டே பெண்களை அடக்கி வைத்துள்ளார்கள். பெண்களுக்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்களால் எந்த விதமான வேலைகளையும் சரளமாக, சவாலாக நிச்சயம் எடுத்துச் செய்ய முடியும். கிராமப் பஞ்சாயத்துக்களில்கூட அப்படித்தானே இன்று நடந்துகொண்டிருக்கிறது. பெண்களுக்கான இந்த இட ஒதுக்கீடு என்பது பெண்களுக்குக் கிடைத்துள்ள ஒரு நல்ல அருமையான வாய்ப்பு.

ரங்கநாயகி (வங்கி ஊழியர் மற்றும் தொலைக்காட்சி தொகுப்பாளர்): நம் நாட்டில், தற்போதைய சூழலில், பெண்கள் சின்னச் சின்ன விஷயங்களைக் கூடப் பெரும் போராட்டத்துக்குப் பிறகு பெற வேண்டிய சூழலில் தான் இருக்கிறார்கள். தான் விரும்பியவற்றை அடைய முட்களின் மீதுதான் நடை போட வேண்டியுள்ளதே தவிர ரோஜாக்கள் மீது அல்ல. பெண்களின் நிலை என்பது தானாகவே இந்த சமுதாயத்தில் உயரும் பொழுது, அதாவது போராடாமலேயே அவளுக்கு எல்லா விதமான விஷயங்களும் கிடைக்கப் பெறும் பொழுது இந்த மசோதாவை நீக்கிக் கொள்ளலாம்.



• டாக்டர் வசுமதி வேதாந்தம்

செல்வி.ரம்யாஸ்ரீ (கல்லூரி மாணவி): வீட்டில், கல்வியில், பல விதமான கலைகளில் பெண்கள் நன்றாக செயல்படும் பொழுது, அரசியலிலும் ஒரு பெண்ணால் நிச்சயம் திறம்பட செயல்பட முடியும். அரசியலில் ஒரு பெண் சொல்லி நாங்கள் கேட்பதா என்ற மனப்போக்கு ஆண்களிடம் வளரா மல் இருந்தால், இந்த இட ஒதுக்கீடு வெற்றி பெற்றுவிட்டதாகக் கொள்ளலாம். 33% இட ஒதுக்கீட்டிற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டங்கள் தேவையில்லையோ என்று கூடத் தோன்றுகிறது.



• ரம்யாஸ்ரீ

திருமதி. வேங்கடலட்சுமி சுப்ரமணியன்: (தனியார் நிறுவனத்தில் பணியாற்றுபவர்) : எந்த ஒரு துறையிலுமே தங்களது தனித் திறமையால் மட்டுமே ஒருத்தர் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமே தவிர, இட ஒதுக்கீட்டாலோ அல்லது வேறு சலுகைகளாலோ அல்ல. அப்படி இருக்க, அரசியல் துறையிலும் பெண்கள் தங்களது திறமையால் தங்களது குரலைக் கம்பீரமாகப் பாராளுமன்றத்தில் ஒலிக்கச் செய்யலாமே.. இந்த 33% இட ஒதுக்கீடு என்பது அவசியமே இல்லை. இது தேவையில்லாமல் அரசியல் ஆக்கப்பட்ட சமாச்சாரம். நாட்டில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதைப் பற்றி விவாதிப்பதை விட்டு விட்டு இந்த மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவுக்கென அரசியல் நாடகம் அரங்கேறியுள்ளது..



• வேங்கடலட்சுமி சுப்ரமணியன்

• ரங்கநாயகி



- நளினி சம்பத்குமார்

படித்ததில் ஜாலியான புத்தகம்:
நா. முத்துக்குமார் (திரைப்படப் பாடலாசிரியர்):

'புத்தகம் படிப்பது என்பதே ஒரு ஜாலியான விஷயம்தான். நாம் எப்படிப்பட்ட மனநிலைல இருந்தாலும் சரி, ஒரு புத்தகத்தை எடுத்துப் படிச்சோம்னா, நம்ம மனச கலகலப்பாக்கக் கூடிய சக்தி புத்தகங்களுக்கு இருக்கு. தமிழ்ல சுஜாதா, தேவன் எழுதற கதைகள்ல அப்படிப்பட்ட ஒரு கலகலப்ப உணர முடியும். ஆர்.கே. நாராயணன், குஷ்வந்த் சிங் இவங்க ரெண்டு பேரோட ஆங்கில நாவல்களை படிச்சோம்னா மனசு ரொம்பவே லேசாகிடும். சமீபத்தில் நான் படித்த ஒரு ஜாலியான, புத்தகம், இளம் எழுத்தாளரான கா.சி. சிவக்குமார் எழுதிய ஒரு சிறுகதைத் தொகுப்பு. அதுல ஒரு கதைல, ஈடு இல்லாததும், வீடு இல்லாததும்னும் ஆரம்பிச்சு ஒரு நாயை நாயகனா வெச்சுக் கதை எழுதியிருப்பார். முதல் நாயின் பெயர் ரொம்ப நீளமாக இருக்கும் என்பதால் அந்த நாயின் பெயரை சொல்லி யாருமே கூப்பிடத் தயங்குவார்கள். நம் பெயரை யாருமே கூப்பிட மாட்டேங்கறாங்களே என ஏங்கி ஏங்கியே அந்த நாய் செத்துப் போயிடும். இன்னொரு நாய்க்கு 'மணி' எனப் பெயர் சூட்டுவார்கள். ஆகா, நாய் என்பதும், இரண்டெழுத்து, மணி என்பதும் இரண்டெழுத்து என உற்சாகமாக வளைய வரும் அந்த நாய்...அது ஒரு ஜாலியான கதை.'


• நா.முத்துக்குமார்

"நம் பெயரை யாருமே கூப்பிட மாட்டேங்கறாங்களே என ஏங்கியே அந்த நாய் செத்துப்போயிடும்."


• ஸ்ரீலேகா பார்த்தசாரதி

ஜாலியோ ஜாலியான விளம்பரம்

நீனா (டி.வி தொகுப்பாளர்): விளம்பரங்கள்னாலே அது ஜாலிதாங்க.. அந்த க்ரியேட்டிவிட்டி இருக்கு பாருங்க ஒரு சில விளம்பரங்கள்ல அது நம்மளை அப்படியே கட்டிப்போட்டுடும். சின்ன வயசுல எப்பவோ பார்த்த சில விளம்பரங்கள் கூட இன்னிக்கு வரைக்கும் நம்ம மனசுல அப்படியே நிக்குதுன்னா அதுக்குக் காரணம் அந்த விளம்பரம் ஜாலியா கொடுத்த மெஸேஜ்தான். என்னை ரொம்ப கவர்ந்த விளம்பரம் எப்பவுமே fevicolக்கு வர்ற விளம்பரம்தான். அது எப்படிதான் அப்படி சிந்திச்சு, சிந்திச்சு இவ்வளவு அருமையா விளம்பரம் எடுக்கறாங்களோன்னு எல்லாரையும் வியக்க வைக்கும் வண்ணம் அவங்க விளம்பரம் எப்பவுமே அமையும்.

'பச்'னு மனசுல

ஒரு சின்னப் பொண்ணு தன்னோட பள்ளி விழா நாடகத்துக்காக மீசைய fevicol போட்டு ஒட்டிக்குவா, அந்த மீசை, அவ வளர வளர தானும் கூடவே இருக்கும், அது 'தலைமுறை கடந்த போதும் fevicol உங்க கூடவே ஒட்டி வரும். fevicol கொண்டு ஒட்டிய பொருளும் தலைமுறை தலைமுறையாக வரும்'ன்னு ஒரு மெஸேஜை ஜாலியா சொன்ன விளம்பரம்.. இந்த விளம்பரதுக்கு sticker award ன்னு பட்டம்





● நீலா

கொடுப்பேன் நான். என் மனசுல அப்படியே fevicol மாதிரியே ஒட்டிக்கிட்ட விளம்பரம் இது.

ஜாலியஸ்ட் பாட்டு:

ஸ்ரீலேகா பார்த்தசாரதி:(திரை இசைப் பாடகி):

ஜாலியஸ்ட் பாட்டுன்னு நான் நினைக்கறது நான் பாடிய 'திம்ஸு™ கட்ட' பாட்டு 'திருமலை' படத்துலேர்ந்து. இந்த பாட்ல வித்யாசாகர் இசை, விஜய் மற்றும் ஜோதிகா இவங்க ரெண்டு பேரும் சேர்ந்து கொடுத்த டான்ஸ் மூவ்மெண்ட்ஸ்ன்னு எல்லாமே சேர்ந்து கை கோர்த்து, இத ஒரு ஜாலியஸ்ட் பாட்டா ஆக்கிடுச்சுன்னுதான் சொல்லனும். அதேபோல 'சாமி' படத்துல நான் பாடிய 'கல்யாணம்தான் கட்டிக்கிட்டு' பாட்டு, 'ஒற்றன்' படத்துல வர்ற 'சின்ன வீடா வரட்டுமா' பாட்டு எல்லாமே நான் ரொம்ப ஜாலியாக எடுத்துக்கிட்டுப் பாடிய பாட்டுக்கள். அந்த காலத்து பாட்டுக்கள் சிலதை இன்னிக்குக் கேட்டாக்கூட ரொம்ப ஜாலியான மகிழ்ச்சியான ஒரு உற்சாகத்த நமக்கு கொடுக்கும். உதாரணமா, 'பம்பரக் கண்ணாலே' சந்திரபாபு குரல்ல அந்த பாட்டக் கேட்டா எவ்வளவு ஒரு ஜாலியான ஃபீலிங் ஏற்படுது.. எல்.ஆர். ஈஸ்வரியம்மா பாடிய 'எலந்த பழம்' பாட்டும் ஒரு ஜாலிலோ ஜிம்கானா பாட்டுதான்.'

- நளினி சம்பத்குமார்

ஒட்டிக்கிட்டா ஜாலி!

கடலில் ஒரு விவசாயம்

இட்டத்தட்ட விவசாயம்தான். ஆனா கடலில்... பாத்தி கட்றா மாதிரி கடல்ல கூண்டு கட்டணும். அப்புறம் விதை மாதிரி இறால் குஞ்சுகளைக் கூண்டில் விடணும். உரம் போடுறாப்போல தெனமும் அதுக்குத் தீனி போடணும். நல்லா உப்பின பிறகு அறுவடை மாதிரி அதை பிடிச்சு கரைக்குக் கொண்டு வரணும். இதுதாங்க கடலில் செய்யுற விவசாயம். இது என்ன புதுசுன்னு பாக்கிறீர்களா? எதுக்கு இப்படினு யோசிக்கிறீர்களா... சொல்றேன்.

திடீரென ஏற்படும் கடல் நீரோட்டத்தால் கன்னியாகுமரியிலிருக்கும் மீன்கள் கேரளாவுக்குப் போயிடும். கேரளாவிலிருந்து மீன்கள் கல்கத்தா போயிடும். மீனவர் பாடு திண்டாட்டம்தான். அதனால மீன்களை ஒரே இடத்துல நகராதபடி கடலில் வைத்து வளர்க்க முயற்சி பண்ணங்க!

முதல் முறையா இந்தியாவில் 2006-2007 ஆம் ஆண்டுகளில் இந்திய வேளாண்மைத் துறைத் துணையுடன் மத்திய கடல் மீன் ஆராய்ச்சி மையமும் இணைந்து சோதனைக் கூண்டு ஒன்றை உருவாக்கி விசாகப்பட்டினக் கடற்பரப்பில் வைத்தனர். இந்தக் கூண்டின் விட்டம் 15 மீட்டர். இதில் 50 கிராம் எடையில் 9 ஆயிரம் கொடுவாய் மீன் குஞ்சுகள், முதல் முறையாக விடப்பட்டன. 45 தினங்களுக்குள்ளாக இந்தக் கூண்டு, கடலில் ஆர்ப்பரித்து எழும் அலைக் கூட்டத்தால் இடம் பெயர்க்கப்பட்டதுடன், கூண்டில் இருந்த ஆயிரக்கணக்கான மீன்களும் கடல் பரப்புக்குச் சென்று விட்டன. அப்படியும் கூண்டில் எஞ்சியிருந்த மீன்களை அறுபது தினங்களுக்கு பின் பிடித்தபோது அவை 150 முதல் 350 கிராம் எடை இருந்தது. பின்னர், மேற்கு வங்காளத்தில் உள்ள கொராபூர் ஐ.ஐ.டி-யின் துணையோடு, மேம்படுத்தப்பட்ட மிதவைக் கூண்டுகள் உருவாக்கிக் கடலில் சோதனை செய்தபோது, அலைகளில் அடித்துச் செல்லமுடியாத வகையில் மிதவைக் கூண்டுகள் நிறுத்தப்பட்ட இடத்திலேயே நிலைத்து நின்றது.

கடலில், மிதவைக் கூண்டில் வளர்க்கப்படும் மீன் குஞ்சுகளுக்குக் கடலின் இயற்கைத் தன்மையில் எவ்வித மாற்றமும் இல்லாது இருந்தாலும் இரை தேட முடியாது. அடைக்கப்பட்டிருக்கும் கூண்டுக்குள், கடல் பரப்பில் இருந்து எவ்வித மீன் குஞ்சுகளும், உணவுப் பொருட்களும் உள்ளே போகமுடியாது. இத்தகைய கூண்டுகளில் வளர்க்கப்படும் மீன் குஞ்சுகளுக்குப் பெரிய பெரிய மீன்களின் சதைத் துண்டுகளும், சிப்பி வகைப் பூச்சிகளும் காலையும், மாலையும் போடப்படும். இத்தகைய மிதவைக் கூண்டுகள் தமிழகத்தில் முதல் முறையாக - மண்டபம், கன்னியாகுமரி சின்ன முட்டம் பகுதிகளில் மீனவர்கள் பதினோரு பேர்கள் கொண்ட குழுக்களால்



ஒவ்வொரு இடத்திலும் உருவாக்கப்பட்டன. இக்குழுக்களுக்கு மீன் துறை, மிதவைக் கூண்டையும் குஞ்சுகளையும் இலவசமாகவே வழங்கி இருக்கிறது. இந்தப் புதிய முயற்சியில் இவர்கள் காட்டும் முனைப்பில் வெற்றி நிச்சயம் என்கின்றனர். கடந்த நவம்பர் மாதம், கன்னியாகுமரி சின்னமுட்டம் மிதவைக் கூண்டில் விடப்பட்ட கல் இறால் குஞ்சுகளை அண்மையில் அறுவடை செய்தபோது, ஒவ்வொரு இறால் குஞ்சும் 1 முதல் 1.200 கிராம் எடை உள்ளதாக மொத்தம் 200 கிலோ எடையுள்ள இறால் மீன்கள் பிடிக்கப்பட்டன. இதன் இந்திய மதிப்பு ரூபாய் 2 லட்சத்து 40 ஆயிரம். சர்வதேச மதிப்பு இன்னும் அதிகம்.

முதல் அறுவடையிலேயே இவ்வளவு வருவாயா?! என வியந்த பராமரிப்புக் குழு உறுப்பினர்கள் மகிழ்ச்சிக் கடலில் நீந்தினர். அடுத்த இரண்டு மாதங்களுக்குப் பின் நடைபெறவிருக்கும் அறுவடையில் இக்குழு உறுப்பினர்கள் அடையப் போகும் ஆதாயம் எவ்வளவு என்பதை நாம் யூகிக்கவே இயலாது. இந்த மீன் விவசாயம் சென்னைக் கடற்கரைக்கும் பரவ இருக்கிறதாம்.

- த.இ.தாகூர்





எஸ்.எஸ்.சந்திரன்



குமரிமுத்து



எஸ்.வி.சேகர்

ஒரே ரகளையாப் போச்சு பாஸ்!

அரசியலில் இருக்கும் நகைச்சுவை நடிகர்களிடம் ''மேடைகளிடம் உங்கள் அலம்பல் எப்படி?'' என்றோம்.

முதலில் வாணிமகாலில் 'அல்வா' கொடுத்துக்கொண்டிருந்த எஸ்.வி.சேகர் மாட்டினார்.

''நகைச்சுவையாகவும், ஆபாசமில்லாமல் பேசும் அதே சமயம், சிரிப்புக்குப் பின்னே பொதிந்திருக்கும் நல்ல விஷயங்களையும் எடுத்துக் காட்டி, மக்களை சிந்திக்க வைக்க விரும்புகிறவன் நான். இப்படித்தான் ஒருமுறை சட்டமன்றத்தில் ஆவின் பால் தட்டுப்பாடு பற்றிப் பேச்சு வந்தது. நான் பேசும்போது, ''மக்களுக்குத் தேவையான அளவு ஆவின் பால் விநியோகம் செய்வது அரசின் கடமை. இப்போது தனியார் நிறுவனங்கள் கூட ஆவினுக்குப் போட்டியாக மார்க்கெட் டிங்கில் இறங்கியிருக்கிறார்கள். ஆவினுக்குத் தட்டுப்பாடு நீடித்தால், மக்கள் 'பால்' மாறி தனியார் நிறுவனங்களுக்கு வாடிக்கையாளர் ஆகிவிடப் போகிறார்கள்'' என்று சொன்னது மெல்லிய சிரிப்புடன் சிந்தனையையும் கிளறிவிடும் வகையில் இருந்தது. மிகச் சமீபத்தில் திருச்சியில், கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் துவக்க விழா முதல்வர் தலைமையில் நடந்தது. அப்போது ''என் பையன் தினசரி ஏதாவது கேள்வி கேட்டுக்கிட்டே இருப்பான். ஒரு முறை, 'டாக்டர்களை தெய்வம் என்று சொல்றாங்க. அவங்க ஏன் நின்றுகொண்டே ஆபரேஷன் செய்கிறார்கள்?' என்று என்னைக் கேட்டான். உடனே நான், 'தெய்வம் நின்று கொல்லும் அல்லவா?' என்றேன். இது ஜோக்காக இருக்கலாம். ஆனால், இங்கே (மேடையில்) ஒரு டாக்டர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். காப்பீடு திட்டத்தின் ஆபரேஷன்கள் மூலம் ஒன்றரை லட்சம் உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறார் இந்த டாக்டர்'' என்றவுடன் கைதட்டல் காதைப் பிளந்தது.

> ஒரு சமயம் ராஜ்சபாவில் பேசத்துவங்கும் முன் பாக்கெட்டிலிருந்து ஐம்பது ரூபாயை எடுத்து எல்லோருக்கும் தெரியும்படி ஆட்டினேன்.

அடுத்து, ''நீங்க மேடையில் ஏறினாலே ஒரே ரகளையாகிப் போய்விடுமாமே பாஸ்'' என்று எஸ்.எஸ்.சந்திரனைப் பிடித்தோம். ''மேடையை விடுங்க தம்பி. பாராளுமன்றத்தையே கலக்கியவன் நான். ஒரு சமயம் ராஜ்யசபாவில் பேசத் துவங்கும் முன் பாக்கெட்டிலிருந்த ஐம்பது

ரூபாயை எடுத்து எல்லோருக்கும் தெரியும்படி ஆட்டினேன். அவையே அமைதியாகிப் போனது. ''இந்த நோட்டில் தமிழுக்கு 13வது இடம் கொடுத்திருக்கீங்க. ஓ.கே. வெரி குட்.... ஆனால் இந்த அவையில் தமிழ்ல பேசக்கூடாது என்று சொல்றீங்க... இந்த நோட்டிலே இருக்கிற எல்லா மொழிகளிலேயும் பேசற வாய்ப்பு என்றைக்கு கிடைக்குதோ அன்றைக்குத்தான் 'இந்தியன்' என்று சொல்லிக் காலரைத் தூக்கிவிட முடியும்'' என்றவுடன் அவையில் சலசலப்பு. ''நல்லா சொன்னீங்க பாஸ்'' என்று பலர் பாராட்டினார்கள். ஒருமுறை திருச்சிக்குப் பக்கத்தில் மேடையில் பேசும்போது, ''தி.மு.க. இலவசமாக சைக்கிள் கொடுக்கிறது. அம்மா ஆட்சிக்கு வந்தால் இலவசமா 'மொபெட்' கொடுப்போம்'' என்றேன். ''உடனே கூட்டத்திலிருந்த ஒருவர் எழுந்து, ''அதுக்கு பெட்ரோல் யாரு கொடுப்பாங்களாம்?'' என்றார். ''சரியான... பயலா இருக்கியே... பெட்ரோல் தெருக் குழாயிலே வரும்டா'' என்று நான் சொன்னவுடன் கூட்டமே 'கொல்' ஆகிப்போனது.

கடந்த இருபது வருடங்களாக தி.மு.க. மேடைகளைத் தமது, ''பக்....பக்'' சிரிப்பால் குலுக்கி வருபவர் குமரிமுத்து. நாமும் அதே பாணியில், ''சொல்லுங்கண்ணா - உங்க அனுபவம் எப்படி?'' என்றோம். ''நீங்க நினைக்கற மாதிரி நான் மக்கள் சிரிக்க வேண்டுமென்பதற்காக நகைச்சுவை பிட்டு போடுபவனல்ல. கலைவாணர் என்.எஸ்.கே. பாணியில் அரசியல் எதிரிகளைக் குண்டூசியால் குத்தும் அளவுக்கு சிரிப்புடன், கொஞ்சம் சீரியஸாகவே பேசுபவன் தம்பி. என் மேலே ஒரு கேஸ் கூடக் கிடையாது. நாகரீகமானவன் பார்த்துக்கோங்க'' என்றவரிடம், ''விட்டுடுங்கண்ணா'' என்று ஓட்டம் பிடித்தோம்.

கடைசியாக, மேடையில் ''கலைஞரை ஒண்டிக்கு ஒண்டி கூப்பிட்ட செந்திலிடம், ''அம்மா புகழ் தொடர்ந்து பாடிக்கிட்டிருங்க'' என்று தூண்டினோம். ''தம்பி... கொஞ்சம் உடம்பு சரியில்லை'' என்று நழுவினார். திரையில் இவரோடு ஜோடியாகக் கலக்கிய கவுண்டமணிக்குத்தான் இப்போது உடம்பு சரியில்லை என்றால் இவருக்குமா?

- ஸ்ரீநி

தங்க மங்கை வித்யா

தங்க மங்கையாகத் தேர்வாகியிருக்கிறார் கோவை வித்யா. கூடவே 'தங்கம்' தொடரில் ரம்யா கிருஷ்ணனுடன் நடிக்கும் ஜாக்பாட்டும் அடித்திருக்கிறது வித்யாவுக்கு. ''சின்தால் நிறுவனம் நடத்திய 'சருமப் பாதுகாப்பு சவால்' போட்டியில், ''2,376 பேர் கலந்துகொண்டதில் தான் தேர்வாகியிருப்பது வியப்பளிக்கிறது'' என்கிறார் வித்யா. 2,376 பேரில் பெரும்பாலோர் கல்லூரிப் பெண்கள். நடுவராகப் பங்கேற்ற டி.பி.கஜேந்திரன், வித்யாவின் திறமையைப் பார்த்துப் பெரிய திரையிலும் நடிக்க வாய்ப்பளிப்பதாக உறுதி கூறியிருக்கிறார். வித்யாவுக்கு ஆரம்பமே இரட்டைக் குதிரை சவாரிதான்.

- முத்துபாண்டி



★ வித்யா

வாட்ஸ்அப் மேளை

'கி'ரேஸியைக் கேளுங்கள்', 'நடக்கு மென்பார் நடக்கும்' பகுதிகளுக்கு அடுத்த பக்கத்துல புகைப்படத்தைப் போட்டு பந்தா காட்டுறதுக்குப் பதிலா, கூடுதலா கேள்விகளையும், விரிவான ராசிப் பலன்களையும் வெளியிட்டிருக்கலாமே தலைவா!

- பி.கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி-1.

நீங்க பாட்டுக்குச் சிறந்த கடிதத்துக்குப் பரிசுன்னு அறிவிப்பை வெளியிட்டு விட்டீர்கள்... ஆனால், 'கல்கி'யோ திருநெல்வேலி மாவட்டச் சிறப்பிதழாக வந்துடுத்து. பிரசுரமான ஒவ்வொரு விஷயமும் முக்கியமாகவே பட்டு எதைப் பற்றி எழுதுவது? எதை விடுவதுன்னு தெரியாமல் ரொம்பக் குழப்பமாயிடுச்சுங்க.

-எஸ்.கோபாலன், நங்கநல்லூர்

ஏதேதோ அதீத கற்பனைகளை இதயத்துக்குள் பதுக்கி... அவற்றின் நிறைவேறலுக்கான முஸ்தீஃபாய் 'மகளிர்-33 சதஒதுக்கீடு மசோதா' அமலாக்கம் பெற முனையும் அரசியல்வாதிகளது நப்பாசையை... நயமாகவும், நாசூக்காகவும் சுட்டிக்காட்டியுள்ளது தலையங்கம்!

-ச.ஆ.கேசவன், இனாம்மணியாச்சி

பரிசுக் கடிதம்

கிழக்குப் பதிப்பகம் வழங்கும் ரூ.250 மதிப்புள்ள நூல்கள் பரிசு பெறும் கடிதம்:

தலையங்கம் படித்தேன். நேர்மையான முறையில், அரசியல் கட்சிகள், தகுதியான பெண் வேட்பாளர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்குச் சிறப்பாகச் செயல்பட பயிற்சி கொடுத்து, தேர்தலுக்கு முன்னரே தயார் செய்ய வேண்டும். அரசாங்கம் இதற்கெனச் சிறந்த கல்வியாளர்கள், அரசியல் அறிஞர்களைக் கொண்ட பயிற்சித் துறையையும் ஏற்படுத்தலாம். இப்படிப் பயிற்சி பெற்று வரும் பெண்கள், தேர்தலில் வெற்றி பெற்றால், சிறந்த அரசியல்வாதிகளாக மிளிர்வார்கள்.

- தார்சி எஸ்.பெர்னாண்டோ, விருகம்பாக்கம்.



சோலை என்னதான் சப்பைக்கட்டு கட்டினாலும், தி.மு.க.வுக்கு எதிர்ப்பே இருக்கக்கூடாது என்ற முதல்வரின் விருப்பம் அட்டகாசமாக அமலாகி விட்டது என்பதே நிஜம்!

-எஸ்.கௌரிலக்ஷ்மி, ஸ்ரீரங்கம்.

நெல்லை மாவட்டச் சிறப்பிதழில் - அத்தனை பக்கங்களும் 'தாமிரபரணி' தண்ணீர் போல தித்தித்தன.

-அ.முரளீதரன், மதுரை-3

'**நா**ஞ்சில் சினிலோக்'கின் கேமிரா கவிதைகள் பகுதி சூப்பரோ சூப்பர்!

- வள்ளியூர் ஏ.பி.எஸ். ரவீந்திரன்

வண்ணதாசனின், 'காணாமல் போகும்

வாய்க்கால்கள் சிறுகதை நெஞ்சை விட்டு அகலாத, நிறை அன்பைப் படம் பிடித்தாற்போன்ற பதிவை யும், தாக்கத்தினையும் ஏற் படுத்தியது!

- க.சுந்தர், நெய்வேலி

முண்டந்துறை சரணா லயம் பற்றிய கட்டு



சரணடைந்தோம்... சரணாலயத்தில்..!

ரையில் சில விவரங்கள் தவறாக உள்ளன. ராஜநாகம் அதிக மழை பெய்யும் பசுமை மாறா காடுகளில் வசிக்கும். மேற்குத் தொடர்ச்சி மலை, அஸ்ஸாம், இமயமலை அடிவாரம் போன்ற இடங்களிலும் காணப் படுகிறது. படத்தில் உள்ளது சிங்க வால் குரங்கு இல்லை. சாதாரணக் காட்டுக் குரங்கு.

-ரா.கிருஷ்ணசாமி, சென்னை-42.

திருநெல்வேலி மாவட்ட சிறப்பிதழ் களைப் படித்தவுடன் கலக்கலான கதம்ப மாலை அணிந்த திருப்தி ஏற்பட்டது.

- மீனாட்சி குருராஜ், திருச்சி.

மற்ற இயக்குனர்களிடமிருந்து வேறு பட்டுத் தெரிகிறார் என்பது கௌதமின் பேட்டியிலிருந்தே புரிகிறது. இன்னும் நிறைய சாதிக்க வாழ்த்துக்கள்!

- ரேவதிப்ரியன், ஈரோடு-1

கல்கி இணைய இதழில் சிறந்த கடிதம் எழுதி கிழக்குப் பதிப்பகத்தின் ரூ.250 மதிப்புள்ள நூல்களைப் பரிசாகப் பெறுபவர் பெங்களூரைச் சேர்ந்த சாரதா சுந்தரேசன்.

நெல்லையப்பர் ஆட்சியின் முழு விரிவாக்கமதை, 'பூலித்தேவன் பூமி வரை' டிஜிட்டல் தூரிகையோடு மனம் லயித்து, 'தாமிரபரணி ரைட்டர்ஸை' ஒருங் கிணைப்பாய் மண் வாசனையோடு நுகர்ந்து, பேட்டை நூற்பாலை களின் அவலங்கள் மற்றும் மரைன் என்ஜினி யர் மாணிக்கம் கடத்தப்பட்ட அவஸ்தையின் 111 நாட்களை படித்து மனம் கசிந்து, 'மகாகவி'யின் ஞானபூமி கடையத்தைக் கடந்து, சரணடைந்தோம் கூந்தகுளம் பறவைகளின் சரணாலயத்தில். தாமிரபரணியின் மண் மணம் கமழ்ந்த உன்னத கையேடாய்த் திகழ்ந்தது 'கல்கி' யின் சிறப்பிதழ்!

- மதுரை முருகேசன், தஞ்சாவூர்

ஜாலி போட்டி!



இந்த ஜாலி ஸ்பெஷலில் (அட்டை டு அட்டை) 'ஜாலி' என்ற சொல் எத்தனை முறை இடம் பெற்றுள்ளது என்பதை எழுதி, கல்கியைப் பற்றிய ஜாலி வாசகம் ஒன்றையும் எழுதி, கூப்பனை கத்தரித்து ஒட்டி அனுப்புங்கள்.

குலுக்கல் முறையில் இருவருக்குப் பரிசு வழங்கப்படும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

ஜாலி போட்டி

கல்கி வார இதழ்

47-NP, ஜவஹர்லால் நேரு சாலை,

ஈக்காடுதாங்கல்,

சென்னை-32.



HOW SAFE IS TIMBER AT YOUR HANDS?

Your Doors or Furniture will be at its best.

When you carryout the following processes.

Do not use wood immediately after cutting it from the log.



DRY THE TIMBER

Fresh cut timber, including teakwood, contains moisture upto 80%. When we use timber with such high moisture content, the wood starts deshaping in various ways. Ideal moisture content for retaining the shape of the timber is 14% to 18%. Natural Seasoning or Air-drying does not bring down the moisture content to less than 30%, even after 6 months. KILN drying as per IS Code 1141, alone can bring down the moisture content to the ideal level of 14% to 18%.

PROTECT THE TIMBER

While it is common to apply by brush wood preservative oil, maximum durability is achieved under Pressure Impregnation Method by injecting CCB Chemicals into the wood, as per IS Code 401.

MAYURAM TIMBER

257, GST Road, Tambaram, Chennai - 600 045

Phone : 22415297 / 22411261 / 22413257

E-mail : mayuramtimbers@sancharnet.in website : www.mayuramtimbers.com

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.